படைப்பு
ஊற்று: 1 | நதி: 1 | மே 2018 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## எந்த எழுத்தாளரின் விசிறியாகவும் நான் இருந்ததில்லை

எழுத்தாளர் பொன்னீலனுடன் நேர்காணல்



"ஒவ்வொரு அனுபவமும் பாடமாகிறது. ஆனால்..."

– கவிஞர் சுகனின் மனைவி சௌந்தரவதனாவின் அனுபவப் பதிவுகள்



"நொய்யல் இன்று" நூல் விமர்சனம்

– பொள்ளாச்சி அபி



பாஷோவின் பழைய குளம்

– ஹைக்கூ குறித்த தொடர்

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்
ஊற்று: 1 | நதி: 1 | மே 2018

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாக மேலாளர்:
**சகா (சலீம் கான்)**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**ஐசக்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

இணையதள முகவரி:
www.padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே.
கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

**'எந்த எழுத்தாளரின் விசிறியாகவும் நான் இருந்ததில்லை'**
• எழுத்தாளர் **பொன்னீலனுடன்** நேர்காணல் - பக். 4

**என் கேள்விக்கென்ன பதில்?**
• வினாவும் செப்பும் - பக். 13

**ஈரிருநாள் இலங்கை**
• பயணக்கட்டுரை - பக். 15

**'போராடாமல் தமிழ்ச் சூழலில் எழுதுவது சாத்தியமற்ற ஒன்று'**
• கவிஞர்கள் கலந்துரையாடல் - பக். 18

**'ஒவ்வொரு அனுபவமும் பாடமாகிறது.. ஆனால் சில கொடுமையான அனுபவங்கள் சித்திரவதை செய்கின்றன'**
• கவிஞர் சுகனின் மனைவி சௌந்தரவதனாவின் அனுபவப் பதிவுகள் - பக். 23

**ஞாபகம் வருதே..**
• கலகல கருத்து - பக். 32

**பாஷோவின் பழைய குளம்**
• ஹைக்கூ குறித்த தொடர் - பக். 35

**தகவு பதில்கள்** - பக். 40

**சித்திஜுனைதாபேகம்**
• பெண்மொழி - பக். 46

**நொய்யல் இன்று**
• நூல் விமர்சனம் - பக். 49

**'என் மகள் சைரன் காரில்தான் செல்வாள்'**
• சாமானியனின் சரித்திரம் - பக். 59

**'மீன்கள் உறங்கும் குளம்' - நூல் வெளியீடு**
• நடந்ததும் கடந்ததும் - பக். 60

## தமிழ் இலக்கிய நிகழ்வுத் துளிகள் 2017

• நிகழ்வுகள் - பக். 62

## வாழி!

• தலையங்கம் - பக். 63

## சிறுகதைகள்

### கேளிக்கை அரங்கு-ரோம்

• பிரேமபிரபா - பக். 9

### படகு மரம்

• மொழிபெயர்ப்பு : சிறுமேதாவி - பக். 28

### மகாமசானம்

• புதுமைப்பித்தன் - பக். 42

### கானல் வரி

• ஜி.சிவக்குமார் - பக். 54

### கிழிக்கவே முடியாத தேதி

• கவிஜி - பக். 58

## கவிதைகள்

### மனதின் வளையம்

• தேன்மொழி தாஸ் - பக். 14

### ரொட்டி

• மொழிபெயர்ப்பு : சாந்தா தத் - பக். 22

### பயணம் செய்யும் நூறு ரூபாய் நோட்டு

• லக்ஷ்மி மணிவண்ணன் - பக். 27

• றாம் சங்கரி - பக். 41

### ரோஜாத்துயரம்

• நிலாகண்ணன் - பக். 48

### நாட்டுப்புறப் பாடல்

• புஷ்பவள்ளி - பக். 53




நேர்காணல்

• செம்பை முருகானந்தம்

# எந்த எழுத்தாளரின் விசிறியாகவும் நான் இருந்ததில்லை



எழுத்தாளர் **பொன்னீலனுடன்** நேர்காணல்

**சா**கித்திய அகாதமி விருது பெற்றவரும் சாகித்திய அகாதமியின் தேர்வுக்குழு உறுப்பினருமான எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் இந்திய முற்போக்கு எழுத்தாளர்களின் முகவரியாகத் திகழ்பவர். மானுடச் சமுதாயத்தின் அடிநாதமாக விளங்கும் மனிதநேயம் நிரம்பிய மனிதர், படைப்பாளர். மார்க்சியச் சிந்தனையும் காந்திய அணுகுமுறையும் கொண்ட அன்பாளர். அண்ணாச்சி என்று எழுத்தாளர்களாலும் தோழர்களாலும் அழைக்கப்பெறும் பொன்னீலன் அவர்கள் தம் நேர்காணலில் நம்மிடம் உளந்திறந்து பகிர்ந்துகொண்டார்.

***தாங்கள் எழுத்துத்துறைக்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது குடும்பச் சூழலா? நட்புச் சூழலா?***

என் குடும்பச் சூழலாக இருக்கலாம். என் தாயார் அழகிய நாயகி அம்மாள் தீவிர இலக்கிய உபாசகர். சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் இவற்றை ஆழ்ந்து கற்றவர். மாலை நேரங்களில் அவர் பாடிய பக்தி இலக்கியப் பாடல்களே எங்கள் தாலாட்டுகளாக அமைந்தன. நாட்டுப்புற இலக்கியங்களையும் ரசித்து வாசித்துப் பாடுபவர் அம்மா. என் தாயாரின் இந்த இலக்கிய ஆர்வம் என்னை எழுதத் தூண்டியிருக்கலாம். தன்

அறுபது வயதில் கவலை என்னும் புகழ்பெற்ற நூலை எழுதியவர் அவர்.

என் தந்தையார் சிவ.பொன்னீலவடிவு, தான் பள்ளியில் படிக்கிற காலத்திலேயே பிரம்மசமாஜி ஆனவர். காலம் முழுவதும் அந்த வாழ்வில் தொடர்ந்தவர். கதர் தவிர வேறுஎதையும் அணியாதவர். என் உருவாக்கத்தில் அவர் பங்கு மிக அதிகம். அவர் மேன்மை கருதியே அவர் பெயரை என் புனைப்பெயராக வைத்திருக்கிறேன்.

**முதல் சிறுகதை எழுதிய தருணங்களை நினைவுகூருங்களேன்...**

என் முதல் சிறுகதை “பூ பறிப்பு”. நானும் என் உறவுப் பெண்களும் ஒருநாள் குளத்துக்குக் குளிக்கப் போனோம். என் மாமா மகள் ஒருத்தி தாமரைப் பூ வேண்டும் என்றாள். பூவைப் பறித்துக் கரைக்குக் கொண்டுவந்தபோது , ஒரு நடுத்தர வயது மனிதர் என் கையில் இருந்த பூவைப் பிடுங்க முயன்றார். குளத்தில் உள்ள பூக்களை நான் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன், அது எனக்கே உரிமை என்றார். அவரோடு கடுமையாக எதிர் விவாதம் செய்தேன். அந்தச் சம்பவம்தான் என் முதல் சிறுகதை.

**உங்கள் எழுத்து வாழ்க்கையை எப்படித் திட்டமிட்டுக் கொண்டீர்கள்?**

நான் அடிப்படையில் கல்வித்துறைப் பணியாளன். பகல்நேரம் கல்விப் பணியில் தீவிர அக்கறை காட்டினேன். மாலை மற்றும் விடுமுறை நேரங்களில் கலை இலக்கியப் பெருமன்றப் பணிகளில் ஈடுபட்டேன். ஆக சொந்த எழுத்து மற்றும் வாசிப்புப் பணிகள் இன்னொரு பக்கமாக என் வாழ்வு நகர்ந்தது. மாலை ஏழு மணியிலிருந்து பத்து மணி வரை என் சொந்த நேரம். முடிந்த அளவு அதை இலக்கியப் பணிக்கே ஒதுக்கினேன்.

ஓய்வு பெற்றபின் காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை இலக்கியப் பணிக்காக ஒதுக்கியிருக்கிறேன். நான் பெரும்பாலும் கையால் எழுதுவதில்லை. கிட்டத்தட்ட முப்பது வயதிலிருந்து இன்றுவரை நான் சொல்லச் சொல்ல எழுதுவதற்கு உதவியாளரைப் பயன்படுத்திவருகிறேன்.

**விருதுகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

விருதுகள் படைப்பாளியை வாசகர் வட்டத்துக்கு வெளியே அறிமுகப்படுத்தும். வெகு





மக்களிடையே செல்வாக்கும் புகழும் ஏற்படுத்தித் தரும். சில விருதுகள் பணமும் தரும்.

**உங்கள் மனங்கவர்ந்த எழுத்தாளர் குறித்து..**

ஜெயகாந்தனிலிருந்து இன்றைய மலர்வதி வரை, கவிஞர் கே.என்.எஸ்.கலைவாணன் வரை பலருடைய படைப்புகள் என்னைக் கவர்ந்திருக்கின்றன. எந்த எழுத்தாளரின் விசிறியாகவும் நான் இருந்ததில்லை.

**தமிழில் தற்போதைய சிறுகதை உலகம் எப்படி இருக்கிறது?**

இன்றைய தமிழ்ச் சிறுகதை உலகம் கவிதையோடு போட்டி போட்டுக்கொண்டு சமூக ஆழங்களையும், தனிமனித மன ஆழங்களையும் துளாவிச் செய்திகள் சேகரித்துக் கலையாக்கித் தருகின்றன. தீவிர படைப்புகள் சமூகச் சிந்தனையை விசாலப்படுத்துகின்றன. சமூகத்தை நெகிழ்விக்கின்றன. மானுட உறவுகளைப் பெருக்குகின்றன.

**தற்போதைய தங்களது அரசியல் கண்ணோட்டம் என்னவாக இருக்கிறது?**

பிரெஞ்சுப் புரட்சி தந்த மூன்று இலட்சியங்கள் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம். இவை எந்தெந்த அரசியல் கட்சிகளிடம் ஓரளவுக்காவது இருக்கிறதோ அந்த அரசியல் கட்சிகளையெல்லாம் எனக்குப் பிடிக்கும்.

**தமிழில் இயக்கம் சார்ந்த அமைப்பு சார்ந்த எழுத்து குறித்துக் கூறுங்களேன்...**

இயக்கம் சார்ந்த எழுத்துக்கள் எழுத்தாளருக்கு அரசியல் விசாலத்தையும், சமூகப் பார்வையையும் தரும். பாரதியும், பாவேந்தரும் இயக்கம் சார்ந்த படைப்பாளிகளே. ஆனால் ரகுநாதன் சொல்லுவது போல கட்சி அரசியலுக்கோ, கொள்கை அரசியலுக்கோ படைப்பாளர் அடிமைப்பட்டுவிட்டால் மனதில் அதிகாரமும் பொய்மையும் புகுந்துவிடும். பொய்மையும் அதிகாரமும் இருக்கும் இடங்களில் இலக்கியம் வாழாது. காலத்தைப் பிரதிபலிக்கும், அதே போல் சமூகத்தைப் பிரதிபலிக்கும் படைப்புகளை அரசியல் தொடர்புகளால் உருவாக்கலாம்.

**சமகாலத்தைப் பிரதிபலிக்கும் எழுத்தாளர்களின் படைப்பு, கருத்துச் சுதந்திரம் எவ்வாறிருப்பதாகக் கருதுகிறீர்கள்?**

இன்றைய வகுப்புவாதச் சூழலில் படைப்பாளிக்குச் சுதந்திரம் இல்லைதான். இன்று நம் நாட்டில் இருக்கும் அரசியல் சூழலால் எழுத்தாளர்கள் மேலும்மேலும் சுதந்திரம் இழந்து வருகிறார்கள். பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்! மானுடக் குரலை உரக்கக் கூவக் காலந்தோறும் படைப்பாளிகள்



தங்கள் சுகத்தையும், வாழ்வையும் தியாகம் செய்தே வருகிறார்கள்.

**சமூக அரசியல் நிகழ்வுகளை விமர்சனத்துக்குள்ளாக்கும் படைப்பாளிகளின் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. இப்போக்கானது மானுடத்தையும் படைப்பாளியையும் எந்த நிலைக்கு ஆட்படுத்துமெனக் கருதுகிறீர்கள்?**

சமூக அரசியல் நிகழ்வுகளை விமர்சனத்துக்குள்ளாக்கும் படைப்பாளிகளின் உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்பது அப்பட்டமான உண்மைதான். என்றும் இதுதான் உண்மை. வகுப்புவாதப் போக்கானது அடிப்படை சுதந்திரங்களில் ஒன்றான கருத்துச் சுதந்திரத்தைக் கொன்றுவிடுகிறது. இது சமூகத்தை முடக்கிவிடுகிறது. ஜனநாயக மனிதநேயச் சக்திகள் இந்த நிலைமையை மக்களிடம் விளக்கி மக்களை விடுதலைக்காக அணிதிரட்ட வேண்டும்.

**கௌரிலங்கேஷ் உள்ளிட்டோர்தம் கொலை... இந்தியாவில் கருத்து, முற்போக்கு, பொதுவுடைமைச் சிந்தனைகள் எத்தகைய நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

இன்று வகுப்புவாத அரசியலின் தீவிரக் குழுக்கள் சில பலாத்கார உள் இயக்கங்களாக உருவாகியிருக்கின்றன. கௌரி லங்கேஷ் முதலியோரின் கொலைகள் இதைத்தான் காட்டுகின்றன. ஜனநாயகம் இன்று பலவீனப் பட்டுவிட்டது. அண்ணல் அம்பேத்கார் அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்கத்தின்போதே இந்த ஆபத்தைச் சுட்டிக்காட்டியிருப்பதாகப் பல அறிஞர்கள் கூறிவருகிறார்கள்.

**தங்கள் எழுத்துக்களின் நோக்கங்கள் அதனதன் இலக்கைச் சென்றடைந்துவிட்டதாக நிறைவு கொள்ள முடிகிறதா?**

நோக்கங்களும், லட்சியங்களும் இரண்டு நிலைக் கொண்டவை. ஒரு படைப்பை எழுதும்போது அதை முடிக்கவேண்டும் என்பது ஒரு நோக்கம். உடனடி நோக்கம் அது. ஆனால் படைப்பின் உள்ளிருக்கும் இன்னொரு நோக்கம் என்ன? படைப்பினுள் சுடர்விட்டு, சமூகத்தை என்றென்றும் வழி நடத்தும் கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பது நிரந்தர நோக்கம்.

முதல் நோக்கம் சென்றடைந்துவிட்டது என்று சொல்லலாம். இரண்டாவது நோக்கம் காலத்தோடு தொடர்புடையது. காலத்தோடு வளரக்கூடியது.




**தங்கள் நாவல்களுள் தங்களுக்கு மிகுந்த எழுச்சி தருவதாக எதைக் கருதுகிறீர்கள்?**

இது தீவிர வாசகர்களைக் கேட்க வேண்டிய கேள்வி. என்னுடைய பெரிய நாவல்களாகக் 'கரிசல், புதிய தரிசனங்கள், மறுபக்கம்' மூன்றையும் கருதுகிறேன். உள்ளடக்க அளவிலும், வடிவ அளவிலும், படைப்பாளியின் அனுபவ அளவிலும் மூன்றுமே வேறு வேறானவை என்பது என் எண்ணம்.

**'மறுபக்கம்' நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்பும், வெளியீடும் தங்களுக்குள் எத்தகைய மனநிலையை உருவாக்கியுள்ளன?**

மறுபக்கம் நாவல் மொழிபெயர்ப்பு அருமையாக வந்திருக்கிறது என அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில் பேசிய மூன்று அறிஞர்கள் சொன்னார்கள். மிகுந்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது.

பட்டாசு போல வெடிக்கும் படைப்புகளும் உண்டு. வாடா விளக்குகள் போலச் சமூகத்தில் நின்று எரிந்து ஒளி கொடுக்கும் படைப்புகளும் உண்டு. 'மறுபக்கம்' இரண்டாவது வகையைச் சார்ந்தது என்று நம்புகிறேன்.

**தற்போது தங்களின் எழுத்து குறித்து...**

இப்போது நான் விட்டகுறை தொட்ட குறையாகச் சிலவற்றைச் செய்து கொண்டிருக்கிறேன்.

**ஒரு மூத்த எழுத்தாளராகத் தற்போதைய எழுத்தாளர்களுக்கான ஆலோசனை...**

காலம் கணந்தோறும் வளர்ந்து செல்லும் ஒன்று. புதிய காலம் புதிய எழுத்தாளர்களுக்கு ஆயிரம் புதிய வாய்ப்புகளை விரித்துத் தரும். அந்தந்தக் காலத்தின் குரலை வெளிப்படுத்தும் படைப்புகளைப் புதியவர்கள் படைக்கலாம். சமூகத்தைக் கூர்ந்து கவனிக்கணும். சமூகப் பிரச்சினைகள், மக்கள்மொழி, வாழ்வின் லட்சியங்கள் என்னும் முப்பரிமாண உணர்வோடு கவனித்து எழுத வேண்டும்.

(புகைப்படங்கள் எழுத்தாளர் பொன்னீலன் முகநூலிலிருந்து கட்டுரையாளரால் பெறப்பட்டன.)

• பிரேமபிரபா
ஓவியங்கள்: அழ. ரஜினிகாந்தன்
கொ.வடிவேல்

## உலக அதிசயங்களும் உடன் வந்த கதைகளும்

# கேளிக்கை அரங்கு–ரோம்



ஒலிவியாவிற்கு அந்த இரவு நெடிய இரவாக இருந்தது. எவ்வளவு முயன்றும் தூங்க இயலாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். எழுந்து வந்து மொட்டை மாடியில் நின்று பார்த்தவளுக்கு மேகங்களும் மெதுவாக மிதந்து போய்க் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அதைப் பார்த்து ரசித்தபடி சிதறிக் கிடந்த விண்மீன்களை நேரக் கழிப்பிற்காக விளையாட்டாக எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் திடீரென்று அவளின் தலைக்கு மேல் வெகு சமீபத்தில் கடற் பறவைகள் கூட்டம்கூட்டமாகப் பறந்து சென்றன. அவைகள் எழுப்பிய கீச்சுக் குரலால் நிலை தடுமாறி

எண்ணிக்கைகளை மறந்து போன ஒலிவியா, தனக்குள் சிரித்தபடி முதலிலிருந்து மீண்டும் விண்மீன்களை எண்ணத் தொடங்கினாள்.

அடிவானத்தில் இருந்து கசிந்துருகிய பொன் வெளிச்சம் நம்பிக்கை அளிக்கும் விடியலின் மகிழ்ச்சியான முகவுரையாகத் தெரிய, தன் பார்வையை மெல்லக் கீழிறக்கி வலது கையால் தன் நிறைமாத வயிற்றினை வாஞ்சையுடன் ஒரு முறை தடவிக் கொடுத்தாள்.

மார்க்கஸ் முதன்முதலாக அவளுக்கு வாங்கிக் கொடுத்த சந்தன நிற ஆடையைத் தேர்ந்தெடுத்தாள். இடுப்புப் பகுதியில் மட்டும் தையலைச் சிறிது பிரித்தவள் பலமுறை அதை அணிந்து நிலைக் கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டாள். குறைந்த அளவு ஒப்பனையுடன் இறுதியாக டோகா என்ற பெரிய சால்வையைப் போர்த்திக் கொண்டாள். அவளின் நிறைமாத வயிறு இப்போது அவ்வளவாகத் தெரியவில்லை என்பதை மறுபடியும் கண்ணாடி முன் நின்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள்.

சிறிது தூரம் நடந்தாலும் மூச்சிறைக்கும் நிறைமாதக் கர்ப்பிணி ஆனதால் நான்கு மணி நேரத்திற்கு முன்பாகவே விளையாட்டு அரங்கை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். சாலையில் எதிர்படுவோர்களிடம் எல்லாம் இன்று கேளிக்கை அரங்கில் தன் கணவன் மார்க்கஸ்தான் போட்டியிடப் போவதாகப் பெருமையாகக் கூறினாள்.

கேளிக்கை அரங்க நுழைவாயிலை அடைந்தவுடன், பருத்த அவளின் வயிற்றினைப் பார்த்த காவலன் “அம்மணி மன்னிக்க வேண்டும், நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்களுக்கு இங்கு அனுமதியில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா?” என்றான்.

சிறிதும் நம்பிக்கையை இழக்காமல் ஒலிவியா தன் ஆள் காட்டி விரலில் அணிந்த மோதிரத்தை எடுத்து யாருமறியாமல் காவலனின் உள்ளங்கைகளில் திணித்து, இரு கைகளைக் குவித்துப் பணிவாக அவனை வணங்கி “அன்பான காவலரே, என் கணவன் மார்க்கஸ் இன்றைய போட்டியில் கலந்துகொள்ளப் போகிறார். அவரை நான் பார்க்கப்போகும் இந்த அரிய சந்தர்ப்பம் என் வாழ்க்கையின் கடைசி வாய்ப்பாகக் கூட இருக்கலாம். என்னைத் தயவு செய்து அனுமதியுங்கள். அவரைப் பார்த்து நான் ஊக்குவிக்க வேண்டும்” என்று கண்களில் தளும்பிய நீருடன் மன்றாடினாள்.

அவளின் பரிதாபமான நிலைமையைப் பார்த்த காவலாளி மனம் இறங்கி “அம்மணி, அப்படி எனில் நீங்கள் நான்காவது மாடிக்குத்தான் போக வேண்டும். இந்த நிலைமையில் உங்களால் அத்தனை படியேறச் சாத்தியப்படுமா?” என்று மிகுந்த அக்கறையுடன் ஒலிவியாவிடம் கேட்டான்.

துளியும் தாமதிக்காமல் “நிச்சயமாக என்னால் முடியும் காவலனே. என் நன்றியை உனக்குச் சமர்ப்பிக்கிறேன்” என்று நுழைவுச் சீட்டை அவனிடம் இருந்து பெற்றுக்கொண்டு மெதுவாகப் படியேற ஆரம்பித்தாள் ஒலிவியா.

ரோமில் 72ஆம் ஆண்டு தொடங்கி 80ஆம் ஆண்டு வாக்கில் கட்டி முடிக்கப்பட்ட திறந்தவெளிக் கேளிக்கை அரங்கில் ஒரே நேரத்தில் குறைந்தது 55000 பார்வையாளர்கள் நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியும். மொத்தம் 80 நுழைவாயில்கள். அதில் ஒரு நுழைவாயில் அரசருக்கான பிரத்யேக வாசல். அரங்கின் மையப் பகுதியில் மணலைப் பரப்பி வைத்திருப்பார்கள். பாதாள அறையில் போட்டிக்கான மிருகங்களும், ஆயுதங்களும் இருக்கும். 48 மீட்டர் உயரமான அரங்கம் நான்கு அடுக்குகளைக் கொண்டது. மேல் அடுக்கு தாழ்ந்த மக்களுக்காகவும், கீழ் அடுக்கு அறிவாளிகளுக்கும், செல்வந்தர் களுக்காகவுமானது. நீள் வட்டத்தில் இருக்கும் அரங்கின் அதிகபட்ச விட்டம் 188 மீட்டர், குறைந்தபட்சம் 156 மீட்டர்.

இறந்தவர்களின் ஈமச் சடங்கினைக் கௌரவப்படுத்துவதற்காக ஆரம்பித்த வீர விளையாட்டுக்கள் பிற்காலங்களில் போட்டிக் காகவும், பரிசுத் தொகைக்காகவும் நடந்தேறியது. ஜூலியஸ் சீசர் அவர்தம் மகள்

ஜூலியா இறந்த பிறகு அவளின் இறப்பினைக் கௌரவப்படுத்துவதற்காக 320 வீர விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதாகவும், அந்தப் போட்டிகளில் இறந்தவர்களின் ஆவி அவர் மகளின் பாதுகாப்பிற்காக உடன் சென்றதாகவும் நம்பினார்கள்.

அந்தக் காலங்களில் ரோம இளைஞர்களின் அதிகப்படியான வாழ்க்கைக் காலம் இருபது வயதில் இருந்து முப்பது வயது வரைதான். ரோம இளைஞர்கள் இறப்பதற்காகவே பிறந்தவர்கள். போட்டிக்காகவும், பரிசுத் தொகைக்காகவும், மற்றவர்களின் முன் தாம் பெருமையாகப் பேசப்படுவதற்காகவும் அதிகபட்ச இளைஞர்கள் விளையாட்டு வீரர்களாகப் பயிற்சி எடுத்துக்கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

மார்க்கஸோ தன் வீட்டு வறுமையை மாற்றுவதற்காகவும், தன் மனைவி ஒலிவியாவை மகிழ்ச்சியுடன் வாழ வைப்பதற்காகவும், தன் வயதான விதவைத் தாயிற்கு எந்தவிதக் குறைகளும் இல்லாமல் காப்பாற்றுவதற்காகவும், கப்புவா என்ற வீரர்கள் பயிற்சி முகாமில் சேர்ந்தான். தினமும் கடுமையான உடற் பயிற்சிகளை மேற்கொண்டான்.

பயிற்சி முகாமில் கட்டுப்பாடான மரக்கறி உணவை உண்ணும்போதெல்லாம், அவன் அம்மா ஆசையுடன் அவனுக்காகவே நல்ல சதைப்பற்றான மீனைத் தேர்ந்தெடுத்து சுத்தப்படுத்திக் குழைத்து, புளித்த வெனீகரிட்டு சூரிய ஒளியில் நன்றாகக் காயவைத்து குறு மிளகுப் பொடி தூவிக் கொடுத்ததை நினைத்துக் கொள்வான்.

சிறு வயதாக இருக்கும்போதே தன் தந்தையை வீர விளையாட்டில் இழந்த மார்க்கஸுக்கு அம்மாதான் எல்லாமுமாக இருந்தாள். கப்புவா செல்லும்போது தனக்குத் தானே பிதற்றிக் கொண்டிருந்த அம்மாவைத் தேற்றுவதற்கு மார்க்கஸ் மிகவும் சிரமப்பட்டான். அரை மனதுடன் அனுமதி கொடுத்தவள், அவன் தெருமுனையைக் கடக்கும்வரை ஒலிவியாவுடன் வாசலிலேயே நின்று கையசைத்துக் கொண்டிருந்தாள்.

கேளிக்கை அரங்கின் ஆரவாரத்திற்கு இடையே மத்திய அலங்கார மேடையை நோக்கி வண்ண ஆடைகளில், ஜால வித்தைக்காரர்களும், கழைக் கூத்தாடிகளும், இசை வல்லுநர்களும் வீரர்களைத் தொடர்ந்து பவனி வர, பார்வையாளர்கள் வரிசையில் இருக்கும் இளைஞர்கள் இசைக்கு ஏற்ப தத்தம் இருக்கைகளில் இருந்து கைகளைப் பரவசத்துடன் தட்டி அனைவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

மத்திய மேடையை வீரர்கள் நெருங்கி வர, அவர்களுடன் நுழைவாயிலில் இருந்து அணிவகுப்பாக வந்தவர்கள் முறையாகக் கலைய ஆரம்பித்தார்கள். வெகு விமரிசையான ஆரம்ப நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, வீர விளையாட்டில் பங்கேற்கும் வீரர்களின் உடல்நிலை அரண்மனை வைத்தியர்களால் பரிசோதிக்கப்பட்டு, போட்டியாளர்களுக்கான ஆயுதங்களும் தீர்மானிக்கப்பட்டன.

இறுதிக்கட்டமாக உறுதிமொழி. “என்னைச் சங்கிலியால் பிணைப்பதற்கும், மார்பில் முத்திரை பதிப்பதற்கும், இரும்பு ஆயுதங்களால் காயப்படுவதற்கும், என் சுய விருப்பத்திற்கு அப்பாற்பட்டு நான் எதிர்கொள்ளும் உடல் வேதனையைத் தாங்கிக் கொள்வதற்கும், நான் உங்களின் தயவினால் உண்ட உணவிற்கும், பருகிய நீருக்கும் என் ரத்தத்தால் முழு மனதுடன் ஒப்புதல் அளிக்கிறேன்” என்று மார்க்கஸ் முதலில் உறுதிமொழி எடுத்துக் கொண்டான். அவனைத் தொடர்ந்து பல வீரர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

மார்க்கஸ் பதப்படுத்தப்படாத முரட்டுத் தோலினால் ஆன அலங்காரப் பட்டையை மார்பிற்குக் குறுக்காக அணிந்திருந்தான். இறுக்கமாகக் கட்டிய மஞ்சள் நிற இடுப்புக் கச்சையின் இரு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டு இருந்தது கவர்ச்சியான சிகப்புக் குஞ்சங்கள். அடிப்படைப் பாதுகாப்பிற்கான எந்தக் கவசங்களும் அணியாமல் ஒரேயொரு குத்து வாளை மட்டும் கையில் ஏந்தியபடி பார்வையாளர்கள் முன் வந்து நின்றான் மார்க்கஸ்.

பிறகு வந்தான் அகஸ்டோ என்ற மற்றொரு வீரன். முழுப் பாதுகாப்புடன் இறுக்கமான உலோக உடையுடன் இருந்தான். முட்கள் பதித்த உலோக உருண்டையில் இணைத்துள்ள சங்கிலியினை ஒரு கையால் பிடித்துக்கொண்டு வேகமாகச் சுழற்றியபடி பார்வையாளர்களைப் பார்த்து மிருகமெனக் கர்ஜித்துக்கொண்டே மார்க்கஸை எதிர்நோக்கி வந்தான்.

இந்தப் போட்டியில் மார்க்கஸ் வென்றால் பரிசுத் தொகையுடன் அரசாங்கப் பதவியும் கிடைக்கும். தராசின் அடுத்த தட்டத்தில் இருக்கும் விகாரமான மரணம் அவனைத் துளியும் அச்சுறுத்தவில்லை. மனம் முழுவதும் விதவைத் தாயையும், மனைவி ஒலிவியாவையும் நினைத்துக் கொண்டான்.

பார்வையாளர்களோ "அடி, குத்து, கொல்லு'' என்று மிகுந்த சப்தத்துடன் வெறித்தனமாகக் குரல் எழுப்பிக்கொண்டு இருந்தார்கள். இறுதியாகப் போட்டியாளர்கள் இருவரும் களம் இறங்கினார்கள்.

தன்னைத் தற்காத்துக் கொள்வதிலேயே மார்க்கஸ் அதிக சிரமத்துடன் தான் கற்றறிந்த அனைத்து வித்தைகளையும் ஒத்திகைப் பார்க்க, மிருக வெறியுடன் சண்டையிட்டான் அகஸ்டோ. எவ்வளவு போராடியும் ஒரு மணி நேரத்திற்கு மேல் மார்க்கஸ்ஸால் அகஸ்டோவைத் தாக்குபிடிக்க முடியவில்லை. மயங்கி விழுவதும், மீண்டும் தள்ளாடியபடி எழுந்து அகஸ்டோவை எதிர் கொள்வதுமாக இருந்தான்.

வீர விளையாட்டின்போது அடிபட்ட வீரர்கள் செயலிழந்து தரையில் விழுந்து இறக்காமல் வெகுநேரம் வரை இருந்தால், "டிஸ்பாட்டா'' என்ற இறப்புக் கடவுளின் வேஷம் தரித்த ஒருவன் அந்த வீரனின் உச்சிக் கபாலத்தில் பலம் கொண்ட மட்டும் இரும்புச் சுத்தியால் அடித்து உயிர் துறக்க வைப்பான். இதைத் தவிர்ப்பதற்காகவே மார்க்கஸ் ஒவ்வொரு முறையும் போராடியபடி எழுந்திருந்தான்.

உடலெங்கும் மரணக் காயங்கள். நெற்றியில் ஏற்பட்ட நீளமான வெட்டில் இருந்து தொடர்ந்து கசிந்த குருதி, மார்க்கஸின் பார்வையைத் தொடர்ந்து மறைக்க கண்களைத் துடைத்துக் கொண்டான். நிராயுதபாணியாகத் தரையில் தளர்ந்து சரிந்தவனின் பார்வையில், தூரத்தில் கைகளை உயர்த்தி அழுகையுடன் உற்சாகப்படுத்தும் ஒலிவியா மங்கலாகத் தெரிந்தாள். தன்னால் இயன்றவரை மீண்டெழுந்து போராடினான் மார்க்கஸ்.

கடைசியாக, செயலிழந்து உயிருக்குப் போராடி, தரையில் விழுந்தவன், தன் முழுப் பலத்தையும் திரட்டித் தன் ஆள்காட்டி விரலை விண்ணை நோக்கி உயர்த்தி பார்வையாளர்களிடம் தன் கருணை மனுவைச் சமர்ப்பித்தான். சிலர் தம் கைகளில் இருக்கும் கைக்குட்டைகளை உயர்த்தி ஆட்டி மார்க்கஸை விடுவிக்கக் கோரினாலும், அதிகப்படியான பார்வையாளர்கள் நெஞ்சில் கட்டை விரலால் அழுத்திக் காட்டி அவன் ஆயுதத்தால் நெஞ்சு பிளக்கக் கொல்லப் படவேண்டும் என ஆர்ப்பரித்தார்கள். இறுதியில் மக்களின் தீர்ப்பே மகேசனின் தீர்ப்பானது.

மார்க்கஸின் தொண்டையிலிருந்து மார்பு வழியாகக் கீழிறங்கிய கூர்வாள் அவனின் இதயத்தைத் துளைத்தது. பாய்ச்சிய வாளினை அகஸ்டோ வேகமாகப் பொறுமையின்றி உருவி கைகளில் வழிந்த ரத்தக் கறையைச் சலிப்புடன் வழித்து, எதுவும் நடவாதது போல இறந்தவனைக் கடந்து போனான்.

தேவதூதன் வேஷத்தில் இருந்த ஒருவன் இறந்துபோன மார்க்கஸின் சடலத்தை அரங்கினில் இருந்து எடுத்துப்போக வந்திருந்தான்.

அனைத்தையும் காணச் சகியாமல் அரங்கத்தினில் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள் ஒலிவியா. அவளுக்குப் பிறந்த ஆண் குழந்தை தன் பிஞ்சு விரல்களைக் குவித்துக் கையை விண்ணை நோக்கி உயர்த்தியது.

**– அடுத்த இதழில் இன்னொரு**
**உலக அதிசயக் கதை** ■

• ஆகி

# என் கேள்விக்கென்ன பதில்?

1. அந்தக் கவிஞர் பள்ளி ஆசிரியராக முப்பத்தேழு ஆண்டுகள் பணிபுரிந்தார். அவரைப் பதினைந்து பள்ளிகளுக்குப் பணி மாறுதல் செய்துகொண்டே இருந்தனர். ‘அரசியல் ஈடுபாடு இல்லாமல் இருந்தால் என்னை மாற்ற மாட்டார்களாம். அரசியல் இல்லாமல் என்னால் எப்படி இருக்க முடியும்?’ என்று கேட்டார். அவர் யார்?

2. பத்திரை என்னும் பெண் காளன் என்னும் கள்வனை மணம் புரிந்தாள். ஒருநாள் கோபத்தில் கள்வன் என்று கூறிவிடுகிறாள். அதனால் அவன் பத்திரையை நயவஞ்சகமாகக் கொல்ல மலையுச்சிக்கு அழைத்துச் சென்று தள்ளிவிட முயற்சிக்கிறான். ஆனால் அவளோ, அதற்குமுன் அவனை வலம் வர விரும்புவதாகச் சொல்லி அவனைக் கீழே தள்ளிவிடுகிறாள். பிறகு துறவு மேற்கொள்கிறாள். இது எந்தக் காப்பியத்தின் கதை?

3. அந்தச் சுனையில் நீர் கொஞ்சமே இருந்தது. பெண்மான் நிறைய நீரைப் பருக வேண்டும் என்று ஆண்மான் நினைக்கிறது. எனவே தான் நீர் அருந்தாது, அருந்துவது போல வாயை மட்டும் நீரில் வைத்துக்கொள்கிறது. இந்தக் காதல் காட்சி உள்ள நூல் எது?

4. ‘பிர்லாவைப் போலச் சம்பாதித்தேன். ஊதாரியைப் போலச் செலவழித்தேன். பல நேரங்களில் பிச்சைக்காரனைப் போல ஏங்கி நின்ற வாழ்க்கை தான் எனக்கு வாய்த்திருக்கிறது.’ கூறியவர் யார்?

5. அந்த நூல் ‘அ’ என்னும் எழுத்தில் தொடங்கி ‘ன்’ என்னும் எழுத்தில் முடிகிறது. சோவியத் நாட்டின் கிரெம்ளின் மாளிகையின் நிலவறையில் அந்நூலின் பிரதி உள்ளது. அந்த நூல் எந்த நூல்?

■

**விடைகள்**

1. பாரதிதாசன்
2. குண்டலகேசி
3. ஐந்திணை ஐம்பது
4. கண்ணதாசன்
5. திருக்குறள்.

• கவி: தேன்மொழி தாஸ்
சித்திரம்: கொ.வடிவேல்

# மனதின் வளையம்



விழியற்ற ஒருத்தியின் உதடுகளால் ஆன
மாய உடலாகவே அலைகிறது
பனிக்காலை

தண்டுவட நீர்மம் மூளையினுள்ளே துடிப்பது
உயிர்ப்பின் ஊற்று

பூமியை ஏகமாய்ச் சுழலவிடுவது எதுவோ
அதுவே
மனதின் வளையமாகிறது

தெளிவு என்ற சொல்லின்
ஆகப்பெரும் பரிசுத்தச் சொட்டுகள்
நமக்குள்ளேதான் ஊற்றெடுக்கின்றன

மறைவிலா வெளியில் இரகசியங்கள்
மறைந்திருக்கும் நுண்மை
வெள்ளிப்பூவாய் வந்தமர்கிறது

கழல் மொழியில் மேலும் அது பேசுகிறது
மூளை வாழும் நிலப்பரப்பை விட
அதிக ஆச்சர்யங்களின் ஆழங்கள் கொண்டதை

வெற்றுப்பாதங்கள் உதடுகளை விட மேலானவை
கிளைவிளக்காக மண்ணில் சுடரும் அவை
புல் உரசும் இசைமணியில் மிதப்பவை

தட்டாம்பூச்சிக்கு இது பேரொலியாக இருக்கலாம்
மனதின் வளையத்தை இப்படித்தான்
சுழலப் பழக்கி இருக்கலாம். ■

• தமிழ்பாரதன்
மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

## பறவையே பறந்து செல்ல வா...

# ஈரிருநாள் இலங்கை

மழை பெய்து ஓய்ந்த அந்த இரவு தன் ஆயுளை இழந்து கொண்டிருந்தது. விழிகள் திறந்து பார்க்கையில், அதிகாலை இரண்டைக் கடந்திருந்தது கடிகாரம். மூன்று மணி அலாரத்தை அணைத்துவிட்டு எழுந்தபோது, காலைக் குளிரிலும் தண்ணீர்க் குளியல் குதூகலமாயிருந்தது. முந்தினநாள் எடுத்து வைத்த பயணப் பைகளுடன் இல்லத்தை விட்டு இனிதே பயணம் தொடங்கியது.

உற்றார் வழியனுப்பலில், ஆத்தாவின் வழியனுப்பல் இப்போதும் மறக்க இயலாது. “பத்திரமா நடுவுலதான் உட்காரணும், கைய சன்னலுக்கு வெளியில நீட்டக்கூடாது” என விமானத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பகர காலையிலேயே குதூகலிப்பாக இருந்தது மனம்.

அப்பா வழியனுப்ப, திருச்சிக்குச் செல்ல வேண்டிய பேருந்து திருவாரூரில் கிளம்பியபோது, அருகிருந்தவரின் கைக்கடிகாரம் காட்டிய நேரம் 03.45. தஞ்சை மண்ணைக் கடக்கையில், இலங்கையில் முதன்முதலில் புலிக்கொடி நாட்டிய இராஜராஜ சோழன் வானின்று வாழ்த்திய மழைத்துளிகள் என் அறிதுயில் எழுப்பின. பத்து நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கையைப் படையெடுத்த அவர் சென்ற பாதை இதுவாக இருந்திருக்கலாமோ என்ற சிந்தனை நிறைவதற்குள் திருப்புமுனைத் திருச்சியை அடைந்திருந்தது நான் பயணித்த பேருந்து.

மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து விமானநிலையத்திற்குச் சென்றபோது காலைப் பொழுது நன்கு விடிந்திருந்தது. காலை நடைபயிற்சி மேற்கொண்டிருந்தவர்களின் வேக நடையோடு விமான நிலையத்தை அடைந்தேன். உள்ளே செல்லும் முன், தமிழகத்தில் பணியாற்றும் தமிழறியாத பாதுகாப்பு அதிகாரி நிறுத்தினார். ‘முதல் முறையாக விமான நிலையம் வருகிறீர்களா? செல்வது அயல்நாடு எனில் கடவுச்சீட்டு காட்டுதல் அவசியம்.. அதன் பின்னரே அனுமதி!’, என அடுக்கினார்.

தொடர்வண்டி நிலையத்தில் சென்றபின் பயணச்சீட்டு பெற்றதும், பேருந்தில் ஏறியபின் பயணச்சீட்டு பெற்றதும் என நினைவுக்குள் வந்து சென்ற வேளையில், ஏற்கெனவே எடுத்து வைத்திருந்த கடவுச்சீட்டு, பயணச்சீட்டோடு உள்செல்ல, முதற்கட்டம் இரண்டாம் கட்டம் எனப் பாதுகாப்புச் சோதனைகள் நடந்தேறின. என்னோடு வந்த என் உடைமைகள்






என்னிடமிருந்து விடைபெற, நான் தமிழகத்திலிருந்து விடைபெற ஒன்றரை மணிநேரம் எஞ்சி இருந்தது.

ரூபாய் பண மதிப்பிழப்பு செய்யப்பட்டு ஓராண்டு நிறைவடைந்து இருநாளான அந்நாளில் உங்கள் பணத்தை அயல்நாட்டுப் பணமாக மாற்றிக்கொள்ளலாம் என அறிவிப்புத் தந்திருந்தார்கள். செண்ட்ரம் பணப்பரிவர்த்தனை நிறுவனம் மூலம் இந்தியப் பணம் ரூபாய் இரண்டாயிரத்தை மாற்றியதில் வரிப்பிடித்தம் போக கையில் கிடைத்த இலங்கைப் பணம் 3450 ரூபாய்.

பணம் பெற்ற பின்னர் கால்கள் நின்ற இடம் காலை உணவகம். சிற்றுண்டி நாவைக் கடந்து செல்லும் முன் அருகிருந்த பிரபலத்தை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும். பிரபல பட்டிமன்ற நடுவர் பேராசிரியர். கு. ஞானசம்பந்தன் அவர்களே அப்பிரபலம். பேராசிரியரும் அதே இலங்கைக்குப் பயணப்படுகிறார்.

இலங்கைக்குப் பயணிக்கக் காத்திருந்த தொண்ணூற்று ஒன்பதைத் தாண்டிய நபர்களில் வணக்கம் மலேசியா மற்றும் ஆஸ்ட்ரோ வானவில் இணைந்து நடத்தக்கூடிய பன்னாட்டு மாணவர்களுக்கான பேசு தமிழா பேசு 2017 நிகழ்விற்குச் செல்லும் நானும் பேராசிரியர் அவர்களும் அடக்கம்.

சில நாட்களுக்கு முன்பு வந்து பரபரப்போடு பல சிக்கல்களை எடுத்துப் பேசியிருந்த மெர்சல் படத்தின் முதல் காட்சி, வேட்டியோடு வெளிநாடு வந்த மருத்துவர் மாறன்(விஜய்) வில்லங்கத்தனமாகப் பரிசோதிக்கப்பட்டது. சில நேரங்களில் நம்முடைய உரிமைக்கு உரிய மதிப்பு கிடைக்காத நேரத்தில்(மட்டும்!) தான் நாம் வீறுகொண்டு எழுவோம். அப்படி படம் வெளியான சில நாட்களில் பலரும் அக்காட்சியைச் சிலாகித்ததைக் காண முடிந்தது.

நான் விமானத்தில் பயணிக்கும் சில நாள் முன்பே, நண்பர்கள் சவால் விடுத்திருந்தனர். 'வகுப்பிற்கு வேட்டி அணிந்து வருவது பெரிதல்ல, பன்னாட்டு முனையத்தில் வேட்டி அணிந்து நாடு கடப்பதுதான் பெரிது! அரிது! உன்னால் முடியுமா?', என அறிவிப்பு விட்டிருந்தான் நடிகர் விஜய் விசிறி ஒருவன். அவன் சொல்லாவிடினும் முதல் பன்னாட்டு விமானப் பயணம் வேட்டியோடுதான் இருந்திருக்கும். வேட்டி, சட்டையோடு விமானத்திற்குள் செல்லும்வரை ஏதும் நிகழவில்லை. ஆனால், இலங்கையில் என்ன நிகழும் என நனவிலி மனம் நினைத்துக் கொண்டிருந்தது. ஆயு போவன் என சிங்களத்துப் பேரிளம்பெண்ணின் வரவேற்போடு இலங்கைப் பயணம் தொடங்கியது.

காலை 10.10க்கு வானெழும்ப வேண்டிய விமானம், தாமதமாக எப்பயணியும் வராத காரணத்தால் 09.45க்கே விமான ஓடுதளத்தில் ஓடத் தயாராயிருந்தது. உதறல் சத்தத்தோடு கிளம்புகையில் சன்னலிருக்கை ஓரத்திலிருந்து கையசைத்து தமிழகத்திலிருந்து விடை பெற்றிருந்தேன். ஒருநிமிடத்திற்குள் வான் வெளியில் தன்னை நிலைநிறுத்திப் பாய்ந்து கொண்டிருந்தது. இரண்டாம் முறையாகப் பூமிக்கும் என்கால்களுக்குமிடையிலான

**அறிவிப்பு**

படைப்பாளிகளுக்கு, வணக்கம். நமது 'படைப்பு தகவு' இதழுக்காக ஒரு பக்கச் சிறுகதைப் போட்டி நடைபெற உள்ளது. சிந்தனைப் பறவையைச் சிறகடிக்க விடுங்கள். ஒரே ஒரு நிபந்தனை.. முடிவு அதிரடியாய் அமர்க்களமாய் அமையவேண்டும். படைப்புகளை padaippugal@padaippu.com என்ற முகவரிக்கு அனுப்பிவிடுங்கள். சிறந்த கதைகள் அடுத்தடுத்த மின்னிதழ்களில் பிரசுரமாகும்.

தொடர்பு அறுபடுகிறது (முதல்முறை தொடர்பு அறுபட்டபோது தில்லிக்கு விமானத்தில் சென்றிருந்தேன்).

"ஆகாசத்துல பறந்தாலும், சோறு நிலத்துல இருந்துதான் ராசா வரும்" என்று முன்பொரு முறை பார்த்த குறும்பட வசனத்தை நினைவு படுத்தியிருந்தது, விமானத்தில் தரப்பட்ட தண்ணீரும், சிற்றுண்டியும். அதன்பின், கூலான ஹாட்டிரிங்க் வந்தது.

பன்னாட்டு விமானத்தில் விலையில்லா மதுபானம் என்பதால் சிலர் தயாராக இருந்தனர். அவர்கள் விலையில்லாது தருவது போக, விலையோடு தரவும் சில வகைகள் இருந்தன. குடி குடியைக் கெடுக்கும் என்று யாவரும் அறிந்திருப்பினும், சிலருக்கு அது தேவையான தாகவும் இருந்தது வானத்துக் குளிருக்கு.

ஆனால், எனக்குத் தேவையாக இருந்தவை கவிதைகள். விமானத்தில் படிக்கலாம் என்பதற்காகப் பல்கலைக்கழக நூலகத்தில் தேடி எடுத்த வந்த கவிஞர் அனாரின் "பெருங்கடல் போடுகிறேன்" கவிதைகள் இந்தியப் பெருங்கடல் பரப்பைப் பூரணம் செய்திருந்தன.

இந்தியப் பெருங்கடலைத் தாண்டியிருந்ததை உறுதிப்படுத்தியிருந்தது பெருந்தொலைவுக்கு அப்பால் கீழ்த்தெரிந்த நிலப்பரப்பு. சிறு சிறு தீவுகளைத் தாண்டி இலங்கையின் பெருநிலப் பரப்புக்கு மேல் சிறகுவிரித்துச் சீறியது வானத்து வாகனம். உயர்ரகப்படுத்தப்பட்ட விமானத்தில் படம், பாடல், விளையாட்டு என முன்னிருக்கைப் பின்பக்கம் உள்ள தொடுதிரையில் யாவுமிருந்தாலும் எல்லாவற்றையும் ஒரு முறை முழுதும் ஆராய்ந்து பார்ப்பதற்குள் கீழிறங்கத் தயாராகிறது என அறிவிப்பு வெளியிட்டிருந்தார் விமானஓட்டி.

பாதுகாப்பாய் இலங்கைக்குள் தரையிறங்கியதைச் சன்னலிருக்கையிலிருந்து பார்க்கையில் பண்டாரநாயக்க விமானநிலையப் பெயர் உறுதி செய்திருந்தது. விமானத்திலிருந்து பயணிகள் அவசரமின்றி ஆர்ப்பாட்டமின்றி இறங்கிக்கொண்டிருந்தனர். இறுதியாகப் பொறுமையாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே விமானத்திலிருந்து வெளிவருகையில், விமானஓட்டி, பணிப்பெண்கள், பாதுகாவலர்கள் என யாருமில்லை. விமானநிலையத்தில் தேடினேன் தேடினேன் தேடினேன், உடன் பயணித்த ஒருவர் கூட இல்லை. குடியேற்றப் பிரிவில் காத்துக்கொண்டிருக்கையில், தூரத்தில் பெட்டி நகர்த்திச் செல்லும் பேராசிரியர் அவர்களின் உருவம் சற்றே உடலின் வெப்பநிலையைச் சீராக்கியது.

அங்கிருந்து உடைமையைப் பெறும் இடம் வந்திருந்தேன். எனது ஏழுகிலோவைத் தாண்டிய பெட்டிக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். கால்மணி நேரத்திற்கு மேலான காத்திருப்பிற்குப் பலனாக, பாதுகாப்பாக அனுப்பியிருந்தார்கள் இலங்கைப் பணியாளர்கள். அங்கிருந்து விமானநிலையத்திற்கு வெளியே வருகையில் காத்துக்கொண்டிருந்தார் பேராசிரியர். எங்களை அழைக்க வந்த பெயர்ப்பதாகைத் தாங்கிய இலங்கைத்தமிழர் ஆல்பர்ட் நிவேதனோடு பயணிக்கலானோம். பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து முப்பத்தைந்து கி.மீ. தூரம் கொழும்பு நகரம்.

பதிவுசெய்யப்பட்டிருந்த மகிழுந்தில் பேராசிரியரும் நானும் இலங்கைத் தமிழர் வழிகாட்டலுடன் பயணிக்கலானோம். அதிகம் சினிமா பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். முன்னணி இயக்குநர்கள் கே.பாலச்சந்தர், மணிரத்னம் ஆகியோர் இயக்கம் பற்றிய பேச்சு நிறைவில் மெர்சல் படத்தில் வந்துநின்றது. இலங்கையில் மெர்சல் திரைப்படம் தமிழ்ப் படங்கள் ஓடும் திரையரங்கம் தாண்டி சிங்கள ஹாலிவுட் படம் ஓடும் திரையரங்குகளிலும் ஓடியது என்று கதைத்தார் ஈழத்தார். ஒரு மணி நேரப்பயணத்தின் முடிவு, பன்னாட்டுத் தரத்திலான சாலைகளின் வழியே கொழும்பு நகரத்திற்கு அழைத்துச் சென்றது.

அங்கே 350மீ. உயரமுள்ள தாமரைக் கோபுரம் (lotus tower) கட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைத் தாண்டிய இந்தியப் பெருங்கடலின் இருப்பைக் கொண்ட கடற்கரையைக் கண்டோம். கரையை ஒட்டி நீண்ட இரயில்பாதையினோடே விரிந்த சாலையில் இடப்பக்கம் உள்ள க்ளோபல் உணவக விடுதிக்குச் சென்றபோது நேரம் மதியம் 12.45ஐத் தாண்டவில்லை. உள்ளே நுழைந்ததோடு தொடங்கியது உணவுப் பரிமாற்றம்.

அப்பரிமாற்றம் அடுத்த சந்திப்பில்....

**– தொடரும்**

• கட்டுரையாக்கம் : அகதா

# 'போராடாமல் தமிழ்ச் சூழலில் எழுதுவது சாத்தியமற்ற ஒன்று' – கவிஞர்கள் கலந்துரையாடல்






முதல் எழுத்திலேயே ஓர் எழுத்தாளனுக்கு முதுகில் தட்டிக்கொடுக்கக் கைகள் கிடைத்தால் அதைவிடப் பெரிய பொக்கிஷம் வேறு என்ன இருக்க முடியும்..? தங்களது முதல் படைப்பிலேயே முத்திரை பதித்த கவிஞர்கள் நால்வர் சந்தித்துக் கொண்டால்.. என்ன உரையாடிக் கொள்வார்கள்? அவர்கள் கடந்து வந்த பயணங்கள், பயணங்களின் வலிகள், அங்கீகாரங்கள், புறக்கணிப்புகள் இப்படி எண்ணற்ற மேடுபள்ளங்களை அவர்களது கலந்துரையாடலில் பகிர்ந்துகொள்வார்கள் அல்லவா! வாருங்கள் முதல் படைப்பு பற்றி மனம்திறக்கும் கவிஞர்கள் ஆன்டன் பெனி, குமரேசன் கிருஷ்ணன், ஆனந்தி, சுந்தரபாண்டி ஆகியோர் அவர்களுக்குள் என்ன உரையாடிக் கொண்டிருக்கிறார்கள் எனப் பார்ப்போம் .

"நான் முதன்முதலில் 1989ல் எழுதத் தொடங்கினேன். எனது முதல் எழுத்து நினைவிலும் இல்லை.. எழுத்திலும் இல்லை. கோவில்பட்டி கோ.வெ.நா.கல்லூரியைச் சேர்ந்த எனது நண்பர்கள்தான் எனக்கான முதல் அங்கீகாரத்தைத் தந்தனர்'', என முதலில் மனம் திறந்த ஆன்டன் பெனி, "வணக்கம் குமரேசன்! உங்களது முதல் கவிதை வரி நினைவில் இருக்கிறதா? எப்போது எழுத ஆரம்பித்தீர்கள்?" என்றார்.

"1993ல் என் தந்தையின் மறைவிற்குப் பின்னர் முதன்முதலில் கவி எழுதத் துவங்கினேன். 'பாசம் என்னும் விதை விதைத்து' எனத் தொடங்கும் வரியே எனது முதல் கவிதையின் முதல் வரி", என்றார் குமரேசன்.

ஆவலோடு இதைக்கேட்ட ஆனந்தி தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். "முதன்முதலில் கல்லூரி நாட்களில் எழுதத் தொடங்கினேன். என் முதல் படைப்பு இணையதளத்தில் எழுதியது. எழுத்துலகம் தான் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை விசயங்கள் அனைத்தையும் சொல்லித் தந்தது."




நிசப்தங்களின் நாட்குறிப்பு
குமரேசன் கிருஷ்ணன்




இந்த பூமிக்கு வானம் வேறு
ஆண்டன் பெனி




நினைவிலிருந்து எரியும் மெழுகு
ஆனந்தி ராமகிருஷ்ணன்




இலைக்கு உதிரும் நிலம்
முருகன், சுந்தரபாண்டியன்

இதனைத் தொடர்ந்து கவிஞர் சுந்தரபாண்டியும் தன்னை அறிமுகப்படுத்த உரையாடல் சூடு பிடித்தது. “நான் முதன்முதலில் எனது கல்லூரிக் காலங்களில் (2010)எழுதத் தொடங்கினேன். கட்டில் ஒன்று தன் வலியைத் தானே கூறும்படி அமைந்த கவிதைதான் எனது முதல் எழுத்து அனுபவம். மின்னிதழில் எனது கவிதை ஒன்று பிரசுரமானதுதான் எனக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம்,” என்றார்.

முதல் கவிதை அனுபவங்களை ஆர்வமுடன் பகிர்ந்தவர்கள் எழுத்துலகப் போராட்டங்களையும் அனுபவங்களையும் குறித்துப் பேசத் தொடங்கினர்.

முதலில் ஆனந்தி பேசத் தொடங்கினார்.

“முதலில் என் எழுத்துகள் ரசிக்கப்படவில்லை. பிறகு எழுதும் முறைகளை மாற்றினேன். எனக்கான தனித்துவமான எழுதும் முறை ஒன்றை உருவாக்கினேன். எல்லா இதழ்களிலும் என் கவிதைகளைப் பிரசுரமாகச் செய்தேன். இதற்கெல்லாம் பல படிகளையும் போராட்டங்களையும் கடந்தே வர வேண்டியிருந்தது,'' என்றவுடன் சுந்தரபாண்டி தொடர்ந்தார்.

“எழுத்துலக மறக்க முடியாத அனுபவம் நிறைய இருக்கிறது. எழுதத் தொடங்கிய ஆரம்பக் காலத்தில் அகில இந்திய வானொலி நிலையத்திற்கு முகம் தெரியா நபரால் அனுப்பப்பட்டு வாசிக்கப்பெற்று அலுவலக நண்பர்கள் என் பெயரையும் கவிதையையும் சொன்னது மறக்க இயலாதது,” என்றவர் பெனியை நோக்கி, “நீங்கள் எழுதிய கவிதைகளிலேயே தங்களுக்குப் பிடித்தது எது என்று சொல்லுங்களேன்?” என்று கேட்டார்.

“நான் எழுதிய அனைத்து மகளதிகாரம் கவிதைகளும் எனக்கு மிகவும் பிடித்தவை,” என்றார்.

ஆனந்தி, “‘அம்மாவின் கைவிரல் பிடிக்கையில் எல்லாம் கூடவே வந்து ஒட்டிக்கொள்கிறது பால்யம்’ என்ற வரிகள், நான் எழுதியதில் எனக்கு மிகப் பிடித்தவை,” என்றார்.

உடனே குமரேசன், "நான் எழுதிய நீள் கவிதைகளில் நிறைய எனக்குப் பிடித்தவை. ஹைக்கூக்களில்,

'பொட்டல்வெளி
மரம் தேடுகிறது
குச்சியுடன் பறவை'

'வாழவேண்டும்
சாவைத் தேடுகிறான்
சங்கூதுபவன்'

'பரண் மேல் புத்தகம் வாசிக்க எடுக்கையில் கலைகிறது சிலந்திவலை' ஆகியவை எனக்குப் பிடித்தவை," என்றார்.

கவிதைகள் அருமை என அனைவரும் பாராட்ட, தனது ஆரம்பகாலக் கவிஉலகத்தைப் பற்றிப் பேசலானார் குமரேசன்.

"சிறுவயதில் அம்புலிமாமா கதைகளும் , காமிக்ஸ் படக்கதைகளும் என்னை முழுதாக ஆக்கிரமிப்பு செய்திருந்தன. எட்டாவது பயிலும் காலத்தில் "மாயமோதிரம்" என்னும் கதை எழுதினேன். என் பால்ய நண்பன் சங்கர குற்றாலம் அருமையாக உள்ளதெனக் கையோடு கொண்டு சென்றுவிட்டான். அவ்வப்போது எதையாவது எழுதுவேன். முதல் கவி என முழுமையாக எழுதியது 1993ல் தந்தை மறைவிற்குப் பின்பே.

1993-1995இல் பாளையங்கோட்டை சேவியர் கல்லூரியில் பி.எஸ்ஸி. கணிதம் பயின்ற நான் தந்தை இறந்ததால் மின்வாரியப் பணிக்கு 1996 ல் நுழைந்துவிட்டேன்.

பின்னர் குடும்பச் சூழல், பொருளாதாரச் சிக்கலென எழுத்து என்னை விட்டு விலகிக் கொண்டிருந்தது. ஆனாலும் மனம் எதையாவது வாசித்துத் தேடலோடு எழுதத் தூண்டியபடி இருந்தது."

சுந்தரபாண்டியன் தனது எழுத்துலகப் போராட்டங்களை விவரிக்க ஆரம்பித்தார்.

"உருப்படியாக ஏதாவதொன்றைச் செய்வது போலத்தான் எனது முதல் நூல் முயற்சியும். எனது கவிதைகள் தொடர்ந்து இலக்கிய மற்றும் வெகுசன இதழ்களில் வரத் தொடங்கியது. அதனால் எழுதும் எல்லோருக்கும் இருக்கும் முதல் புத்தக ஆசையோடு எழுத்தின் வழி ஏதாவது செய்யலாமென்ற என் முதல் முயற்சியும் வெற்றி பெற்றது.

சாதாரண மனிதனாக வாழ்ந்து போவதற்கே அதிகம் மெனக்கிடல் வேண்டிய காலத்தில் போராடாமல் தமிழ்ச் சூழலில் எழுதுவது சாத்தியமற்ற ஒன்று. ஆனால் பொறுமையும், புத்தக வாசிப்பும், தொடர்ந்து இயங்குவதும் எல்லாவற்றையும் பக்குவப்படுத்தும் என நம்புகிறேன். நூறுக்கும் குறைவான புத்தகங்களையே வாசித்திருக்கிறேன்; நல்ல படைப்புகளைச் சொல்லிவிடலாம். ஆனால், படைப்புகளை வைத்துப் படைப்பாளர்களை எனக்குப் பிடிக்குமா எனச் சொல்லத் தெரியவில்லை.

ஆரம்பக்காலத்தில் என்னை எழுதத் தூண்டிய நண்பர் கனா காண்பவன் அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்,'' என்றவர் தனது கவிதைகளைப் பற்றிக் கூறலானார், "கவிதைகள் நியாபகத்திலே இருப்பது ஒரு துன்பம். எனக்கு நிறையவே இருக்கிறது. எனது கவிதைகளில் எனக்குப் பிடித்தவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் யாருக்கும் வெடிக்காத நிலம், துயர் வளர்ந்து புகைந்த கதை மற்றும் எனது மீனுகுட்டி கவிதைகள் எல்லாம் பிடிக்கும்," என்றார்.

தங்களுக்குக் கிடைத்த அங்கீகாரங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

குமரேசன், "ஈரோடு தமிழன்பன் விருது, படைப்புக்குழு விருதுகள் பெற்றிருக்கிறேன். நிசப்தங்களின் நாட்குறிப்புகள் என்ற முதல் ஹைக்கூ நூலிற்கு, புதுச்சேரி மூவடி, மின்மினி இதழ்கள் நடத்திய போட்டியில் ஊக்கப் பரிசு கிடைத்திருக்கிறது. இவை எனக்குக் கிடைக்கப் பெற்ற அங்கீகாரங்கள்," என்றவர்,

"பெனி! எது கவிதை? எதற்காக நாம் கவிதை எழுத வேண்டும்? என்ற கேள்வி உங்களுக்குள் எழுந்துள்ளதா?" என்று கேட்டார்.

"ஒரு கவிதையால் எதுவெல்லாம் செய்ய முடிகிறதோ அதுவெல்லாம் கவிதை.

அந்த நேரத்து மனநிலை அதை முடிவுசெய்யும். நான் உறவும் உணர்வும் சார்ந்த கவிதைகளையே படைக்க விரும்புகிறேன். ஆத்ம திருப்திக்கே கவிதை எழுத வேண்டும் . குமரேசன் தங்களது கருத்து என்ன?"

"சட்டென எழும் மின்னலைப்போல் எப்போது, எங்கே எழும் என கணிக்க முடியாத மனதின் உணர்வுகளே கவிதையாக அமையும். மனதைப் பாதித்த, மகிழ்வித்த, கோபமூட்டிய, ரசித்த, வாழ்ந்த எதன் சுவடாகவும் கவி எழலாம். சமூகத்தில் நடக்கும் அவலங்களின் மீது எழும் கோபமாகவும் கவிதை வெளிப்படலாம். மொத்தத்தில் கவி என்பது எதற்குள்ளும் அடங்காதது. எதனாலும் வரையறுக்க முடியாதது. நாளை என்ன நடக்கும் என்பதை யாரறிவர்? அதுவே வாழ்வின் சூட்சுமம். சமூகம், இயற்கை, தலைமுறை இடைவெளியில் தொலைந்த வாழ்வியல், அடித்தள மனிதர்கள் வாழ்வியல், குழந்தைகள் உலகம் இன்னும் இன்னும் எனக் கவிதைகளைப் படைக்க விரும்புகிறேன்.

கவிதை என் தவம். என் ஆன்ம ராகம். என்னை எனக்கு உணர்த்தும் உன்னதம்.

மனபாரத்தை நீக்கும் அருமருந்து. இந்தச் சமூகத்திற்கு ஏதேனும் நல்லது இதன்வழிச் சொல்லலாம் என்ற நப்பாசை. அதற்காகவே கவிதை எழுத வேண்டும்'' என்ற நெடிய விளக்கத்தைக் குமரேசன் கூறினார். ஆனந்தி தனது கருத்தைக் கூறத் தொடங்கினார்.

"கவிதை என்பது மன இயல்புகளின் வெளிப்பாடுகள். இலக்கில்லாமல் திரியும் நிச்சயமின்மை. ஒரு துளி விஷம். ஒரு துளி அமுது. கொண்டாட்டங்களின் கூடாரம். மொத்தச் சாபங்களின் வரையறைகள். பதட்டமும் நிம்மதியும் இரண்டறக் கலந்ததுவே! கவிதையின் அமைப்பிற்குச் சரியானது புதுக்கவிதையே. மன உணர்வுகளை வெளிப்படுத்தவும், செந்தமிழின் பெருமையை உலகறியச் செய்யவும், கவிதை எழுத வேண்டும்," என்றவர் பெண்ணியக் கவிதைகளைக் குறித்துப் பேசத் தொடங்கினார்.

"பெண்ணியம் சார்ந்த கவிதைகளைத் தவிர்த்த மற்ற கவிதைகள் எழுத வேண்டும் என்ற சிந்தனை எனக்குள்ளது. யாரிடமும் பெண்கள் உரிமை கோர வேண்டிய அவசியமே இல்லை. அவரவர்களுக்கான உரிமையை அவரவர் களாகவே எடுத்துக் கொள்ளுங்கள். பெண்கள் கடவுளின் அம்சம். கடவுளுக்குப் பிறகு உயிர்களைப் படைக்கும் சக்தி பெண்களுக்கே உரியது. நிலை இப்படி இருக்க யாரிடம் பெண்கள் உரிமை கோர வேண்டும்?"

சுந்தரபாண்டி கவிதை பற்றிய தனது கருத்தினைக் கூறத் தொடங்கினார்.

"கவிதை என்பது வாசிக்கிற பொழுதைப் புரட்டி போடும் உயிருள்ள ஒன்று. இதுவரை கிடைத்திடாத ஒரு அனுபவத்தைத் தரும் எல்லா அமைப்பும் கவிதைக்குச் சரியான அமைப்பே. நிலம் சார்ந்தும், ஆழ்மனதின் எண்ணங்களில் வாழ்வைக் கண்டு அடைதலும் பற்றியே கவிதைகள் படைக்க விரும்புகிறேன். எல்லாவற்றுக்காகவும், மேலும் வாழ்வோடிணைந்த சமூக மாற்றத்திற் காகவும் கட்டாயம் கவிதை எழுத வேண்டும்" என்றார் சுந்தரபாண்டி.

சங்க காலத்திலிருந்து எண்ணற்ற புலமை களைப் பரிசுகளாலும், விருதுகளாலும் அலங்கரித்த மண் இது. பல நல்ல புலவர்களின் செந்தமிழுக்கு நாட்டையே பரிசாகக் கொடுத்த அற்புதமும் இங்கேதான் நிகழ்ந்திருக்கிறது. வறுமையிலும் செம்மை காத்த புலவர்களையும், அரசனுக்குச் சமமாக அங்கீகரிக்கப்பட்ட புலவர்களையும் இங்கேதான் பார்க்கின்றோம். அதே தமிழ் மண்ணில் தோன்றி அங்கீகரிக்கப் பட்ட நான்கு கவிஞர்களின் இந்தச் சந்திப்பும் உரையாடலும், நமக்குள் சில கேள்விகளையும், சில கேள்விகளுக்கான பதில்களையும் தந்திருக்கும். சில பயண அனுபவங்களும், கடந்து வந்த பாதைகளின் வலிகளும் புரிந்திருக்கும். ■

• தெலுங்கு மூலம்: டாக்டர் என்.கோபி
தமிழில்: சாந்தா தத்
ஓவியம்: அழ. ரஜினிகாந்தன்

# ரொட்டி




ரொட்டி வானத்தினின்று வழுக்கி விழாது
பூமிக் கருவறையினின்று
வியர்வைத் துளிகள் சுமந்து வந்த
பசிக் கனவு ரொட்டி
இது விளைநிலங்களின் ராகத்திற்கு
விரல் போடும் தாளத்தினின்று
நடந்து வந்த ஒளிச் சக்கரம்
பொழுது புலர்வதென்பது எங்கள் வீட்டில்
ரொட்டிக் கதிரவன் உதயம் தான்..!
ஐவிரல் இடைவெளிகளை மாவு அலங்கரித்தபடி
உள்ளங்கை ரேகைகளை நேசமாய் முத்தமிட்டபடி
உருவாகும் உழைப்புத் தொடுகையின்
பிறப்புத் தத்துவம் ரொட்டி
பிசையும்போது எம் மடிப்பு எவ் வடிவெடுக்குமோ
புரிதலின் பின் மாயமாகும்..
பல அசைவுகளின் பலன் ரொட்டி..!
அம்மா மாவு பிசையும்போது
அவள் தன் கரங்களால் எங்கள் வயிற்றை
வருடிக் கொடுப்பது போலிருக்கும்
ரொட்டி அடுப்பை அடைந்ததும்
அத்தனை பேரும் அம்மாவைச் சுற்றி...
அதைச் சுடுகின்றபோது வெகு கவனத்துடன்
அம்மா அதன் மீது
அன்பெனும் காவியம் படைப்பது போலிருக்கும்
அவ்வப்போது அதன் மேல் தண்ணீருடன்
கண்ணீரும் உதிரும்
அதேதும் தெரியாது எங்களுக்கு...
ரொட்டி என்றால் எங்களுக்கு
ரொட்டி மட்டுமே
ரொட்டி மீதே அரிச்சுவடி பழகினோம்
ரொட்டியை இன்று எங்கள் தலை மேல்
சூரியனாய்த் தரித்து வாழ்கிறோம். ■

# "ஒவ்வொரு அனுபவமும் பாடமாகிறது.. ஆனால் சில கொடுமையான அனுபவங்கள் சித்திரவதை செய்கின்றன"

## - கவிஞர் சுகனின் மனைவி சௌந்தரவதனாவின் அனுபவப் பதிவுகள்

கவிஞர் சுகன் தனது 22வது வயதில் 'சுகன்' என்ற சிற்றிதழைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி அச்சு இதழாக வளர்த்தெடுத்தார். 28 ஆண்டுகள் ஒரு மாதமும் இடைவெளியின்றி 334 இதழ்களைக் கொண்டுவந்தார். நவீன படைப்பிலக்கியங்களை வாசகர்களிடம் சிறந்த முறையில் அறிமுகப்படுத்திய இவ்இதழுக்கு விளம்பரங்கள் வேண்டாம் என்பதில் சுகன் கறாராய் இருந்தார்.

சுகன் ஐந்து கவிதை நூல்களையும் ஒரு சிறுகதைத் தொகுப்பையும் எழுதியுள்ளார். சிற்றிதழ் உலகில் நட்சத்திரமென மின்னும் மறைந்த கவிஞர் சுகன் குறித்த நினைவுகளை அவரது மனைவி நம்மிடம் மனந்திறந்து பகிர்ந்துகொள்கிறார்.





பதிவுப் பெற்ற அச்சிடப்பட்ட இலக்கிய இதழ் SOUNDARASUGAN Reg.Magazine R.C.No. 26784/02

பெறுபவர்

தமிழ்த்திரு

"வாழ்க்கை இலட்சங்களுக்காக அல்ல இலட்சியங்களுக்காக"

"நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் நான் இருப்பேன். எப்போதும் உனக்கு உற்ற பாதுகாப்பாக."

– அம்மா ஞா.சுசீலா

**சொல்லாத சொற்களின் மவுனம்**

சொல்லாத சொற்களில்
இருக்கிறது
சொல்ல வேண்டிய,
பொருள்

தருணம் பார்த்திருக்கிறது
உன்னிடம்
சொல்லி பழக வேண்டிய
சொற்களின் விதை
நிலம் முளைக்க...

நூறில்
ஒன்றின் நுனி,
தெரிவித்து விடக் கூடும்
சொல்லிய சொற்களில்
சொல்லிப் புகுந்த பொருளின்
அர்த்தம்

மலரும் விரிவதுண்டு
காய் கனியும் தாங்கவதுண்டு
காம்பு
தனித்திருப்பது காம்பல்ல

அணுவில்
அலையலையாய் இருக்கிறது
உனக்கான
என்தன் பின் பிம்பம்

சொல்லாமல் கூட
சொல்லி விளக்கும்
மவுனம்...
உனக்கு

- அமீர்ஜான்

சௌந்தர சுகன்

பிப்ரவரி – 2015 – இதழ் எண் – 333 ரூ 20

“என் உலகமே அவங்கதான். எனக்கு அவர் கணவர் மட்டுமல்ல. அப்பா, அம்மா, நண்பர்.. சில நேரங்களில் என் எதிரியும்கூட. நான் அப்பா என்ற உறவு எப்படி பிரதிபலிக்கும் என்ற உணர்வை அறவே அறியாதவள். அம்மாவின் அரவணைப்பில் வளர்ந்தவள். எனக்கு அந்த உணர்வைத் தந்தவர் என் கணவர்தான்.

என் சொந்த மாமாவின் மகனாக (அம்மாவின் அண்ணன் மகன்) இருந்தாலும் என்னுடைய பதினெட்டு வயதுவரை அவரிடம் பேசியது கிடையாது. மற்ற அனைவரிடமும் பேசுவேன். இவங்களின் தம்பி, தங்கையுடனும் பேசுவேன். ஆனால் நான் இவங்களிடம் பேசியது கிடையாது. தூரத்து நிலா மாதிரி பார்ப்பதுடன் சரி.

மதுரையில் நடக்கும் சித்திரைத் திருவிழாவிற்குத் தஞ்சையிலிருந்து வருடம் ஒருமுறை அத்தை அழைத்து வருவார்கள். எப்போதும் புத்தகம் கையுமாகத்தான் இருப்பார். எங்கள் தலைமுறையில் இவங்க மட்டும்தான் புத்தகம் கையுமாக இருப்பார். ஆகையால் யாரும் பக்கத்தில் போகவும் பயப்படுவார்கள். என் அம்மா, மாமா போன்ற பெரியவர்களே பேசப் பயப்படுவார்கள்.

இவர்கள் எல்லாம் ஏன் அவரிடம் பேசப் பயப்படுகிறார்கள்? என நான் நினைப்பதுண்டு. பின்புதான் தெரிந்தது இவர்களிடம் இருக்கும் கள்ளத்தனம், போலித்தனம் ஏதும் என் கணவரிடம் இல்லை என்பது. செய்யும் செயலில் நேர்மை, உண்மை இருக்கும். முக்கியமாக அந்தச் செயலைப் பின்பற்றுவது என்பது மிகக் கடினமான ஒன்று. ஆனால் பின்னாளில் எனக்கு அது பிடித்துப் போனது. நிம்மதியாக உறக்கம் வந்தது.

என்னை அந்நாளில் அவர் நிமிர்ந்து பார்த்தது கூட இல்லை. நானும் அதைப் பற்றி யோசித்ததும் இல்லை. திடீரென்று ‘இன்று உனக்கு நிச்சயம். ஆகையால் கல்லூரி செல்லாதே’ என என் வீட்டில் சொன்னார்கள். நானும் என்

அம்மாவிடம் ஏதும் கேட்கவில்லை. என் அத்தை ஒரே ஒரு கடிதம் மூலம் என்னையும் அவங்களையும் இணைத்து விட்டார்கள் என்பது பின்புதான் தெரிந்தது.

என்னுடைய பத்தொன்பது வயதில் திருமணம். அப்பொழுது ஒன்றுமே தெரியாத களிமண்ணாய் நான் இருந்தேன். திருமணம் முடிந்தபின் என்னிடம் அவர் பேசிய முதல் பேச்சு, “என் பாதை மிகவும் கரடு முரடானது. முடிந்தால் என்னுடன் ஓடிவா, இல்லாவிடில் இப்படியே உன் குடும்பத்துடன் போய்விடு'', என்றார்கள். அப்பொழுது அதற்கு என்ன அர்த்தம் என்று கூடத் தெரியாது. இருப்பினும் வருகிறேன் என்றேன்.

எங்கள் வாழ்வின் பாதை மிகவும் வலி மிகுந்ததாக இருந்தது. எந்த வலிகளிலும், பிரச்சனைகளிலும் எங்களுக்குள் பிரிவு இல்லை. குடும்பத்தில் சராசரியாக இருக்கும் பிரச்சனையைவிடப் பன்மடங்கு பிரச்சனைகள் இருந்தன.

புதுமண ஜோடிக்குக் கிடைக்கும் எந்த அனுபவமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

கல்யாணமாகி மூன்றாவது நாளில் நாங்கள் சென்ற இடம் சுகன் அச்சகம். சுகன் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டார்கள். நான் பார்த்துக் கொண்டு இருந்தேன். அன்றே எழுத்துக்களை எப்படிக் கோர்ப்பது என்ற பாடமும் நடந்தது எனக்கு. என்னைச் சிறிது சிறிதாக அவங்களின் அன்பான மொழியால் அவங்களுக்குத் தகுந்த மாதிரி வடிவமைத்தார்கள். நானும் தயார் ஆகிக் கொண்டிருந்தேன்.

நம் அன்புக்கு உரியவர் எது சொன்னாலும் செய்வோம் இல்லையா? அப்படிதான் அவங்களுக்காக எனக்குப் பிடிக்குதோ பிடிக்கலையோ என்னால் முடியாவிட்டாலும் போராடிச் செய்யத் துணிந்தேன்.

என் கணவரின் மூடநம்பிக்கை இல்லாத இயல்பு என் குடும்ப உறவுகளுக்குப் பிடிக்காது. என் கணவரிடம் யாரும் ஏதும் எதுவும் கேட்க மாட்டாங்க. அவங்க என்ன சொல்றாங்களோ அதுதான். அம்மா 37 வருடப் பணி ஓய்வு பெற்றவர்கள் (நர்ஸ் பணியில்). கம்பீரமாகப் பேசும் என் அம்மா என் கணவரிடம் மறுபேச்சு பேசியது இல்லை. ஆனால் அவர்களின் மனதில் புகைச்சல் இருந்தது. ‘சுகன் இதழ் நடத்துவது வேண்டாம் என்று சொல். ஏதாவது வேலைக்குப் போகச் சொல்’ என்று எல்லோரும் என்னிடமே சொல்வார்கள். என் கணவரிடம் கூறுமளவுக்கு எனக்குத் தைரியம் இல்லை. பயம் இல்லை, சுகன் அவங்க உயிர் மூச்சு என நான் உணர்ந்த காலம் அது. எப்படிச் சொல்வேன்?

அவர் அரசு வேலைக்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இதழுக்காகவே உழைக்க நினைத்தார். எதிர்பாராதவிதமாகக் குடும்பப் பொருளாதாரத்தாலும், குடும்பத்தில் சில நிகழ்வுகளாலும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நிலை ஏற்பட்டதால் அரசு வேலையை ஏற்றுக்கொண்டார்கள்.

எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்த பின்புதான் வேலைக்குச் சென்றார்கள்.

அதுவரை அச்சகப்பணிதான். சுகன் இதழ்ப்பணியுடன் அழைப்பிதழ், புத்தகம் அச்சடிப்பது, புக் பைண்டிங் என வெளி வேலைகளையும் பார்த்தார்கள்.

தஞ்சாவூரில் இருந்து நான்கு மணி நேரப் பயணத்தில் பணி செய்யும் இடம் இருந்தது. வீட்டுக்கு வர இரவு ஒன்பது மணி ஆகும். பத்து மணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவரை நானும் அவங்களும் சுகன் பணியில் ஈடுபடுவோம். இரவில்தான் சுகன் அச்சடிப்பு நடக்கும்..மீண்டும் காலை நான்கு மணிக்கு எழுந்து ஐந்து மணிக்குக் கிளம்பி ஒன்பது மணிக்குப் பள்ளியில் நுழைந்து விடும் நிகழ்வு ஒரு வருடம் சென்றது. ஒரு நாள் கூடப் பள்ளிக்குத் தாமதமாகச் சென்றது கிடையாது. இதில் அவ்வப்போது உள் கிராமங்களில் உள்ள பள்ளிக்கு இரண்டு நாள் பணிக்குச் செல்லும்போது எங்களின் செயல்பாடுகள் மேலும் ஒரு மணி நேரம் ஆகும்.

எந்த நிலையிலும் சுகனைக் கொண்டு வருவதில் முனைப்பாக இருப்பார்கள். அலுப்பு பட்டதில்லை. எனக்கு அலுப்பு வரும். சுகன் இதழ் பற்றி ஒரு நாள் புரியும் என்பார்கள். ஆமாம் என் கணவரின் மேல் இருந்த அன்பின் காரணமாகத்தான் எல்லாமும் செய்தேன். அச்சடிப்பு கோர்ப்பு, பின் போடுவது, அஞ்சல் தலை ஒட்டுவது, தபால் நிலையம் கொண்டு சேர்ப்பது எனப் பல. பொருளாதார இழப்பிலும்

என் பிரசவ வலிகளிலும், குடும்பப் பிரச்சனைகளிலும், சாவிலும், கல்யாணத்திலும் சுகன் இதழ் வாராமல் இருந்தது இல்லை.

மருத்துவமனையில் இருந்தபொழுது நினைவு வந்து அவங்க கேட்ட முதல் கேள்வி, 'சுகன் அஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். அவற்றிற்கான ஏற்பாடு செய்தாயா?' என்பதுதான்.

மருத்துவமனையில் ஐந்து மாதங்கள் பல இன்னல்கள்.. பல கொடுமைகள். அதை எழுத நான் இன்னும் தைரியமும் பக்குவமும் பட வேண்டும். என் வாழ்வின் கொடுமையான பக்கங்கள் அவை. அந்த நினைவுகளைச் சிந்தனைக்குக் கொண்டு சென்றால்.. கண்ணீர் என்னை அறியாமல் வழிகிறது... மூச்சு முட்டுகிறது...

உயிருக்கு உயிரானவர்கள் நம் கண் முன்னே அவதிபடும் கொடுமை.. கோடி முறை அணு அணுவாக நாம் சாவதற்குச் சமம்.

நான் எதையும் துணிந்து செய்வேன். அவங்க யோசித்து யாருக்கும் பாதிப்பு இல்லாமல் செய்வாங்க. "வகுப்பில் நுழைந்த உடன் 'சாப்பிடாமல் வந்தவர்கள் எழுந்திருங்கள்" என்று கேட்டு சாப்பாடு வாங்கிக் கொடுத்தபின் தான் வகுப்பு எடுப்பார்கள்", எனப் பொங்கலுக்கு வீட்டிற்கு வரும் மாணவர்கள் சொல்வார்கள்.

எத்தனையோ குழந்தைகளுக்கு மேல் படிப்புக்கு உதவி செய்வாங்க. பணிக்குச் செல்லும் பள்ளிகளில் எல்லாம் ஒரு நூலகத்தை ஏற்படுத்தி விடுவார்கள். பாரதி, பாரதிதாசன் நூல்கள், மேரி கியூரி ஆய்வகம் என்ற பெயரில் எல்லாம் நூலகம் அமைத்து விடுவார்கள்.

கடைசியாகப் பணி செய்த பள்ளியில் இன்னும் மேரி கியூரி ஆய்வகமும் பாரதி நூலகமும் இயங்கி வருகின்றன.

பல நேரங்களில் நான் கோபப்படும்பொழுதும், அலுப்புப்படும்பொழுதும் திருக்குறள் வழியில் நட என்பார்கள்.

28 வருடம்.. ஒரு இதழ் கூட விடுபடாது 334 இதழ்கள்.. எந்த சமரசமுமின்றிக் குடும்பத்து உறுப்பினர்களுக்கும் ஈடு கொடுத்து இதழ் நடத்துவதற்கு மிகப் பெரிய ஆளுமைத்திறன் வேண்டும். அதை அவங்க தன் இறுதி மூச்சுவரை செய்தார்கள். ஆகையால் 'இதழை நடத்துங்க உதவி செய்கிறோம்' என்று சுகன் இதழின் மேல் இருந்த ஈடுபாடு காரணமாகச் சொன்னபோது மறுத்துவிட்டேன். சுகன் இதழ் அவங்களுடைய உயிர். அதை நான் அவங்க இயல்பில்தான் நேசிக்கிறேன். அதற்கு என்னால் எந்தப் பாதிப்பும் வரக்கூடாது என்ற எண்ணம்.

சுகன் இதழால் நான் பலமுறை கோபப் பட்டாலும், அலுப்புப்பட்டாலும் அந்த இதழ் தான் எனக்கும் என் மூன்று குழந்தைகளுக்கும் 'நான் இன்னும் உங்களுடன்தான் இருக்கிறேன்' என்று அவர் கூறும் உணர்வைத் தருகிறது. வீட்டிற்குப் பல இலக்கிய இதழ்களும் அழைப்பிதழ்களும் வரும். சுகன் இதழின் இலக்கிய உறவுகள் எங்களை இன்னும் அடிக்கடி தொலைபேசியில் விசாரிக்கிறார்கள். மாதம் தவறாமல் வெற்றிப்பேரொளி அய்யா வீட்டிற்கு வருவார்.

இன்று இதை நான் எழுதி இருப்பதும் சுகன் இலக்கிய உறவால்தான்.

எழுதுவது, மேடையில் பேசுவது என்பன எனக்கு இயல்புக்கு மாறான ஒன்று. இன்று மூன்று பசங்களுடன் தன்னம்பிக்கையுடன் நிற்பதற்கு அவங்க சொல்லிக் கொடுத்த அடிப்படைதான் காரணம். அடிக்கடி பாரதியின் வரியைக் கூறி ஓயாமல் ஓடு என்பார்கள்.

தேடிச் சோறுநிதந் தின்று பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி மனம்
வாடித் துன்பமிக உழன்று பிறர்
வாடப் பல செயல்கள் செய்து நரை
கூடிக் கிழப்பருவ மெய்திக் கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் பல
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?

இந்த வரிகள் என்னை ஓடச்செய்கின்றன. பாரதி வரியால் ஓடுகிறேன். ஆனால் ஓடிச் சாதித்து வந்து அவங்க தோள் சாயும் நிம்மதி மட்டும் எனக்கு இப்பொழுது கிடைக்கவில்லை. ஆனாலும் சோராமல் வாழ்க்கையின் பாதையை எதிர்கொள்வேன்.

**(அடுத்த இதழில் கவிஞர் வெற்றிப்பேரொளியின் சுகன் குறித்த நினைவுகள் இடம்பெறும்.)** ■

கவிச்சித்திரம்

• கவி: லக்ஷ்மி மணிவண்ணன்
சித்திரம்: கொ.வடிவேல்

# பயணம் செய்யும் நூறு ரூபாய் நோட்டு



மயக்கம் மூண்ட சாயுங்கால ஒளியில்
விரைவு ரெயில்
பிரிவின் ஓலம் நிறைந்த ஊழையுடன்
நிலையத்திலிருந்து தயாராகிறது
கசந்த ஊரிலிருந்து சங்கரவடிவு
நினைவுகள் அடைக்கப்பட்ட
பயணப்பெட்டிகளோடு
ரெயிலேறுகிறான்

கழிப்பறையற்ற தனது நகரம் நோக்கி
பலர் தங்கும் அறையை
மனம் சுமந்து
சங்கரவடிவின் பயணம்
ரெயில் பயண ஓலத்தின் கூர் கிழிக்க
துவங்குகிறது

நகரத் தொடங்கிய
ரெயிலுக்கு வெளியே
வெறுமை ததும்பும் வழியனுப்புதலோடு
தர விருப்பமற்ற நூறு ரூபாய் நோட்டைப்
பெற்றுக் கொள்ளச் சொல்லி
வற்புறுத்தும் வழியனுப்புபவரின் கரம்
நீள மறுக்கிறது

‘வேண்டாம் வேண்டாம்’ என
முனகிய சங்கரவடிவின்
மன இடைவெளிகளில்
தர விருப்பமற்று நீட்டிய கரம்
பின்னகர்கிறது

கடைசி ரெயில் பெட்டியின்
தொலைவு கண்டு
பெருமூச்சு விட்டபின்
கொடுக்கப்படாத நூறு ரூபாய் நோட்டு
ரெயில் பெட்டிக்குள் சிக்குண்டு பறக்கும்
பட்டாம்பூச்சியென
சங்கரவடிவின் பயணம் முழுவதும்
அலைகிறது
கழிப்பறையற்றுக் கசக்கும்
வெளிறிய தன் அறைக் கனவுகளோடு. ■

• ஆங்கில மூலம் : ஏ.கே.இராமானுஜன்
தமிழில் : சிறுமேதாவி
ஓவியங்கள் : கொ.வடிவேல்

# படகு மரம்



ஒரு ஊர்ல படகோட்டி ஒருத்தன் இருந்தான். ஆத்தைத் தாண்டிப் போறவங்களுக்காகப் படகை ஓட்டி அவன் பொழைச்சுட்டிருந்தான். ஒரு தடவை அவனோட படகுல எல்லாரையும் ஏத்திட்டு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போனான். அக்கரையில எல்லாரையும் எறக்கி விட்டுட்டு, அக்கரையிலிருந்து வர்றதுக்கு யாராவது இருக்காங்களா, வர்றாங்களான்னு ரொம்ப நேரமாப் பார்த்துட்டிருந்தான். ஆனா, ரொம்ப நேரமாகியும் ஒருத்தரும் வரவே இல்லே. அதனால் அவன் தனியாத் துடுப்பைப் போட்டு இக்கரைக்குத் திரும்பி வந்துட்டிருந்தான்.

அப்ப திடீர்னு ஆத்துல தண்ணி வந்ததால (வெள்ளப் பெருக்கு) அவன் வந்துட்டிருந்த படகு அப்படியும் இப்படியும் ஆடுச்சு. எந்தப் பக்கமும் போக முடியாம ரெண்டு பக்கமும் தண்ணி, ‘திடுந்திடு’ன்னு வந்துட்டிருந்துச்சு. துடுப்புப் போட முடியாம படகு ஆட, படகை அவனால நிலையா நிறுத்த முடியல. ஆத்துத் தண்ணி அவனோட படகை அடிச்சுட்டுப் போயிருச்சு. அவன் மட்டும் தண்ணியில குதிச்சு நீந்தி எப்படியோ கரைக்கு வந்து சேர்ந்துட்டான்.

அவனோட படகு தண்ணியில போனதால அன்னிலேர்ந்து அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சோத்துக்கே வழியில்லாமப் போயிருச்சு. ஆனாலும் அவன் ரொம்பப் பொறுமையா இருந்தான். இன்னொரு படகு செய்யலாம்னு திட்டம் போட்டான். அதுக்குத் தகுந்த மாதிரி நல்ல ஒரு அடிமரத்தைத் தேடிட்டுக் காட்டுக்குப் போனான்.

வெகுநேரமாகத் தேடிப் பார்த்தும், படகு செய்யறதுக்கு ஏத்த மாதிரி ஒரு அடிமரமும் கெடைக்கவே இல்லே. கொஞ்சம் மரம் 'வெண்டா' இருந்துச்சு. கொஞ்சம் மரம் முடிச்சு முடிச்சா இருந்துச்சு. அவனும் நாள் முழுக்க ராப்பகல்னு பார்க்காம ராத்திரி வரைக்கும் தேடினான். ஒரு புண்ணியமும் இல்லே. மானம் வேற கருக்கிட்டு வர்ற மாதிரி இருந்துச்சு. வேகமா எட்டு வச்சு சீக்கிரமா வீட்டுக்குப் போயிடலாம்னு நெனச்சான்.

ஆனா மழை நல்லாப் புடிச்சுருச்சு; இருட்டு வேற. அவன் முன்னால இருந்த தடம் கூட தெரியல. மழையில நல்லா நனைஞ்சுட்டான். பசி வேற எடுத்துருச்சு. காலையிலிருந்து எதுவும் சாப்பிடாம இருந்துட்டான். கடைசியில பயந்துட்டே ஒரு புதருக்கடியில போய் ஒளிஞ்சுட்டான். அங்க ஒரு வீட்ல வெளக்கு எரியறதைப் பார்த்துட்டு அங்கப் போனான்.

அங்க ஒரு குடிசை இருந்துச்சு. அங்க போய்க் கதவைத் தட்டினான். மேல் எல்லாம் சுருக்கம் விழுந்த ஒரு கிழவன் வந்து கதவைத் தெறந்தான். அவன்கிட்ட படகுக்காரன், "தாத்தா! நான் படகு செய்யறதுக்கான மரத்தைத் தேடிட்டு காட்டுக்குள்ள வந்தேன். இருட்டு வேற வந்துருச்சு. மழையும் நல்லாப் புடிச்சுருச்சு. இன்னிக்கு ராத்திரிக்கு மட்டும் நான் இங்கத் தங்கிட்டு, காலையில கௌம்பிப் போயிடறேன்"னு கேட்டான்.

அதுக்கு அந்தக் கிழவனும் "சரி"ன்னான். "உள்ளே வா! நானே சாகப் போற கெழவன். நான் என்னாத்தைக் கொண்டு போகப் போறேன்.. வா.. உள்ளே வந்து தங்கிக்க"ன்னான்.

அவன் குடிசைக்குள்ள போனான். அங்க கெழவனோட கெழவி ஒருத்தியும் இருந்தா. அவங்களைத் தவிர, வேற யாரும் இல்லே. மாடு கன்னு, நாய்க, குழந்தைகன்னு எதையும் அவங்களோட வெச்சுக்கலே. படகோட்டிக்கு இது கொஞ்சம் ஆச்சரியமா இருந்துச்சு. 'இந்தப் பாங்காட்டுக்குள்ள இவங்க ரெண்டு பேரு மட்டும் தனியா இருக்காங்க. ரொம்ப தைரியம்தான்'னு நெனச்சான். வயிறு வேற பசியால, 'கடமுடா'ன்னு சத்தம் போட்டுட்டு இருந்துச்சு.

அந்த வயசான கெழவனும் கெழவியும் அவனுக்குச் சாப்பிடறதுக்கு எதுவும் கொடுக்கலே. 'நாமளே ஏன் கேக்கக் கூடாது?'ன்னு நெனச்சான். "தாத்தா.. சாப்பிடறதுக்கு ஏதாவது இருக்கா? எனக்கு ரொம்பப் பசியா இருக்கு"ன்னான்.

அதுக்குக் கெழவனும், "நீ கொஞ்ச நேரம் தூங்கு. நாங்க சோறு ஆக்கிட்டு எழுப்புறோம்"னு சொன்னான்.

அதனால, அந்தப் படகுக்காரனும் படுத்துட்டான். ஆனா, பசி பெருங்குடலைச் சிறு குடல் திங்கும்போது எப்படித் தூங்கமுடியும்? கொஞ்ச நேரம் ஆனதும் ஏதோ சத்தம் கேட்டுச்சு. அந்தக் கெழவன் ஒரு பொட்டியோட மூடியத் தெறந்து அதுலேர்ந்து ஒரு தொப்பிய எடுத்து, அவனோட தலையில போட்டுட்டு, "ம்.. போ! போ!"ன்னு சொன்னதும், அந்தக் கெழவன் அங்கிருந்து மறைஞ்சுட்டான். அந்தக் கெழவியும் அவனுக்குப் பின்னாலேயே வந்து, இன்னொரு தொப்பிய எடுத்துப் போட்டுட்டு அவளும், "போலாம்"னு சொன்னதும், அவளும் மறைஞ்சுட்டா.

இந்தப் படகுக்காரனுக்குத் தொண்டையெல்லாம் காய்ஞ்சு போச்சு. "நான் பார்க்கறது எல்லாம் உண்மையா, இல்லே பொய்யா?"ன்னு அவனே கேட்டுட்டு, அவனைக் கிள்ளிப் பார்த்துட்டான். குழப்பத்துல எந்திரிச்சு, அந்தப் பொட்டிக்குப் பக்கமாப் போனான். அங்க இன்னும் ரெண்டு தொப்பி உள்ள இருக்கறதப் பார்த்தான். ஒன்னை எடுத்துத்



தலையில போட்டுட்டு, “போலாம்”னான். அப்ப, ‘ஸ்ஸ்..’னு சத்தத்தோட அவனுக்குக் காத்துல பறக்கற மாதிரியே தெரிஞ்சுது.

அவன் கண்ணை மூடித் தெறக் குறதுக்குள்ளே, ராஜாவோட அரண்மனை சமையல்கட்டுக்குள்ள போய் எறங்கினான். அங்கப் பார்த்தா ஒரு பெரிய விருந்துக்கு என்னென்ன பலகாரம் வேணுமோ, அதையெல்லாம் பண்ணிப் பெரிய பெரிய பாத்திரத்துல வெச்சிருந்தாங்க. சமையல் காரங்களும் வேலைக்காரங்களும் சமைச்சு முடிச்சதுக்கப்புறம் எல்லாத்தையும் கழுவறதுக்காகப் போயிட்டாங்க.

திடீர்னு பார்த்தா, அதுக்கு நடுவுல, குடிசைல இருந்த கெழவனும் கெழவியும் இருக்கறாங்க. அவங்க ரெண்டு பேரும் அங்க உட்கார்ந்து அவங்களோட பையில பாத்திரத்துல இருந்த பலகாரங்களை யெல்லாம் எவ்வளவு திணிச்சு உள்ள நப்ப முடியுமோ அவ்வளவையும் திணிச் சுட்டிருந்தாங்க.

அப்ப, படகுக்காரன் உள்ள வந்ததைப் பார்த்ததும், வேக வேகமாத் தொப்பியை எடுத்து தலையில போட்டுட்டு, “போ! குடிசைக்குப் போ!”ன்னு சொன்னாங்க. சொன்னதும், அந்த நொடியிலேயே அங்கிருந்து காணாமப் போயிட்டாங்க.

அந்தப் படகுக்காரனும், “ஆகா! இப்பதான் தெரியுது! அவங்க ரெண்டு பேரும் ஏன் சோறாக்கறது இல்லேன்னு’’ன்னு சொல்லிட்டு, ராஜாவுக்குன்னு வெச்சிருந்த ராத்திரிச் சாப்பாட்டை எடுத்துத் திங்க ஆரம்பிச்சான். ராஜாவுக்குன்னு செஞ்சிருந்த விருந்தையெல்லாம் சாப்பிட்டுட்டு, அவருக்குன்னு வெச்சிருந்த சாராயம் எல்லாத்தையும் எடுத்து வயிறு முட்டக் குடிச்சிட்டு, அவனோட தொப்பியப் போட மறந்துட்டு, குடிச்ச மயக்கத்துலே, தரையிலேயே மல்லாந்து கைய காலை விரிச்சுப் படுத்துட்டான்.

ராஜா சாப்பிடற நேரம் வந்ததும், சமையக்காரங்களும் வேலைக்காரங்களும் உள்ளே வந்து பார்த்தாங்க. எல்லாம் அங்கங்கே கெடக்குது. பலகாரம் எல்லாம் பாதி சாப்பிட்டும், பாதி தரையில எறைஞ்சும் சிந்திக் கெடக்குது. பாத்திரங்களை வேற காணோம். கொஞ்சம் பாத்திரங்கள்ல ஒன்னுமே இல்லாமக் காலியாக் கெடந்தது.

இந்தப் படகுக்காரன், மூலையில மல்லாந்து கெடந்தான். அவங்க எல்லாம் சேர்ந்து அவனை இழுத்துப் போட்டு நல்லா அடிச்சு உதைச்சாங்க. காயம் பட்டதுக்கப் புறம்தான் அவனோட குடிவெறி தெளிஞ்சுது. அவனைக் கட்டிப் போட்டு, ராஜாகிட்ட இழுத்துட்டுப் போனாங்க.

“மகாராஜா! கடைசில இவனைப் பிடிச்சே பிடிச்சுட்டோம். இத்தனை நாளா இந்தப் பாவிதான் இங்கேர்ந்து தங்கம் வெள்ளி எல்லாத்தையும் திருடிட்டு, சோத்தை எல்லாம் தின்னுட்டுப் போயிருக்கான்”னு சொன்னாங்க.

ராஜாவுக்கு ஒரே ஆத்திரமா வந்துச்சு. “ஏன்டா நாயே!”ன்னு கத்திட்டு, “இவனை ஒரு மரத்துல கட்டி, தீ வெச்சு விடுங்க. உயிரோட எரிஞ்சு சாம்பலாகட்டும்!”னு கத்தினான்.

வேலைக்காரங்க அவனை இழுத்துட்டுப் போய் ஒரு பெரிய நல்லா வறண்ட மரத்தோட அடிமரத்துலதான் அவனைக் கட்டுனாங்க. அவனைச் சுத்தியும் விறகுக் கட்டைகளை அடுக்கினாங்க. அந்தப் படகுக்காரன் சுத்திமுத்தியும் பார்த்துட்டிருந்தப்பதான், அவனுக்குச் சட்டுன்னு ஒரு எண்ணம் வந்துச்சு. “நான் முதல்லேயே இந்த மாதிரி ஒரு அடிமரத்தைப் பார்த்திருந்தா, இவ்வளவெல்லாம் நடந்திருக்காது. இப்ப நான் என்ன செய்யறது?”ன்னு நெனச்சான்.

அவன் மேல தீ வெக்கறதுக்கு முன்னால, வழக்கமாக் கேட்கற மாதிரி, “உன்னோட கடைசி ஆசை என்ன?”ன்னு கேட்டாங்க.

படகுக்காரனுக்கு அப்பதான், ‘நம்ம வாழ்க்கை இன்னும் இருக்குது; முடிஞ்சு போகலே’ன்னு தெரிஞ்சுது. சட்டுன்னு அவனோட தொப்பி நெனப்புக்கு வந்துச்சு.

“சாமி! சாமி! என்னோட தொப்பிய நான் சமையல்கட்டுலேயே வெச்சுட்டேன். என்னோட கடைசி ஆசை அதைப் போட்டுப் பார்க்கணும் அவ்வளவுதான். அதோடதான் நான் செத்துப் போக விரும்பறேன். தயவு பண்ணுங்க சாமி!”ன்னான்.

அங்கிருந்த ஒருத்தன் ஓடிப்போய் அதைக் கொண்டு வந்தான். அந்தத் தொப்பிய எடுத்து அவன் தலையில போட்டுக்கறதுக்கு முன்னால, அவங்ககிட்ட தீயைப் பத்த வைக்கச் சொன்னான். அவங்க விறகுல நெருப்பை வச்சதும், அவன் தலையில தொப்பியப் போட்டுட்டு, “வீட்டுக்குப் போ! வீட்டுக்குப் போ!”ன்னு சொன்னான். சொன்னதும், காத்துல மரத்தோட சேர்ந்து மறைஞ்சு போயிட்டான். அங்கிருந்த எல்லாரும் ஒரே சத்தமா, ஒன்னாச் சேந்து, “இது என்னமோ மாய மந்திரம்!”ன்னு கத்தினாங்க.

படகுக்காரன், முதுகுல கட்டுன மரத்தோட அவனோட சொந்தக் குடிசைக்கு முன்னால வந்து எறங்கினான். மரத்தோட எறங்கும் போது, அவன் கயித்தோட இருந்தான். அவன் பொண்டாட்டி ஓடி வந்து, முடிச்செல்லாம் அவுத்துவிட்டு, “இதெல்லாம் என்ன?”ன்னு கூட்டிக்கிட்டுப் போனா.

“அதெல்லாம் ஒன்னுமில்லே.. நாம படகு செய்யறதுக்கு ஒரு நல்ல மரம் வேணும்னு சொல்லிட்டிருந்தேனில்லையா.. அதான் கடவுள் இந்த மாதிரி ஒரு மரத்துல என்னைக் கட்டி இங்க அனுப்பி வச்சாரு”ன்னு சொன்னான்.

அந்த மரத்த வெச்சு ஒரு நல்ல தெடமான படகு ஒன்னு செஞ்சான். அதை வெச்சு புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தாங்க.

– நாட்டுப்புற மொழிபெயர்ப்புக்
கதைகள் தொடரும் ■

• மானசீகன்
ஓவியங்கள்: அழ. ரஜினிகாந்தன்

# ஞாபகம் வருதே...

என் தந்தைக்கும், எனக்கும், என் மகனுக்குமான பள்ளி அனுபவங்கள் முற்றிலும் சம்பந்தமே இல்லாதவை. என் தந்தை மதிய உணவுக்காகவே பள்ளிக்குப் போயிருப்பார். அவர் பள்ளிக்குப் போகவில்லை என்றாலும் கூட என் தாத்தா பெரிதாகக் கவலைப் பட்டிருக்க மாட்டார். தனக்கு வாய்த்த ஒரே அடிமையும் தப்பிப் போன வருத்தத்தில் தக்க தருணத்திற்காகக் கொக்கைப் போல் காத்துக் கிடந்திருப்பார். உண்மையிலேயே பிற்பட்ட சமூகங்களைச் சார்ந்த பல பிள்ளைகள் தந்தையின் தொழிலில் இருந்து தப்பிப் பதற்காகவே அன்று பள்ளிகளுக்குப் போயிருக்கக் கூடும். காமராஜருக்கே இந்த இரகசியம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால்தான் ராஜாஜி 'குலக்கல்வித் திட்டம்' கொண்டு வந்தபோது திராவிட இயக்கம் அதனைக் கடுமையாக எதிர்த்தது.



அதையும் தாண்டிக் கல்லூரி போனவர்கள் ஸ்டெப் கட்டிங், பெல்பாட்டம், ஜாரி(ஃபிகர்), குட்டிச்சுவர் போன்ற இத்யாதி காரணங் களுக்காகவே போய் வந்திருப்பார்கள். ஆனாலும் அவர்கள் யார் என்பதை ஒவ்வொரு செமஸ்டரின் அரியர்களும் அவர்களிடம் சொல்லாமல் சொல்லியிருக்கும். அவர்களில் பலர் அப்போதே தன்னை 'வறுமையின் நிறம் சிவப்பு' கமலஹாசனாக அடையாளப்படுத்திக் கொண்டு வேலையில்லாத சோகத்தை முகத்தில் கொண்டு வருவதற்கான மெனக்கெடலில் ஈடுபட்டிருப் பார்கள். இதைத் தாண்டி ஒரு நல்ல விஷயம் அந்தத் தலைமுறைக்கு வாய்த்திருந்தது. அன்றைய ஆசிரியர்கள் வகுப்பறைகளில் வெளிப்படையாக அரசியல் பேசினார்கள். மாணவர்கள் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திமுக என்கிற கொள்கை அடையாளங்களோடு உலா வந்தார்கள். அதற்காகவே மோதிக் கொண்டார்கள்.

இன்னொன்று, ஒவ்வொரு கிராமத்திலும் இவர்களின் வழியாகவே 'நவீன வாழ்க்கை முறை' எட்டிப் பார்த்தது. அவர்கள் இந்தியைத் தார் பூசி அழித்த கையோடு இந்திப் பாடல்களைக் கேட்டார்கள். ஐரோப்பிய நாடுகளின் ஹிப்பிக் கலாச்சாரத்தை உள்ளூர் நாவிதருக்கு அறிமுகப் படுத்தினார்கள். பெரும்பாலும் கல்யாணத்தில் முடியாவிட்டாலும் ஜாதி, மதம் கடந்த காதலுக்கான பிள்ளையார் சுழிகளைப் போட்டு வைத்தார்கள்.

அவர்களில் சிலர், லெனின், மார்க்ஸ் என்று பேச இங்கர்சால், சாக்ரடீஸ் என்று வேறு சிலர் முஷ்டி முறுக்கினர். புல்லட்டுகள், கூலிங் கிளாஸ், தொலைக்காட்சிப் பெட்டிகள் இவர்களாலேயே வீடுகளுக்குள் வலது காலை எடுத்து வைத்தன. அடிக்கடி ஆங்கில வார்த்தைகளைப் பயன் படுத்திக் கொண்டே இந்தத் தலைமுறை தமிழுக்காகத் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தது. இவர்களில் சிலர் ரித்விக் கட்டக், மிருணாள் சென், அகிரா குரோசேவோ என்று ஊரையே பயமுறுத்தினாலும் யாரும் அறியாத சில புதிய ஜன்னல்களைத் திறந்தும் வைத்தனர்.

எம்ஜிஆரை இவர்களில் பலர் காமெடி நடிகராகவே ரசித்து வந்தனர். ஆனால், அந்த



உண்மையை வெளியில் சொல்லாமல் சித்தர்களின் ரகசியமாகவே காப்பாற்றி வந்தனர். சுதந்திரம் கிடைத்த பிறகும் கிடைக்காமல் போன விஷயங்களின் மீதான கோபத்தை இவர்கள் ரஜினி, அமிதாப் முகங்களில் ஏற்றிப் பார்த்தனர். இவர்களுடைய அந்தரங்கத்தின் குறியீடாகக் கமல்ஹாசன் இருந்தார். கபில்தேவ், கவாஸ்கர் ஆகிய பெயர்களைத் தேசிய அடையாளமாக இவர்கள்தான் ஊருக்குள் பரப்பினர்.

தண்ணீர் வற்றிப்போன ஆறுகளில், குளங்களில் இவர்களே மூன்று குச்சிகளை நட்டு வைத்து கிரிக்கெட் ஆடி, பெண்களின் தண்ணீர் பானைகளைத் தரையில் விழ வைத்தனர். கபடி போன்ற விளையாட்டுகளை மரணப்படுக்கையில் தள்ளினர். விசேஷங்களில், கோவில் திருவிழாக்களில், குடும்ப விழாக்களில் மட்டுமே இரகசியமாய் அதுவும் ஒரு குழுச் செயல்பாடாய் நிகழ்ந்து கொண்டிருந்த 'சைட் அடித்தலை'ப் பொதுவெளிக்கு அழைத்து வந்து அன்றாடச் செயல்பாடாக்கியது இவர்கள்தான். பெண்களுக்கு ஆணைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கிறதோ இல்லையோ நினைக்கும் உரிமையாவது இருக்கிறது என்று அவர்களை அழுத்தமாக நம்ப வைத்தது இவர்கள்தான். அதற்காகவே இவர்கள் இளையராஜாவையும், டிரான்ஸிஸ்டரையும் கடவுள் ரேஞ்சுக்குக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

பிஸ்கட், சாக்லெட் என்கிற புதுவஸ்துகள் இவர்களின் தயவு நாடியே உள்ளூர் கடைகளின் அலமாரிகளில் ஏறிக் கொண்டன. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் 1947 ல் கிடைத்த சுதந்திரம் இவர்களால்தான் கிராமங்களுக்கு வந்தது. இந்தியாவிலேயே கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இடையிலான நாகரீக இடைவெளி மிகவும் குறைவாக இருப்பது தமிழகத்திலேயே. கல்விமுறை சாதி, வர்க்கம், இடம், பால் என்கிற எல்லையைத் தாண்டி இங்கு பரவலாக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

நான் படித்தது இரண்டும் கெட்டான் காலம். அப்போது மெட்ரிக் பள்ளிகள் வந்து விட்டன. ஆனாலும், ரொம்ப அபூர்வமாகவே அதில் பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். அப்போது அரசுப் பள்ளிகளும், அரசு உதவி பெறும் பள்ளிகளும் தீண்டத்தகாத பட்டியலில் சேர்க்கப்படவில்லை. பெற்றோர்களிடம் சில கனவுகள் முளைக்க ஆரம்பித்திருந்தன. ஆனால், அவை பிள்ளைகளின் சின்னச் சின்ன சந்தோஷங்களைத் தின்று தீர்க்கிற அளவிற்கு அசைவமாகவில்லை.

டியூசன்கள் இருந்தன; ஆனால், நாங்கள் வேறு காரணத்துக்காகவே அங்கு போனோம். எங்கள் டியூசன் மாஸ்டர் ஒரு குறிப்பிட்ட பெண்ணிடம் மட்டும் டியூசன் ஃபீஸ் கேட்க மாட்டார். எப்போதாவது அவளே தந்தால் மட்டுமே வாங்கிக் கொள்வார். அவள் நின்றுவிட்டால் குறைந்தது இருபது பேர் மறுநாளிலிருந்து வர மாட்டார்கள் என்கிற பேருண்மை அவருக்குத் தெரியும். பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் நிறைய பேர் விரும்பி ஈடுபட்டார்கள். அவர்கள் ஹீரோக்களாகவும், ஹீரோயின்களாகவும் கொண்டாடப்பட்டார்கள்.

அப்பா, அம்மாக்கள் சேர்த்துவிட்டு வந்த பிறகு 'ரேங்க் கார்டு கையெழுத்து' என்கிற அளவிலேயே பள்ளியோடு தொடர்பு வைத்திருந்தார்கள். வகுப்பறைகளில் ஆசிரியர்கள் அரசியல் பேசினாலும் மாணவர்கள் அதில் பெரிய ஈடுபாடு காட்டவில்லை. பேச்சுப்போட்டி மாணவர்களும் கூட 'நடுநிலை டிராக்கில்தான்' தங்கள் தேடலைத் தொடர்ந்தார்கள்.

தாவணி போய்ச் சுடிதார் வந்திருந்தது. நிறைய பெண்கள் சைக்கிளில் பள்ளிகளுக்கு வர ஆரம்பித்திருந்தனர். ஆண்களின் கேலிப் பார்வைதான் அவர்களுக்கான மிகப்பெரிய வேகத்தடையாக இருந்தது. நிறைய பெண் ஆசிரியர்கள் வேலைக்கு வர ஆரம்பித்திருந்தனர். எப்போதாவது உண்மையாகவும்,பெரும்பாலும் பொய்யாகவும் அவர்கள் ஆண் ஆசிரியர்களுடன் சேர்த்து வைக்கப்பட்டு 'கிசுகிசுக்களின்' கருப்பொருளாக உருமாறியிருந்தனர். பெண் ஆசிரியர்கள் பெரும்பாலும் அரசியல் பேசுவதில்லை.

பள்ளிகளில் எஸ்.சி. மற்றும் பி.சி. முரண்கள் ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் எட்டிப் பார்த்தன. அதற்கு முன்பிருந்த பிராமண எதிர்ப்பு காணாமல் போயிருந்தது. நாத்திக ஆசிரியர்கள் குறைந்திருந்தனர். டீச்சர்கள் பெரும்பாலும் கோவில்களுக்கு வருவது போலவே பள்ளிகளுக்கு வந்தனர். சிறுபான்மை ஆசிரியர்கள் தங்கள் அடையாளங்களை அதற்கு முன்பை விட அதிகமாகப் பேண ஆரம்பித்திருந்தனர். ஏ. ஆர். ரகுமான் எல்லோருக்குள்ளும் நுழைந்திருந்தார். காதல் என்பதைப் 'பிரிவு' மற்றும் சோகமாக மட்டுமே கருதும் 'மாடோசிஸ்ட்' மனநிலை விடைபெற்று அதை ஒரு கொண்டாட்டமாகக் கருதும் மனநிலை உருவாகியிருந்தது. போன தலைமுறையைப் போல் ஜாதி, மதம் கடந்த காதலுக்குப் பெரியவர்கள் மட்டுமே எதிரி என்கிற நிலைமாறி இளைஞர்களில் சிலரே எதிரிகளாக மாறிவிட்டிருந்தனர்.

சச்சின் இந்தியாவின் அடையாளமாக ஏற்கப்பட்டிருந்தார். இந்தியா, பாகிஸ்தான் மேட்ச் முதல்நாளிலும், மறுநாளிலும் வகுப்பறையில் விவாதப் பொருளாகி நண்பர்களைப் பிரித்து வைத்தது. மாணவர் போராட்டங்கள், அமைப்புகள் கிட்டதட்ட இல்லாமல் ஆகின. ஆசிரியர்கள் முன்பை விட புதுவீடு, பைக், ரியல் எஸ்டேட், ஃபைனான்ஸ் என்று கொஞ்சம் வசதியாகி இருந்தனர்.

ஒரு தடவைதான் காதல் வரும் என்கிற சூத்திரம் தூக்கி எறியப்பட்டது. அடிக்கடி காதல் வந்தது; சீக்கிரமே விடைபெறவும் செய்தது. கல்லூரிகள் அளவிற்குப் பள்ளிகளிலும் காதல் வந்தது. ஆசிரியர்களும் மாணவிகளைக் 'காதலிக்க' ஆரம்பித்துப் பரிசோதனைக் கூடங்களிலோ, சனிக்கிழமைகளிலோ பிடிபட்டனர். சிலர் பிடிபடாமலேயே மாணவிகளைக் கிணறுகளுக்கோ, பூச்சிக்கொல்லி மருந்துக் கடைகளுக்கோ அனுப்பினர். மாணவர்கள் டீச்சர்களுக்குக் காதல் கடிதம் எழுதித் தப்புத் தப்பான எழுத்துக்களுக்காகத் தலைமையாசிரியரிடம் அவமானப்பட்டார்கள்.

சினிமா தியேட்டர்களுக்கு மாணவிகளும் போக ஆரம்பித்தார்கள். இன்ஜினியரிங், மருத்துவம் ஆகியவற்றின் விதைகள் தூவப்பட்டு விட்டாலும் பலரும் 'கலெக்டராகப் போகிறேன்' என்று வகுப்பறையில் உதார்விட்டு விட்டு 'ஹிஸ்டரி 'முடித்து மெடிக்கல் ரெப் ஆகியிருந்தனர். படித்து முடித்தவர்கள் பெரும்பாலும் சும்மாயில்லை. விற்பனை பிரதிநிதிகளாகவோ, மெட்ரிகுலேஷன் ஆசிரியர்களாகவோ மாறி வயிறு வளர்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் காலகட்டத்தில் படித்தவர்கள்தான் இப்போது பெற்றோர்களாகி இருக்கின்றனர். வரலாற்றிலேயே ஆகச் சிறந்த பயங்கரவாதிகள் இவர்கள்தான். இவர்கள் தாங்கள் பள்ளிக் கல்லூரி காலங்களில் அனுபவித்த எல்லா மகிழ்ச்சிகளையும் மறந்துவிட்டுத் தற்போதைய நிலை குறித்த தீராத ஏக்கப் பெருமூச்சோடு இருக்கிறார்கள் (நண்பர்களைச் சந்திக்கும்போது மட்டும் அது குறித்துப் பெருமை பேசி உடனே மறந்தும் விடுகிறார்கள்). இவர்களுக்குக் குழந்தை என்பது இழந்த பெருமையை மீட்கக் கிடைத்திருக்கும் ஒரே ஆயுதம். இவர்கள் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை வரலாற்றை மாற்றி எழுதும் யுகப்புரட்சியாகக் கணித்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் தங்களை அடிமைகளாகவும், குழந்தைகளை வெறும் பொருட்களாகவும் கருதும் அந்தப் பள்ளிகளில் ஒரு பக்தனைப் போல் சரணாகதி அடைந்திருக்கிறார்கள். அது நிறைய ஆபத்துக்களை இந்தச் சமூகத்திடம் கொண்டு சேர்த்திருக்கிறது. நீங்களும் அவர்களில் ஒருவரா? ■

• முகம்மது பாட்சா
ஓவியம் : கொ.வடிவேல்

# பாஷோவின் பழைய குளம்



'இந்த அழகிய கிண்ணத்தில்
பூக்களை அடுக்கி வைப்போம்
அரிசிதான் இல்லையே' – (பாஷோ)

"சிறந்த கவிதையென்பது நல்ல கட்டமைப்பில் இருக்கவேண்டும். வெளிச்சத்தைப் போல் அதன் நிழலையும் பிரதிபலிப்பதுடன் மணற் படுகையின் மேலோடும் தெளிந்த நதியின் நீரைப் போல் இருக்க வேண்டும்" - ஹைக்கூவின் தந்தையெனப் போற்றப்படும் மாட்சுவோ பாஷோவின் பொன் வாக்கியங்களில் இதுவும் ஒன்று.

ஹைக்கூ என்பது முதலில் ஹொக்கூ என்றே அழைக்கப்பட்டது. பிறகு ஹைகா என்று திரிந்து பின்னர் ஹைக்கூ என்று மாறியது. தமிழில் முதன் முதலில் 1984ல் புள்ளிபூக்கள் என்ற ஹைக்கூ கவிதைகளடங்கிய நூலை வெளியிட்ட ஓவியக் கவிஞர் அமுதபாரதி ஹைக்கூவிற்குப் புது விளக்கம் ஒன்றைத் தருகிறார். ஐ+கூ = ஐக்கூ (ககர ஒற்று மிகுந்துள்ளது) ஐ என்றால் கடுகு, கூ என்றால் பூமி. கவிதைகள் கடுகளவில் சிறியதாக இருந்தாலும் பூமியின் அளவு ஞானம் விரிந்தது.

இந்தியாவில் ஹைக்கூ முதன்முதலில் இரவிந்திரநாத் தாகூர் அவர்களின் வழியாகத் தான் வங்காள மொழியின் மூலம் நுழைந்தது. அவரின் ஹைக்கூ முயற்சிகள் பாராட்டும்படியாக இருந்ததால் ஜப்பான் மொழியிலும் அவரது கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டு ஜப்பானுக்குச் சென்றதையும் அறியமுடிகிறது. தமிழில் ஹைக்கூவை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் நம் தேசியக்கவிஞர் சுப்ரமணிய பாரதியார் அவர்கள்தான். அவர் தனது சுதேசமித்திரன் நாளிதழில் ஹைக்கூவைப் பற்றி 16.10.1916 அன்று விரிவான கட்டுரை ஒன்றை எழுதினார். அதனைக் கணக்கிட்டுத்தான் இப்போது நாம் 2017ம் ஆண்டை ஹைக்கூவின் நூற்றாண்டாகக் கொண்டாடினோம். ஹைக்கூ கவிதைகளை முதன்முதலில் 1968ல் புதுக் கவிதையின் முன்னோடி என்று சொல்லப்படும் சி.மணி அவர்கள்தான் தமிழில் மொழிபெயர்த்ததாகவும் 1970ல் அப்துல் ரகுமான் அவர்கள் தனது ஹைக்கூ கவிதைகளை அதன் மரபு சார்ந்து வெளியிட்டதாகவும் அறிய முடிகிறது.

ஹைக்கூ கவிதைகளின் சிறப்பே கவிஞனின் சிந்தனை முழுவதையும் அது சொல்லிவிடாது. ஒரு சூழலைச் சுட்டிக்காட்டிவிட்டுச் சென்று விடும். வாசகன்தான் அதில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். ஹைக்கூவைப் பற்றிக் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் ,'சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம்' என்றும், 'வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி, ஆனால் தாரை வார்த்தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்குமாய்

விசுவரூபமெடுத்து மூவுலகையும் அளந்துவிடும் திரிவிக்கிரமன் மாதிரி' என்று, ஜூனியர் விகடனில் மின்மினிகள் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் தற்போது ஹைக்கூவிற்கென்று தனியாகப் பங்காற்றி வருபவர்கள் நிறைய பேர் இருந்தாலும் இப்போது முனைவர் ம.ரமேசும், மு.முருகேஷும் குறிப்பிடத்தக்கவர்கள். 'தமிழ் ஹைக்கூ இயக்கம்' என்ற அமைப்பை மிக நீண்ட காலமாக நடத்தி வருகிறார் மு. முருகேஷ் அவர்கள். ம.ரமேசு அவர்களும் முகநூலின் வழியாக ஹைக்கூ கற்பித்தலைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். இவர்கள் இருவருமே ஜப்பான் ஹைக்கூ கிளப்பின் விழாவில் கலந்து கொண்டவர்கள் என்பதும் மிகச் சிறப்பானது.

இன்று உலகமெங்கும் ஹைக்கூ கவிதைகள் தங்களின் ஆக்கிரமிப்பை நிகழ்த்தி வருகின்றன. அமெரிக்கா, பிரான்சு போன்ற மேலை நாடுகளில் கூட ஹைக்கூவிற்கென்றே அகாடமி போன்ற அமைப்புகளைத் தொடங்கி விவாதித்தும் வருகிறார்கள். ஹைக்கூ இயக்கங்கள் இன்று உலகம் முழுவதும் பரவலாக விரிந்திருக்கிறது. அரபு நாடுகளில் கூட இதன் விவாதம் நடைபெறுவதைக் காண முடிகிறது. அரபியர் களின் பழைய கவிதை வடிவம் ஒன்றை ஒத்ததாக இது இருக்கிறது என்று சிரியாவின் எழுத்தாளர் முகம்மத் அதிமா சொல்கிறார்.

அமெரிக்காவில், 1968ல் ஹெரால்டு ஜி ஆண்டர்சன் (Harold G Henderson), லரோய் காண்டர்மேன் (Leroy Kanterman) என்ற இருவரால் தொடங்கப்பட்ட ஹைக்கூ சொசைட்டி ஆஃப் அமெரிக்கா இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஹைக்கூ சம்பந்தமான விவாதப் பட்டறைகள், விரிவுரைகள், பயிற்சிகளென்று பல நிகழ்வுகளை நடத்திவருகிறது. இந்த சொசைட்டி மூலமாக 1978 முதல் FROG POND (தவளை குளம்) என்ற காலாண்டிதழும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த இதழ் ஹைக்கூ திறனாய்வுக் கட்டுரை களையும், கவிதைகளையும், மதிப்புரைகளையும் சிறந்த முறையில் வழங்கி வருகிறது.

இப்போது தமிழில் ஹைக்கூ என்று எழுதப்படுவதெல்லாம், ஹைக்கூ கவிதைகள் தானா? என்ற கேள்வியை எழுப்பினால், பெரும்பாலும் அவை ஹைக்கூ கவிதைகளே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். அவற்றை ஆர்வக்கூ கவிதைகள் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். ஆர்வத்தின் காரணமாக நிறைய எழுதவேண்டும் என்ற ஆவலில் அவர்கள் ஆட்பட்டு விடுகிறார்கள். ஹைக்கூவிற்கே பொருந்தாத உவமைகளையும் உருவகங்களையும் ஏன் கற்பனைகளையும் கூட நுழைத்துவிடுகிறார்கள். அவர்களுக்குத் தெரிந்தது மூன்று வரி என்ற இலக்கணம் மட்டுமே. இப்படியாகப் பொய்க்கூ எழுதுபவர்கள் சற்று வசதியாக இருந்துவிட்டால் அது நூலாகவும் வடிவம் பெற்று ஹைக்கூ என்ற பெயரில் தவறான நூல்களாகவும் வெளிவந்து விடுகிறது.

அப்படி எழுதப்படும் அத்தனைக் கவிதை களும் மோசம் என்றும் நாம் சொல்லிவிட முடியாது. அவற்றிற்கு வேறு பெயரிட்டழைத்து அந்தக் கவிதைகளை அவர்கள் கௌரவிக்கலாம். அதுதான் ஹைக்கூவிற்கு அவர்கள் செய்யும் சிறப்பாகும்.

இப்படிப்பட்ட ஆர்வக் கவிதைகளை எழுதும் ஆர்வலர்களையும் விட்டுவிடாமல் ஆந்திராவின் தெலுங்கானாவைச் சேர்ந்த முன்னாள் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், மத்திய







சாகித்திய அகாடமி விருது பெற்றவருமான என்.கோபி அவர்கள் இவர்களுக்காகவே, தெலுங்கில் நானிலு (Naneelu) என்ற ஒரு புதுக்கவிதையின் வரி வடிவமொன்றை உருவாக்கி ஹைக்கூவிலிருந்து சற்று மாறுபடுத்தி, நான்கு வரிகளில் கவிதைகளை எழுதவும் பயிற்சியளித்து வருகிறார்.

நானிலு என்ற இந்தக் கவிதைகள் நான்கு வரிகளில் மட்டுமே இருக்க வேண்டும் என்பதுதான் என்.கோபி அவர்களின் முக்கிய நிபந்தனை. முதல் இரண்டு வரிகளில் கவிதை, தன் முழுமையைப் பெற்றுவிடக் கூடாது, அடுத்துவரும் இரண்டு வரிகள்தான் கவிதையை முடித்துவைக்க வேண்டும். இதற்கு அசை இலக்கணங்களைக் கொடுக்காமல், மொத்தம் 20லிருந்து 25 எழுத்துக்களை மட்டுமே எடுத்துக் கொள்ளுங்கள் என்ற எளிய நிபந்தனையை மட்டும் வைத்துள்ளார். இந்த முறைமை கூட நமக்கு ஹைக்கூ எழுதும் பயிற்சியை எளிதில் அளிக்கும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனாலும் இங்குக் கற்பனை உவமைகள் வந்து உட்கார்ந்து கொள்வதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**உதாரணம் :**

அரிசி மணி மீது
சித்திரம் அழகுதான்
அது பருக்கையாகும் போது
இன்னும் அழகு

***

மூளைக்குள் மழை
தேநீர் அருந்தினேன்
இப்போது நான்
வாட்டர் ஃப்ரூஃப்

(இவை இரண்டும் முனைவர். என் கோபி அவர்களின் கவிதைதான். மொழியாக்கம் எழுத்தாளர் : சாந்தாதத்.)

ஹைக்கூ என்பது, மொத்தமே மூன்று வரிகள் கொண்ட கவிதைகளாக இருந்தாலும், முதலிரண்டு அடிகள் என்றுமே கவிதைகளை முழுமையாக்கி விடாது. மூன்றாவதாக வரும் ஈற்றடிதான் கவிதையை முழுமையாக்கும். ஹைக்கூ கவிதைகளுக்கு உணர்ச்சிகள் கிடையாது, உணர்தல் மட்டுமே முக்கியம். அதுதான் ஆன்மாவின் ஆழம் வரை சென்று வெவ்வேறு பிம்பங்களைக் கட்டமைக்கிறது. உதாரணத்திற்கு, பார்க்கும் நிலா ஒன்றுதான் என்றாலும் பார்வையின் பொருளில் வித்தியாசப் படும். ஒருவருக்குப் பெண்ணின் முகமாகவும், ஒருவருக்குத் தொங்கும் விளக்காகவும். இதுதான் ஹைக்கூவின் மனநிலை.

கஸல் கவிதையின் தன்மையும் கூட ஓரளவிற்கு அப்படிப்பட்ட ஒன்றுதான். ஈற்றடியில் கவிதையின் தன்மையை மெருகேற்றும். இதிலொரு மாய அழகு தொக்கியிருப்பதை நம்மால் நிச்சயம் உணரமுடியும்.

இந்த 'பாஷோவின் பழைய குளம்' ஹைக்கூவைப் பற்றி விரிவாக உங்களுடன் பேசுவதை மட்டுமே செய்யப்போகிறது. மற்றவர்களைப் பற்றிக் குறை சொல்வதோ அல்லது இப்படித்தான் எழுத வேண்டும் என்று உங்களுக்கு அறிவுரைத்துக் கற்பிப்பதோ இதன் வேலை கிடையாது.

கவிதையென்பது ஆழ்மனத்தின் வெளிப்பாடு. அந்த ஆழ்மனத்திற்கென்ற கற்பிப்புகளை யாராலும் எளிதில் நிகழ்த்திவிட முடியாது. செயல்பாட்டிற்கான வழியை வேண்டுமென்றால் சொல்லி வழிகாட்டலாம். ஒரு வேளை அந்த வேலையை இந்தப் பழைய குளம் உங்களுக்குள்ளும் நிகழ்த்தி விடக்கூடும். அப்படி நிகழ்த்தினால் அது இந்தக் கட்டுரைக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசாகும்.

பாஷோ, ஷிகி போன்றவர்கள் கவிதைகளோடே வாழ்ந்து, கவிதைகளோடே திரிந்த தேசாந்திரிகள். அவர்களின் கவிதைகள், இன்றும் கூட பருவ காலங்களில் உட்கார்ந்து கொண்டு, வாழ்வியலை எளிதாகச் சொல்லிவிட்டுப் போகிறது. பொழுதுபோக்காக எழுதும் யாரும் இந்த வேலையை நிச்சயமாகச் செய்துவிட முடியாது. அவர்களுடைய இடம் இன்னமும் அப்படியேதான் இருக்கிறது, இன்றும் கூட அவர்கள்தான் ஹைக்கூவின் மாஸ்டர்கள்.

அவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும்போது இந்தக் கவிதை எளிதில் வசப்படுவது நிச்சயம்.

இப்போது முளைத்திருக்கும் ஹைக்கூ கவிதைகளில் பெரும்பாலானவை, குறைப் பிரசவத்தில் நழுவிப் பிறந்ததுதான் . இதற்கான முக்கியக் காரணம், ஹைக்கூ கவிதைகளைப் பற்றியும், அதன் மாஸ்டர்களைப் பற்றியும் மற்றும் அதன் சூழல் தன்மைகளைப் பற்றியும் கொஞ்சம் கூட நாம் தெரிந்து கொள்ளாததுதான். இந்தப் பழைய குளத்தால், அதனை முழுமையாகச் செய்ய முடியுமா? என்று கேட்டால் நிச்சயமாக முடியாது, சில இடங்களை மட்டுமே கோடிட்டுக் காட்டப் போகிறது. தாகம் எடுப்பவர்கள்தான் கிணற்றை அகழ்ந்து கொள்ள வேண்டும்.

' தாக்கத்தை ஏற்படுத்தாத எதுவுமே கவிதைகள் கிடையாது' என்று சொல்லும், கவிஞன் ஷெல்லி...ஒரு பூ மலர்வதைக் காண்பதற்காகவே, ஒரு பூச்செடியின் அருகில் ஓர் இரவு முழுவதும் தனியாகவே உட்கார்ந் திருந்தானாம். இது கூட ஒரு தவம்தான். இதைத்தான் ஜென் நிலையில் 'த்யான்' என்று சொல்கிறார்கள். அதனால்தான் அவனது கவிதைகள் இன்றும் கூட மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

பாஷோவின் வாழ்க்கையிலும் கூட இப்படியொரு சம்பவமுண்டு. அதைப் பிறகு பார்க்கலாம்.

'காட்சிகளையும், உணர்வுகளையும் நேரடியாக அணுகுகிறவன்தான் கவிஞனாக இருக்கமுடியும்' என்கிறார் ஷிகி.

'இருக்கும்போதே எவன் இயற்கை எய்துகிறானோ, அவன்தான் கவிஞன்' என்கிறார் மூத்த கவிஞர் ஈரோடு தமிழன்பன். 'ஒவ்வொரு வருக்குள்ளும் ஒரு கவிஞன் உட்கார்ந்திருக்கிறான்' என்று எளிமையாகச் சொல்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

கவிதையைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். கவிதையென்பது தானாகவே வரும்... அதனைப் பிடித்துத் தாள்களில் உட்காரவைப்பது மட்டும்தான் கவிஞனின் வேலை.

ஒரு ஜென் குருவிடம் சீடனொருவன் கவிதை எழுதுவதைப் பற்றிக் கேள்வி கேட்கிறான். அதற்கு அவனிடம் அவர், 'வானத்தில் என்ன தெரிகிறது?', என்று கேட்கிறார். அவன், 'நிலவு' என்கிறான். அப்படியென்றால் 'நிலவு என்று மட்டுமே எழுது. அது போதும்', என்று சொல்கிறார். பிறகு, 'மேகம் தெரிகிறது', என்று சொல்கிறான். 'அதையும் சேர்த்துக் கொள். பரவாயில்லை', என்கிறார். அதன் பிறகு ' இருண்ட மலையும் தெரிகிறது' என்கிறான். இப்போது ஜென் குரு சிஷ்யனிடம், 'மூன்றையுமே முழுமை செய், கவிதை வரும்' என்கிறார். இப்போது ஒரு கவிதை அங்கே உருவாகிறது.

வானில் நிலவு
வட்டமிடும் மேகம்
இருண்ட மலை

இதிலென்ன இருக்கிறது?

இந்தக் கவிதையை என் மனம் இப்படி விவரிக்கிறது. 'நம்முள் பல அதிசயங்கள் ஒளிந்திருந்தும் இருண்ட மலையைப் போன்று தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், வட்டமிடும் மேகங்களாய்ப் பிரச்சனைகள் நம்மை எப்போதும் சூழ்ந்து வருகின்றன, நிலவு என்ற வெளிச்சப்புள்ளி இன்னமும் நம்மை நம்பிக்கை யின் பக்கம் அழைத்துச் சென்று கொண்டே யிருக்கிறது'.

இப்படித்தான் அவரவர் மனதும் அவரவர் எண்ணப்படி புதுப்புதுக் கருத்துக்களை விவரிக்கும். அப்படி விவரித்தால்தான் அது கவிதையாகவே இருக்க முடியும்.

நவீனத்துவ, பின் நவீனத்துவக் கவிதைகளும் இந்த வேலையைத்தான் இப்போது செய்கின்றன. அதைப் புரிந்துகொள்ள நாம்தாம் முயற்சிப் பதில்லை. அதுதான் குழப்பத்திற்கான காரணம். இதைப் பற்றியும் ஒரு புரிதலுக்காக இங்கே குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது.

ஹைக்கூ கவிதைகளுக்கு முன்னோடி நம் தமிழ் கவிதைகள்தான் என்று, நாம் நிச்சயம் நெஞ்சு நிமிர்த்திச் சொல்லி விடலாம். வள்ளுவரின் குறள் பாக்கள், ஒன்றேமுக்காலடியில் சுருங்கச் சொல்லிப் பொருள்களை விரியச் செய்தன. திருக்குறளைப் பற்றி, புலவர் இடைக்காடர் இப்படிச் சொல்கிறார், 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'.

இதைக் கூட அவர் எவ்வளவு சிறியதாகவே சொல்லியுள்ளார் பாருங்கள்.

கவிதையென்பதின் இலக்கணமே இதுதான். கடுகளவே கவிதைகள் இருந்தாலும், அதனுள் ஏழு கடலையும் நுழைக்கும் சாமர்த்தியம் இருக்க

வேண்டும். மேலும் இங்குக் கடுகு என்பது பூமி போன்ற கோளவடிவ படிமம் என்பதையும் நாம் உணர வேண்டும். இதுதான் கவிதையின் யுக்தி. ஆத்திச்சூடி எழுதிய அவ்வையால் கூட ;ஆறுவது சினம்' என்று இரண்டே சொற்களில் நச்சென்று சொல்லிவிட்டுப் போகமுடிகிறது.

குறுகச் சொல்லிப் பொருளைக் கடலென விவரிப்பதில், நம் பழமொழி தாத்தன்கள் மிகச் சிறந்தவர்கள் என்று சொன்னால் அது மிகைக் கிடையாது.

'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'

இதில் கழுதை என்பது விலங்கல்ல. வாசற்காலின் இரண்டு பக்கமும் உள்ள பிடிமானக் கட்டைகள். வாசற்காலுக்குக் கற்பூர ஆரத்தி எடுத்துக் குங்குமம் வைத்தாலும் அதனைத் தாங்குவது சுவரிற்குள் மறைந்திருக்கும் அந்த பிடிமானக் கட்டைகள்தான். அதற்குள் அந்தக் கற்பூர வாசனைப் போய் சேரவே சேராது. அப்படி இருக்கும்போது கற்பூரம் காட்டுவது வீண் சம்பிரதாயம் என்று நம் பகுத்தறிவுத் தாத்தன்கள் உதிர்த்த மொழிதான் இது.

'கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே'

கப்பலை வாழ்க்கை என்ற படிமத்தில் வைத்துப் பார்க்கிறது, இந்தப் பழமொழி. கன்னம் என்பது திருட்டைக் குறிக்கும் சொல். வாழ்க்கையே நிலைகுலைந்து போனாலும் அல்லது அழியும் அளவிற்கே சென்றாலும், திருட்டை மட்டும் தொழிலாக என்றும் எடுத்துக் கொள்ளாதே என்பதைத்தான் மிக அருமையாக உணர்த்துகிறது இந்தப் பழமொழி.

நான்கு வரிகளில் நாலடியார் சொல்லாததையா நாம் சொல்லிவிடப் போகிறோம்? குறுகச் சொல்லி விளங்க வைப்பதில் நம் தமிழ் மூதாதையர்கள் கொஞ்சமும் சளைத்தவர்களல்ல. சித்தர்கள் வாழ்ந்த பூமி நம் தமிழ் மண். அவர்கள் இயற்கையோடு ஒன்றியே தங்களின் கவிதை களையும் வடித்தார்கள்.

ஹைக்கூவைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளும் முன்பாக போதி தர்மரின் த்யான் பற்றியும் ஜென் தத்துவங்களைப் பற்றியும் ஏன் இதற்காகப் பங்களிப்பு செய்த சாமுராய்களைப் பற்றியும் கூட, தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஹைக்கூ கவிதைகள், ஜப்பானின் கலாச்சாரப் பதிவுகளாகவே இன்றும் நிலைத்திருக்கின்றன. சுமியே என்றழைக்கப்படும் நீண்ட பட்டு பர்தாக்களில் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைகள் இப்போதும் அவர்களின் வீடுகளில் மட்டுமல்ல, வியாபார நிறுவனங்கள், பொதுவிடங்களிலும் கூட அலங்கரிப்பதை நாம் காணமுடியும். அவர்களின் திருமணவிழாக்களில் ஹைக்கூ பாடுவதும் வாழ்வியல் மரபாக மாறிவிட்டது. ஹைக்கூ வளர்ச்சிக்கென்றே அரசாங்கம் தனி கவனம் செலுத்துகிறது. மரபுகளைக் காப்பதில் ஜப்பானியர்கள் என்றுமே கலாச்சாரக் காவலர்கள் என்று சொல்லலாம்.

ஜப்பானியர்கள் கவிதைகளோடே வாழ்கிறார்கள், கவிதைகளைக் கொண்டாடு கிறார்கள். பருவகாலங்களை எப்போதும் கொண்டாடும் அம் மக்களுக்கு ஹைக்கூ எளிதில் வசப்பட்டு விடுகிறது. ஹைக்கூ என்பதை அவர்கள் கவிதையில் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ஹைக்கூ சித்திரங்களை உருவாக்குவதிலும் வெற்றி கண்டார்கள். இதுவும் பாஷோ காலத்திலேயே தொடங்கியது என்பது மிகவும் ஆச்சரியமானது. இது ஹைகா என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது. ஓவியங்களும் கவிதையின் மனம் கொண்டதுதான் என்பதை பாஷோ உணர்த்தினார். இப்போதும் கூட அங்குக் கடைகளில் ஹைக்கூ சித்திரங்கள் விற்பனை செய்யப்படுவதை நம்மால் காணமுடியும்.

இப்போதுள்ள நவீனத் தொழில்நுட்ப மேம்பாட்டினால் போட்டோ ஹைக்கூக்களையும் ஜப்பானியர்கள் உருவாக்கத் தொடங்கி விட்டார்கள். இப்போது அதன் மாஸ்டராக மிச்சியோ நக்கஹரா (Michio Nakahara), அதனை உலகம் முழுமைக்கும் விரிவு செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறார். இவற்றைப் பற்றியும் கூட பாஷோ வெட்டி வைத்த இந்தப் பழைய குளத்தில் நாம் ரசிக்கத்தான் போகிறோம்.

அதற்கு முன் தமிழில் ஒரு ஹைக்கூ,

**பிம்பங்களற்ற தனிமையில்**
**ஒன்றிலொன்று முகம் பார்த்தன**
**சலூன் கண்ணாடிகள்**

**– நா. முத்துக்குமார்**

**– இன்னும் தூர்வாருவோம்** ■



ஓவியம் : அழ. ரஜினிகாந்தன்

# தகவு பதில்கள்

**ஏகப்பட்ட இதழ்களுக்கு மத்தியில் ‘படைப்பு’ இதழ் எதற்கு?**

**– சந்தோஷ், சேலம்.**

நதிகள் பெருகப்பெருக வளம் நிலத்திற்குத் தானே.. இந்த நதியிலும் சற்று நனையுங்களேன்!

**புதுக்கவிதையா.. மரபுக்கவிதையா.. படைப்பின் ஆதரவு எதற்கு?**

**– கிறிஸ்டி, தஞ்சாவூர்.**

அந்தத் தாத்தாவுக்குச் சரியான நேரத்தில் தூங்கவேண்டும்.. சரியான நேரத்துக்கு எழுந்திருக்க வேண்டும்.. சரியான நேரத்துக்குச் சாப்பிட வேண்டும்.. எல்லாம் நேரப்படி. ஆனால் பாட்டி அப்படியில்லை.. எப்பொழுது பசிக்கிறதோ அப்பொழுதுதான் சாப்பிடுவார்.. பேரப்பிள்ளைகள் தூங்க எவ்வளவு நேரமானாலும் அதன்பின்தான் தூக்கம்.. எல்லாம் உணர்வுப்படி.. உறவுப்படி. எது சரி? இல்லறம் இனித்தால் எதுவும் சரிதானே!

**படைப்பு இதழில் அரசியல் கூடாதா?**

**– முத்தமிழ், புதுக்கோட்டை**

கூடலாமே! படைப்பு மறுப்பது கட்சி அரசியலைத்தான்.. கருத்து அரசியலை அல்ல.

**சிலேடைப் பாடல்கள் அறிவுப்பூர்வமானவையா?**

**– பாரதி, சென்னை.**

கட்டாயமாக.

பூனக்கி ஆறுகால் புள்ளினத்துக்கு ஒன்பதுகால்

ஆனைக்குக் கால் பதினேழு ஆனதே (காளமேகப்புலவர்)

எப்படி?

பூ(ன்)நக்கி - பூவில் தேனை நக்கி உண்ணும் தேனீக்கு ஆறுகால்.

புள்ளினம் - பறவை. பறவைக்கு ஒன்பது கால்.. $9*\frac{1}{4}=2\frac{1}{4}$, அதாவது இரண்டே கால்.

ஆனைக்குக் கால் பதினேழு $\frac{1}{4}*17=4\frac{1}{4}$ நாலேகால்.

எப்படி காளமேகப்புலவரின் கணிதத்திறனும் சிலேடைத்திறனும்!

**திருவள்ளுவர் காதலைப் பாடியிருக்கிறாரா?**

**– இரா. மணிமேகலா, திருச்சி**

காதல் காவியமே பாடியிருக்கிறார். கள் உண்டால்தான் மயக்கத்தைத் தரும், காதல் கண்டாலே மயக்கத்தைத் தருகிறதே! அவளிடத்தில் இரண்டு வகையான பார்வைகள் உள்ளன.. ஒன்று நோய் செய்யும், இன்னொன்று அந்நோய்க்கு மருந்து தரும்! நீங்கினால் சுடக்கூடிய நெருங்கினால் குளிரக்கூடிய நெருப்பை எங்கு பெற்றாள் இவள்? சூடாக உண்டால் என் நெஞ்சத்தில் உள்ள காதலரை அது சுட்டு விடாதா? பலப்பல இப்படி. ■



• கவி: றாம் சங்கரி
சித்திரம்: கொ.வடிவேல்

என் முன்னே
துருவேறிய சாவியொன்று கிடக்கிறது.
நிதம் காற்றின் கதவுகளைத் திறந்து
மழை, வெயிலின் வீட்டிற்கு
அழையா அதிதியாய்ச்
சென்று வந்த களைப்பில்
பெரும் மௌனத்தைத்
தம் மீது துருவாய் ஏற்றி
உறங்கிக் கொண்டிருக்கிறது.
இச்சாவியால்
திறக்கப்படாப் பூட்டும்
பூட்டோடு ஒரு கதவும்
கதவோடு ஒரு வீடும்
வீட்டினுள் என் போல் எவரும் கூட
தம்மை விடுவிக்கும்படி
அலறிக் கொண்டிருக்கலாம்.
ஏதும் செய்ய இயலாதவனாய்ச்
சாவியையே பார்த்தவாறிருக்கிறேன்
இதயம் படபடக்க
வெயில், மழையென
நாட்கள் பலவற்றால்
நானும் துருவேறியபடி.
இப்பொழுது,
என் பின்னிருந்து பார்க்கும் எவரேனும்
என்னைத் துருவேறிய சாவியென்றும்
என் இதயத்துடிப்பைக் கேட்டு
தான் அலறிக்கொண்டிருப்பதாகவும்
தம் கவிதையில்
எழுதிக் கொண்டிருக்கக்கூடும்
துருவேறி, இதயம் துடிதுடிக்க.. ■



• புதுமைப்பித்தன்
ஓவியங்கள் : கொ.வடிவேல்
அழ. ரஜினிகாந்தன்



# மகாமசானம்

**சா**யந்தரமாகிவிட்டால், நாகரிகம் என்பது இடித்துக் கொண்டும் இடிபட்டுக் கொண்டும் போகவேண்டிய ரஸ்தா என்பதைக் காட்டும்படியாகப் பட்டணம் மாறி விடுகிறது. அதிலும் தேகத்தின் நரம்பு முடிச்சுப் போல, நாலைந்து பெரிய ரஸ்தாக்களும், டிராம் போகும் ரஸ்தாக்களும் சந்திக்கும் இடமாகிவிட்டாலோ தொந்தரவு சகிக்கவே முடியாது. ஆபீஸிலிருந்து 'எச்சு'ப் போய் வருகிறவர்கள், இருட்டின் கோலாகலத்தை அநுபவிக்கவரும் அலங்கார உடை தரித்தவர்கள். மோட்டாரில் செல்லுவதற்கு இயலாத அவ்வளவு செயலற்ற அலங்கார வேஷ



வௌவால்கள் எல்லாம் ஏகமேனியாக, 'எல்லாம் ஒன்றே' என்று காட்டும் தன்மை பெற்றவர்கள் போல் இடித்துத் தள்ளிக்கொண்டு அவரவர் பாதையில் போவார்கள். அன்றும் அம்மாதிரியே போய்க்கொண்டிருந்தார்கள்.

'ஒற்றைவழிப் போக்குவரத்து' என்ற ஸஞ்சார நியதி வந்ததிலிருந்து உயர்ந்த அடுக்குக் கட்டிடங்களின் உச்சியின் மேல் நின்று கொண்டு பார்த்தால் அங்கே நாகரிகத்தின் சுழிப்புத் தெரியும். கரையைப் பீறிட்டுக் கொண்டு பாயும் வெள்ளத்தை அணைக்கட்டின்மேல் இருந்து கொண்டு பார்த்தால் எப்படியோ, அப்படி இருக்கும்.

நான் சொல்ல வந்த இடமும் அதுதான். மவுண்ட் ரோட் ரவுண்டாணா. மலைப்பழ மாம்பழக் கூடைக்காரிகளின் வரிசை. அவர் களுக்குப் பின்புறம் எச்சில் மாங்கொட்டையைக் குதப்பித் துப்பிவிட்டு, சீலையில் கையைத் துடைத்துக் கொள்ளும் 'மெட்ராஸ் பறச்சிங்கோ', கைத்தடியோடு 'சிலுமன்' கொடுத்து உலாவிக் கொண்டிருக்கும் காபூலிவாலா, முகம்மதியப் பிச்சைக்காரன், நொண்டிப் பிச்சைக்காரன், குஷ்டரோகப் பிச்சைக்காரன், ராத்திரித் 'தொழிலுக்குத் தயாராகும் யுவதி - பாதையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, நிம்மதியாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள் அவள் - அப்புறம் நானாவித, "என்ன சார் ரொம்ப நாளாச்சே", "பஸ் வந்துட்டுது", "ஏறு" என்கிற பேர்வழிகள் எல்லாம். அவசரம், அவசரம், அவசரம்...

அப்பொழுது அவன் ரஸ்தாவின் ஓரத்தில் உள்ள நடைபாதையில் படுத்துச் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

சாவதற்கு நல்ல இடம். சுகமான மர நிழல். வெக்கை தணிந்து அஸ்தமனமாகிவரும் சூரியன். "ஜே ஜே" என்ற ஜன இயக்கம். ராஜ கோலாகலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்பொழுது அவன் செத்துக் கொண்டிருந் தான்; சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

ஜனங்கள் அவ்வழியாகப் போய்க்கொண்டிருந் தார்கள்; வந்துகொண்டிருந்தார்கள். அவர் களுக்குத் தெரியாது; சிலர் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

அவன் கிழட்டுத் துருக்கப் பிச்சைக்காரன். தாடி மிகவும் நரைத்து விட்டது. மேலே அழுக்குப் பிடித்த கந்தை; கையையும் காலையும், மூப்பு போஷணையின்மை இரண்டும் சேர்ந்து சூம்பவைத்துவிட்டன. கால், காய்த்துப் போன கால்.

அவன் பக்கத்தில் தலைமாட்டில் இன்னும் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்து கொண்டிருந் தான். தகரக் குவளையில் தண்ணீரை எடுத்துக் கிழவனுடைய தலையைத் தூக்கி ஒரு மிடறு தண்ணீர் கொடுக்க முயன்றும் முடியாமையால் வாயை மட்டிலும் நனைத்தான். தன்னுடைய கைகளைத் தலைக்குக் கீழ்க் கொடுத்துத் தூக்க முயன்றான். படுத்துக் கிடந்த கிழவன், அதாவது செத்துக் கொண்டிருந்த கிழவன், தன் பக்கத்தில் காருண்ய ஸ்தல ஸ்தாபனத்தார் நிறுத்தி வைத்திருந்தார்களே, அந்தத் தகரப் பீப்பாய், அதை, பிடித்தபடியே தலையை நிமிர்த்த முயன்றான். அவன் கண்களில் ஒளி மங்கி விட்டது. அவன் உதடு நீலம் பூத்துவிட்டது. அவன் கதையெல்லாம் இன்னும் சிறிது நேரத்திற்குள் சம்பூர்ணமாகிவிடும். ஆனாலும் அவன் அந்தத் தகரப் பீப்பாயைப் பிடித்த பிடிப்பை விடவில்லை. பிடிப்பில் ஓர் ஆறுதல் இருந்தது; பலம் இருந்தது. பக்கத்தில் யாரோ தண்ணீர் கொடுக்கிறார்கள் என்ற பிரக்ஞை இருந்ததாக மட்டும் தெரியவில்லை. தண்ணீர் வந்தது; குடிக்க வேண்டும்; அவ்வளவுதான் அவன் மனதில். அதற்குமேல் நினைக்க விருப்பமில்லை; தேவையில்லை; திராணி இல்லை.

அப்போது டிராம் வண்டி ஏறுவதற்காக இரண்டு பேர் வந்தார்கள். இரண்டு பேரும் நின்றார்கள். ஆனால் டிராம் வரவில்லை. இருவரில் ஒருவர் தகப்பனார்; முப்பது வயசு. இரண்டாவது நபர், சிறு பெண் குழந்தை. நாலைந்து வயசு இருக்கும். அவரைப் பார்த்தால் தம் குடும்பத் தேவைகளைத் திருப்தி செய்து கொள்வதற்குக் கஷ்டப்படுபவராகத் தெரிய வில்லை. குழந்தை சாதாரணக் குழந்தை; ஆனால், தாய் சிறிதே கவனமுள்ளவள் என்பது தெரியும்படி, சுத்தமாக, படாடோபம் இல்லாமல் அலங்கரித்து விடப்பட்டிருந்தது.

குழந்தையும் தகப்பனாரும் டிராமுக்குக் காத்துக்கொண்டு நின்றார்கள். குழந்தை



அவருடைய ஆள்காட்டி விரலைப் பிடித்துக்கொண்டு நின்றது. நின்று கொண்டிருந்தவர்களுக்கு எதிர்ச் சாரியிலுள்ள கூடைக்காரி வைத்திருந்த மாம்பழம் நல்லதாகத் தெரிந்தது.

"குஞ்சு, நீ இங்கேயே நிக்கணும். அப்பா அந்தப் பக்கமாப் போய் ஒனக்கு மாம்பழம் வாங்கிண்டு வருவாளாம்" என்றார் அவர்.

"ஆகட்டும்" என்றது குழந்தை.

"நீ ரோட்டிலே இறங்கி வரவே படாது, தெரியுமா? வந்தாப் பழமில்லை" என்றார் அவர். 'குழந்தையைத் தனியே விடக்கூடாது' என்று அவர் மனசு குறுகுறுத்தது.

"இங்கியே நிக்கறேன் அப்பா" என்று கையடித்துக் கொடுப்பது போல அவரை அந்தப் பக்கம் போகும்படித் தூண்டியது குழந்தை.

மாம்பழ வேட்கையில் அவர் குழந்தையைத் தனியாக விட்டுவிட்டு ரஸ்தாவைக் குறுக்காகத் தாண்டி எதிர்ப்புறமாகச் சென்றார்.

குழந்தை தைரியமானது, இதற்கு முன் இவ்வாறு நின்று பழகியது என்றுதான் சொல்ல வேண்டும். முதல் பயத்தில் அப்பாவைத் தொடர்ந்த கண்கள் அப்புறம் பராக்குப் பார்ப்பதில் ஒன்றிவிட்டன.

சிவப்பு மோட்டார் ஒன்று அதன் கண்களைக் கவர, அந்தப் பக்கமாகவே பார்த்துக்கொண்டு நின்றது. அவசரப்பட்ட ஜீவன் ஒன்று குழந்தையைக் கவனிக்காமல் நடந்து போகையில் இடித்துவிட அதன் மனம் எந்த உலகில் ஓடுகிறதோ குழந்தை தள்ளாடியது. இடிபடாமல் நிற்பதற்காகச் சிவப்பு மோட்டார் பார்க்கும் ஆசையையும் துறந்து நடைபாதை ஓரத்தில் உள்ள சுவர் அருகில்போய் நின்று கொண்டது. சுவரில் ஒன்றி நின்று சாய்ந்துகொண்டு தன்னுடைய பைக்குள் கைபோட்டபடி நாலு திசைகளிலும் சுற்றிப் பார்த்தது.

செத்துக் கொண்டிருக்கும் அக்கிழவனும் அவனுடைய சாவுக்கு உதவி செய்து கொண்டிருக்கும் வேறு ஒருவனும் அதன் கண்ணில்பட, 'அதென்ன வேடிக்கை?' என்று பார்க்கத் தயங்கித் தயங்கி அவர்கள் பக்கம் நெருங்கியது.

'பால் குடிக்க மாட்டேன்' என்றால் அம்மா தன்னை மட்டும் வற்புறுத்தி டம்ளரில் வைத்துக் கொண்டு தன்னிடம் மல்லுக்கட்டி அதைப் புகட்டுவதும், அப்பா, 'வேண்டாம்' என்றால் பேசாதிருந்து விடுவதும் அதற்குத் தெரியும். பெரியவர்களுக்கு 'வேண்டாம்' என்று சொல்ல உரிமையுண்டு; அம்மாவானாலும் அவருக்குப் பயப்படுவாள் என்பது அந்தக் குழந்தையின் சித்தாந்தம். அதற்கு அது வேடிக்கையாக இருந்தது. பெரியவர்களுக்கு டம்ளரில் புகட்டுவதா என்று அதற்கு ஆச்சரியம்.

இந்த வேடிக்கையைப் பார்க்க அந்த இரண்டு அநாதைகளின் அருகில் சென்றது குழந்தை. கிழவனுடைய தலைப் பக்கம் நின்றது.

இளைய பிச்சைக்காரன் மறுமுறையும் கிழவன் தொண்டையை நனைக்க முயன்று கொண்டிருந் தான். அவனுக்குக் கைப்பழக்கம் போதாது. அவன் ஊற்ற முயன்றபோது, ஒன்று அதிகமாகக் குபுக்கென்று விழுந்து கழுத்தை நனைத்தது; அல்லது டம்ளரிலிருந்து விழவேயில்லை.

கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தான்.

குழந்தை நீரைப் பருகுவதற்கு வாயைக் குவிய வைப்பதுபோல வைத்துக்கொண்டு, தன்னுடைய கையில் உள்ள கற்பனை டம்ளரைப் பிடித்தபடி, "மெதுவா, மெதுவா" என்றது.

தண்ணீர் வார்த்தவன் ஏறிட்டுப் பார்த்தான். "அம்மா, நீ இங்கே நிக்கப்படாது; அப்படிப் போயிரம்மா" என்றான்.

"ஏன்?" என்றது குழந்தை.

"இவுரு சாவுறாரு" என்றான் பிச்சைக்காரன்.

"அப்படீன்னா?"

"சாவுறாரு அம்மா, செத்துப்போறாரு" என்று தலையைக் கொளக்கென்று போட்டுக் காண்பித்தான்.

அது குழந்தைக்கு நல்ல வேடிக்கையாகத் தோன்றியது.

"இன்னும் ஒருதரம் அப்படிக் காட்டு" என்றது.

கூட்டம் கூடிவிடக் கூடாது என்ற பயத்தில் பிச்சைக்காரன் வாயைப் பொத்திக்கொண்டு கையை மட்டும் காண்பித்தான்.

கிழவனுடைய தலைமாட்டில் அவனுடைய அந்திமக் கிரியைக்காக என்பதைக் குறிக்க இரண்டு தம்படிகள் போடப்பட்டிருந்தன. அவை குழந்தையின் கண்களில் பட்டன.

"பட்டாணி வாங்கிக் குடேன்" என்று படுத்துக் கிடந்தவரைச் சுட்டிக் காட்டியது.

தனக்குப் பிடித்தது மற்றவர்களுக்கும் பிடித்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கை அதற்கு.

எங்கே பெரியவர் யாராகிலும் வந்து தன் மீது மோசடிக் குற்றம் சாட்டப்போகிறார்களோ என்ற பயத்தில் நாலு பக்கமும் சுற்றிப் பார்த்துக் கொண்டு, "ஒங்கிட்டே துட்டு இருக்கா?" என்று கேட்டான் பிச்சைக்காரன்.

"இந்தா, ஒரு புதுத் துட்டு" என்று குழந்தை அவன் வசம் நீட்டியது.

அவன், குழந்தை கொடுத்ததைச் சட்டென்று வாங்கிக் கொண்டான். அது ஒரு புதுத் தம்படி. கோடீசுவரர்கள் அன்னதான சமாஜம் கட்டிப் பசிப்பிணியைப் போக்கிவிட முயலுவதுபோல், கடலில் காயம் கரைத்து வாசனையேற்றிவிட முயலுவதுபோல் குழந்தையும் தானம் செய்துவிட்டது.

பஞ்சடைந்த கண்ணோடு கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக்கொண்டு செத்துக் கொண்டிருந்தான். ஜனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள்; வந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் அவசரமாகப் போய்க் கொண்டிருந்த நபர் ஒருவரின் கையிலிருந்து ஓரணாச் சிதறிக் கீழே விழுந்தது. அது கூட நினைவில்லாமல் அவரும் நடந்துகொண்டு கூட்டத்தில் மறைந்தார். அவ்வளவு அவசரம். உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் அதைக் கவ்வியெடுத்தான். ஒருவரும் பார்க்கவில்லையே யென்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

"நீ போம்மா" என்று குழந்தையைப் பார்த்து மீண்டும் ஒருமுறை சொல்லிப் பார்த்தான்.

குழந்தை, "மாட்டேன்" என்று காலைப் பரப்பிக்கொண்டு நின்றது. முகத்தை வலித்து 'அழகு' காட்டியது.

"பாவா, கொஞ்சம் பாலு வாங்கியாறேன்" என்று சொல்லிக்கொண்டு இளம் பிச்சைக்காரன் எழுந்து எதிர்ச்சாரி ஓட்டலை நோக்கி நடந்தான்.

இது கிழவன் காதில் படவில்லை. அவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக்கொண்டிருந்தான்.

குழந்தைக்கு அவனை நன்றாகப் பார்க்க முடிந்தது. அருகில் போய் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தது. இப்பொழுது விரட்டுவதற்குச் 'சின்னப் பூச்சாண்டி' இல்லையல்லவா? தனக்குப் பக்கத்தில் குழந்தை நிற்பது கிழவனுக்குப் பிரக்ஞை இல்லாததால் தெரியவில்லை. அவன் ஓட்டைப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவனும் ஒரு பெரிய "ஓட்டை ஓடசல்" ஐந்துதானே! குழந்தைக்கு அவனுடைய மூஞ்சி, தாடி, அவன் வாயைத் திறப்பது எல்லாம் புதுமை. அவனுடைய நீலம் பார்த்த உதட்டில் ஓர் ஈ வந்து உட்கார்ந்தது; இரண்டாவது ஈ வந்து உட்கார்ந்தது; அதை ஓட்ட அவன் வாயைத் திறந்து உதட்டைக் கோணுவது குழந்தைக்கு வேடிக்கையாக இருந்தது. என்ன நினைத்ததோ மெதுவாகப் "பாவா" என்று இளம்பிச்சைக் காரனைப் போலக் கூப்பிட்டுப் பார்த்தது. உள்ளுக்குள் பயம், பூச்சாண்டி எழுந்து உட்கார்ந்து கொள்ளுமோ என்று.

படுத்துக் கிடந்தவன் கண்கள் விரியத் திறந்திருந்தன; கண்ணின் மணியின் மேல் ஓர் ஈ வந்து உட்கார்ந்து...

"என்னடி, அங்கே போய் நிக்கறே; ஒன்னை எங்கெயெல்லாம் பார்க்கிறது?" என்ற ஓர் அதட்டல் கேட்டது. பேரம் தர்க்கமாகி, தம் கணக்குக்குக் கூடைக்காரியை ஒப்புக் கொள்ளவைத்து இரண்டு மாம்பழங்களை வாங்கி வந்தவரின் நியாயமான கோபம் அது.

"இல்லேப்பா, அது பாவாப் பூச்சாண்டி; பாத்துண்டிருந்தேன்" என்றது குழந்தை ஓடி வந்து கொண்டே.

சிலர் மட்டும் ஏறிட்டுப் பார்த்தார்கள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டார் அவர்; அது பழத்தைத் தூக்க முடியாமல் தூக்கி மோந்து, "வாசனையா இருக்கே!" என்று மூக்கருகில் வைத்துத் தேய்த்துக் கொண்டது. ■



# சித்தி ஜுனைதா பேகம்

• நித்தியா
ஓவியம் : கொ.வடிவேல்

படைப்பூக்கம் பெற்றுவிட்டால் பெண்மையின் கைகளை எந்தத் தளையாலும் கட்டிவிடமுடியாது. பதினாறு வயதில் எழுதத்தொடங்கிய இஸ்லாமியப் பெண்மணியான சித்தி ஜுனைதா பேகம் அம்மையாரின் எழுத்துப் பயணத்தை எந்தச் சூழலாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை.

நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம் என எழுதிக் குவித்த ஜுனைதா பேகம் அம்மையார்தான் இஸ்லாமியப் பெண்களில் தமிழில் முதன்முதலாக நாவல் படைத்தவர்.

1917ஆம் ஆண்டு பிறந்த சித்தி ஜுனைதாபேகம் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த கிருத்துவர்களால் நடத்தப்பெற்ற ஒரு பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளார். மேற்கொண்டு படிக்க அவருடைய தாயார் அனுமதிக்கவில்லை. இவரது பன்னிரண்டாம் வயதில் திருமணம் நடைபெற்றது.

மளிகைக் கடை வணிகம் செய்துவந்த அவரது கணவர் மலேசியாவில் உள்ள பூலோசாம்பு என்ற தீவிற்கு வேலை தொடர்பாகச் சென்றுள்ளார். இரண்டாம் உலகப்போரின்போது அங்கேயே நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளார்.

இளமைப் பருவத்திலேயே கணவனை இழந்த சித்தி ஜுனைதா பேகத்திற்கு நான்கு குழந்தைகள். நாகூரிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் சென்று வாடகை வீட்டில் சில ஆண்டுகள் தங்கிக் குழந்தைகளைப் படிக்க வைத்துள்ளார். தனி ஒருவராகவே நின்று குழந்தைகளை வளர்த்துள்ளார்.

ஜுனைதா பேகம் தீவிரமாக எழுத ஆரம்பித்தது திருமணத்திற்குப் பின்தான். குறிப்பாக, கணவரை இழந்தபின்தான். முஸ்லீம் பெண்கள் எழுதுவதில்லை. அதிலும் மூன்றாவது வரை மட்டுமே படித்த ஜுனைதா பேகம் அம்மையார் எழுதியதும், தன் பெயரையும்



போட்டு, வீட்டு முகவரியைக் கொடுத்து, உருவப் படங்களுடன் கூடிய புத்தகமாக வெளியிட்டுள்ளது அவரது துணிச்சலை நமக்கு உணர்த்துகிறது.

இவருடைய காதலா? கடமையா? நாவலுக்குத் 'தாருல் இஸ்லாம்' ஆசிரியரும், நபிகள் நாயக மாண்பினை எழுதிய பெரியாருமான பா. தாவுத் ஷாசாகிபு அவர்களிடம் மதிப்புரை கேட்டுள்ளார். இவர் அம்மையாரின் தந்தைக்கு நண்பராம். "இது ஒரு பெரிய திறமையா? இதற்கு ஒரு மதிப்புரை தேவையா?" என்று ஏளனமாகப் பேசியதை மற்றொருவர் மூலம் அம்மையார் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் உ.வே.சா. அவர்களின் மதிப்புரையில் அம்மையாரை, "முகம்மதியர்களுள்ளும் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள பெண்மக்கள் இருக்கிறார்கள் என்பதை இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. இதன் நடை யாவரும் படித்தறிந்து மகிழும்படி அமைந்திருக்கிறது. கதைப் போக்கும் நன்றாக உள்ளது," என்று புகழ்ந்து எழுதியது அவரைப் பெரிதும் ஊக்கப்படுத்தி மகிழ்வித்திருக்கிறது. இது நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ள செய்தியாகும்.

"முஸ்லீம் பெண்டிர் எழுத முன்வருவதை நாம் வரவேற்கிறோம்" என்று புதுமைப் பித்தன் பாராட்டியுள்ளதும் ஊக்கப் படுத்தும் விதமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல் இவரின் படைப்புகள் வெளிவரப் பலர் உதவியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களைத் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். தன் கணவர், பாட்டனார் முயூநவாபு சாகிபு மரைக்காயர், சகோதரர் மு.ஹுசைன் முனவ்வர், பேராசிரியர்கள் கே.எம்.காதிர் மொகிதின், முகம்மது நபி, கலைமாமணி கவி கா.மு.ஷெரீப், சிற்றன்னை ஹதீஜா நாச்சியார் ஆகியோர் அவருக்கு மிக்க உதவி புரிந்தவர்கள்.

நாவல் வெளிவந்த பிறகு பல எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கிறார். 'ஒரு முஸ்லீம் பெண் நாவல் எழுதுவதா? அதுவும் 'காதல்' என்ற சொல்லுடன், எவ்வளவு நெஞ்சழுத்தம் வேண்டும்', இப்படிப் பல கடுஞ்சொற்களைச் சந்தித்திருக்கிறார். ஊரே கூட்டம்கூட்டமாகத் திரண்டுவந்து இவரைக் கேலி பேசியிருக்கிறது. இவை எல்லா வற்றையும் கடந்து இவர் எழுதுவதில் ஆர்வம் காட்டியுள்ளார்.

இவர், காப்பியங்களும், வண்ணங்களும் இயற்றிய புலவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய செய்தியாகும். இவரது காதலா? கடமையா? எனும் நூல் 1938ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதல் நாவலாகும். இவரது மற்றொரு நாவலான சண்பகவல்லி தேவி மற்றும் சில கட்டுரைகளும் இந்நூலுடன் தற்பொழுது இடம் பெற்றுள்ளன. இவருடைய பல கட்டுரைகள் இஸ்லாமிய இதழ்களில் வெளிவந்துள்ளன. அவற்றுள் பதினான்கு கட்டுரைகள் இஸ்லாமும் பெண்களும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஜுனைதா பேகம் அம்மையார் தொடக்கத்திலிருந்தே உடல்நலக்குறைவு பட்டிருந்தாலும் 1979-80களில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுச் சித்த மருத்துவம் செய்துகொண்டுள்ளார். 19.3.1998 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

இறப்பதற்கு நான்கைந்து நாட்களுக்கு முன்கூட அவர் எழுதிக்கொண்டும் படித்துக் கொண்டுமிருந்தார் என்ற தகவல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சூழல்கள் எத்தனைத் தடைகளை முன்வைத்தாலும் உள்ளத்தில் உத்வேகத் தோடு உழைத்தால் உன்னத நிலை அடையலாம் என்ற கருத்தினைத் தன் வாழ்வின் மூலம் உணர்த்திச் சென்றுள்ளார் இலக்கியவாதி சித்தி ஜுனைதா பேகம். ■

• கவி: நிலாகண்ணன்
சித்திரம்: கொ.வடிவேல்

# ரோஜாத்துயரம்



கண்ணீர் குட்டைகளைத் தாண்டி
யாருடைய கதறலுக்கும் செவிமடுக்காத
ஒரு குதிரை
பறை மீது மிக வேகமாக ஓடுகிறது,
பனைமரம்
ஏறி எங்களைப்
படிக்கவைத்த அப்பா
கழுத்தில் மாலைகளோடு ஒரு பேரரசனைப்போல
அதில் பயணம் போகின்றார்
சகோதரியும் நானும் கண்ணீர் மல்க
அவர் மறையும்வரை பார்த்தபடி நின்றோம்.
இனி திரும்பிவராதவருக்காகப்
பாதையெங்கும் அடையாளமிட்ட
பூக்களால் வீதியெங்கும்
ஒரே ரோஜாத்துயரம்.
எல்லாம் முடிந்து
குளிக்கும் பொருட்டு
மண்ணில் இறக்கிவைக்கப்பட்ட
இரண்டு பறைகளும் களைத்திருந்தன,
அம்மாவின் கண்களைப்போல. ■

• பொள்ளாச்சி அபி

# “நொய்யல் இன்று”

## – பொங்கி அழித்த காட்டாற்றின் பயணம்!




பண்டைய கிரேக்க, ரோமானியப் பேரரசுகளின் கீழ் வசித்துவந்த செல்வந்தர்கள், தங்களின் சிறப்புக்குரிய அடையாளமாகவும், கௌரவமிக்கதாகவும், தமிழகத்தின் நொய்யல் ஆற்றங்கரையிலிருந்து கிடைக்கப்பெற்ற மதிப்புமிக்க நவரத்தினக்கற்கள் பதித்த ஆபரணங்களை அணிந்துகொள்வதை வழக்கமாக வைத்திருந்தனர்.

இந்தக் கற்களை வாங்குவதற்காகத் தம் நாட்டு மக்கள் செலவழிக்கும் தொகையால் நாட்டின் செல்வம் ஏராளமாகச் செலவழிந்து கொண்டிருந்ததால், நொய்யல் கற்களை வாங்குவதற்கு அந்த நாட்டு அரசுகள் தடைவிதித்த வரலாறுகூட உண்டு.

நொய்யலாற்றின் வளமிக்க கரைப்பகுதிகளை ஆட்சி புரிவதற்காக,சேர சோழ பாண்டியர்கள் என முப்பெரும் அரசுகளுக்கிடையே ஏராளமான போர்கள் நிகழ்ந்த வரலாறுகளும் உண்டு. அதேபோல், இந்தியத் தீபகற்பத்திற்கு வெளியிலிருந்து படையெடுத்த அரசுகளும், வாணிபத்தில் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ள முனைந்த அரசுகளும்... எனப் பெரும் பட்டியலும் இருக்கிறது.

வங்கக்கடல் வழியாக வந்து, காவிரியில் பயணித்து, அதன் வழியாக நொய்யல் நதியில் நுழைந்து, அதன் பாதையெங்கும் இருந்த பகுதிகளில் வாணிபம் செய்ய வந்தவர்கள், அன்றைய சேர நாடு வரை செல்வதற்கும், தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் வசதியாக முப்பெரும் பேரரசுகள் அமைத்த “இராஜகேசரி பெருவழி” எனப்படுகிற இராஜபாட்டைகளைக்

கொண்டதாகச் சிறப்புப் பெற்றிருந்ததுதான் காஞ்சி மாநதி எனப்பட்ட நொய்யல் நதி.

இந்நதிக்கரையில் செய்த அகழ்வாராய்ச்சிகள் அள்ளித்தந்த தங்க, வெள்ளி, செப்புக் காசுகளும், பட்டையங்களும், இராஜமுத்திரைகளும், உலோக, கற்சிலைகளும், இலக்கியங்கள் புராணக் கதைகளோடு அவற்றிற்கிருந்த தொடர்புகளும் என, இந் நதிவழிப்பாதை இன்னொரு “கீழடி”யாக, பெரும் புதையலாகவே இருக்கிறது.

உலகமெங்கும் நதிக்கரைகள் நகர நாகரீகங்களை வளர்த்துக் கொண்டிருந்தபோது, நொய்யல் நதி தன் கரைகளில் நாகரீக நகரங்களை உருவாக்கிக் கொண்டிருந்த வரலாறுகளை நமக்குத் தந்திருக்கிறது.

நொய்யலாறு வளப்படுத்திய கரைகளில் இருந்த வனங்களில் பலவகையான உயிரினங்கள், பறவையினங்கள், பல்வேறுவகையான மரங்கள் உட்பட தாவர வகைகள் மட்டுமின்றி, இங்கு மட்டுமே இருக்கும் தனிச்சிறப்புப் பெற்ற உயிரினங்களும் இருந்தன. இதுபோக வெளிநாடுகளிலிருந்து பல பருவங்களில், விருந்தினர்களாக வரும் பறவைக்கூட்டங்களும் உண்டு.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் விளைந்த மூலிகைகளின் சாறெடுத்துத் தன்னை மருத்துவ குணமிக்கதாய் மாற்றிக் கொண்ட நொய்யலாற்றின் தெளிந்த நீரோட்டத்தில் உல்லாசமாக நெளிந்து கொண்டிருந்த மீன் வகைகளின் எண்ணிக்கையையும்,நீர்வாழ் உயிரிகளின் எண்ணிக்கையையும், அவற்றின் சிறப்புகளையும் எழுதுவதென்றால்,நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களைப் பதிப்பிக்க வேண்டும்.

நொய்யலின் நீர்வளத்தை முறைப்படி பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்காகப் பிற்காலச் சோழர்களின் ஆட்சி முதல், அதற்குப்பின் வந்த அரசாட்சிகளின் மூலமும், நொய்யல் நதிவழிப் பாதைகளில் 32 அணைகளும், 40க்கும் மேற்பட்ட குளங்களும் சங்கிலித் தொடர்களைப் போல வெட்டப்பட்டன. இவற்றின் மூலம் பலஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்றன. பல லட்சம் குடும்பங்கள் பிழைத்தன.

இப்படி நமது மூதாதையர்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து, கொங்கு மண்டலத்தின் தனித்த அடையாளமாக, வரலாறுகளை உருவாக்கிய நொய்யல் நதிதான்.. இன்றைக்கும் புதிய வரலாறு படைத்திருக்கிறது.!



கா.சு.வேலாயுதன்

அது என்ன புதிய வரலாறு.?

வரலாற்றின் பக்கங்களிலிருந்தும், வரைபடத்தின் வளைவுகளிலிருந்தும், மக்களின் மனங்களிலிருந்தும் அழிந்து கொண்டிருக்கும் ஒரு நதியாக நொய்யல் மாறிக் கொண்டிருக்கிறது.

ஒரே நாளில் பத்துலட்சம் மீன்கள் செத்து மிதந்திருக்கின்றன. அந்நிய தேசங்களிலிருந்து வந்து கொண்டிருந்த பறவைகளின் வரத்து நின்றிருக்கிறது. கரையோரப் பகுதிகளில் இருந்த வனங்கள் தொலைந்திருக்கின்றன. இந்நதி வளப்படுத்திய வனங்கள் உல்லாச வசிப்பிடங் களாக மாறியிருக்கின்றன. வனங்களில் வசித்து வந்த, இயற்கையைச் சமநிலையில் வைத்திருந்த விலங்குகள் அழிந்திருக்கின்றன.

தெளிந்த நீருக்கு வண்ணமில்லை என்ற அறிவியல் இங்கு பொய்த்திருக்கிறது. உடைகளில் காட்சிப்படும் அத்தனை வண்ணங்களையும் பிரதிபலித்துக்கொண்டு இந்நதி ஓடிக் கொண்டிருக்கிறது.

பயிருக்குச் சுவையூட்ட பாசனக் கால்வாய் களிலும், வரப்புகளின் இடையேயும் ஓடிக் கொண்டிருந்த நொய்யலின் நீர், இன்று அவற்றில் விஷம் ஊட்டிக் கொண்டிருக்கிறது.

அணையிலிருந்து பாசனத்திற்கு நீர்வேண்டும் என்ற கோரிக்கையோடு நாட்டின் பலபகுதிகளில் விவசாயிகள் குரல் கொடுக்கும்போது,அதற்கு மாறாக அணையைத் தயவுசெய்து திறந்து விடாதீர்கள் என அரசுக்குக் கோரிக்கை வைக்கும் விவசாயிகளை இந்நதி உற்பத்தி செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இந்நதி பாய்கின்ற பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களை நிரந்தர

நோயாளிகளாக்கி வைத்திருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சின்னா பின்னமாகத் தொடங்கிய வாழ்க்கையிலிருந்து மீள முடியாத மக்கள் பெருந்திரளின் நிரந்தர சோகமாக மாறியிருக்கிறது நொய்யல் நதி.

தங்கள் நாட்டின் தொன்மை மிக்க அடையாளங்களைத் தக்கவைத்துக் கொள் வதையும், தற்காத்துக் கொள்வதையும், அவற்றைப் பேணிக்காப்பதையும் மிகக் கௌரவமாக நினைப்பதுதான், இப்போதுவரை உலகநாடுகளின் வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், அத்தனை தொன்மத்தையும், வரலாற்றுப் புதையல்களையும் தனக்குள் கொண்டிருக்கும் ஒரு நதி இப்படி சீர் கெட்டுப் போகக் காரணங்கள் என்னவாயிருக்கும்.?

மாசிலாத தாய்ப்பாலைப் போல ஓடிக் கொண்டிருந்த ஒரு நதி, மாசுகளின் மொத்த உருவமாக மாறிப் போனதற்குக் காரணங்கள் என்னவாயிருக்கும்.?

நோய்களைக் குணப்படுத்தும் சக்தியுண்டு என்று நிரூபித்துக் கொண்டிருந்த ஒரு நதி, நோய்களை அள்ளித் தருகின்ற அமில வெள்ளமாக மாறிப் போன ரகசியங்கள் என்னவாயிருக்கும்.?

ஒரு போத்தல் தண்ணீரை இருபது ரூபாய் கொடுத்து வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கும் நாம், ‘உங்களுக்கு ஓட்டுப் போட்ட பாவத்திற்காகக் குடிக்கவும், குளிக்கவும் ஒரு குடம் தண்ணீராவது கொடுக்க வழிசெய்யுங்கள்’ என்று நாட்டின் ஏதாவதொரு மூலையில் அன்றாடமும் நடுச்சாலையில் அமர்ந்து கதறிக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாம், மூன்றாம் உலகப் போர் நீருக்காகத்தான் நடக்கும் என்ற எதிர்கால அச்சத்தில் உறைந்து போயிருக்கும் நாம்.., ஒரு நதி மரணித்துப் போனது ஏன் எனத் தெரிந்து கொள்ளவேண்டாமா.?

இவ்வாறான மனதைக் குத்திக் குடையும் பல்வேறு கேள்விகளுக்கு விடைசொல்கிறது கா.சு.வேலாயுதன் அவர்கள் எழுதி, சமீபத்தில் வெளியிடப்பட்ட “நொய்யல் இன்று - பொங்கி அழித்த காட்டாற்றின் பயணம்” என்ற நூல். தி இந்து தமிழ் நாளிதழில் தொடராக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் வெளிவந்திருக்கிறது.

சிறுகதைகள், நாவல், கட்டுரைகள் எனப் பல நூல்களை எழுதியுள்ள கா.சு.வேலாயுதன், பத்திரிகைத் துறையிலும் பழுத்த அனுபவம் கொண்டவர். தனது தேர்ந்த நடையின் மூலம், கோவை மாவட்டத்தில் தென் கயிலாயம் எனப்படுகிற வெள்ளியங்கிரி மலையில் உற்பத்தியாகும் நொய்யல் நதியின் பிறப்பிடம் முதல் அது கரூர் மாவட்டம் நொய்யல் கிராமத்தில் காவிரி ஆற்றில் கலக்கும் பகுதி வரை, இந்நதியின் பயணத்தை அங்குலம் அங்குலமாக அலசியிருக்கிறார்.

அந்த வகையில் நொய்யல் நதி குறித்த ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்ற இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் நொய்யலாற்றின் பாதையையும், பரப்பையும், அணைகள் குளங்களின் நிலையையும் அவர் விவரித்துச் செல்லும்போது ஒரு துல்லியமான வரைபடம் வாசகர் நெஞ்சில் கோடிட்டுக் கொண்டே செல்வதைத் தவிர்க்க முடியாது. அக் கோடுகளின் வளைவுகள் ஒவ்வொன்றும் ஒரு கேள்விக்குறியாகவும் நமக்குள் மாறிக் கொண்டே இருக்கிறது.

குளக்கரைகளில் மரம் வளர்ப்பதற்குப் பதில், சமூகக் காடுகளை வளர்ப்பதாகச் சொல்லி தூர்வாராமல் விட்ட குளங்களின் நடுவில், கருவேல மரங்களை வளர்த்த வனத்துறையின் அலட்சியம்....

குளங்களின் இணைப்பைத் துண்டித்து, அவற்றின் பரப்பை ஆக்ரமித்து, அதன் மீது பேருந்து நிலையங்களைக் கட்டிய அதிகாரிகளின் அலட்சியம்...

கி.மு., கி.பி. என வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நொய்யல் நதி வழிப்பாதையில் இருந்த அணைகளின், குளங்களின் எண்ணிக்கை தெரியாத பொதுப்பணித்துறையினரின் அலட்சியம்...

அந்நியச் செலாவணி அதிகரித்தால் போதும், நதியின் அமிலத்தன்மை குறித்துக் கவலை யில்லையென நீரோட்டத்தில் சாயக்கழிவுகளைக் கலக்கவிட்ட பெருமுதலாளிகளின் அலட்சியம்...

கண்ணை மறைத்த லஞ்சத்தால் மாசுபட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அலட்சியம்...

இவையனைத்திற்கும் தகுந்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்கிற பிரதிநிதிகளைக் கொண்ட அரசின் அலட்சியம்...

என நீளும் வரிசையின் மூலத்தொடக்கமாக இருக்கின்ற, இவர்களுக்கெல்லாம் ஓட்டுப்போடும் யந்திரமாக மட்டுமே மாறிவிட்ட மக்களாகிய நமது அலட்சியமும்... எவ்வாறு காரணங்களாக இருக்கின்றன என விரிவாக அம்பலப்படுத்துகிறது இந்நூல்.

அறிவியல் வளர்ச்சியைச் சிகரமாகக் கொண்டு, கண்டதையும் கண்டுபிடிக்கிற மேல்நாடுகளுக்கு, பல்லாயிரம் கோடிகளை அந்நியச் செலாவணியாய் நமக்குத் தருகிற மேல்நாடுகளுக்கு, பனியன் தொழிலில் மட்டும் ஒரு பனியனைத் தயாரித்து, அதற்குச் சாயம் போடத் தெரியாமலா இருக்கும்.? என்ற கேள்வி இந்நூலைப் படிக்கும்போது நமக்குள் எழாமல் இல்லை.

அவர்களுக்கும் தெரியும். ஆனால், அதற்குத் தேவைப்படுகிற நீர்வளத்தை மேல்நாட்டினர் செலவழிக்கத் தயாராய் இல்லை. இயற்கையை ஊறு செய்யும் எதனையும் ஊக்குவிக்கக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாய் இருக்கிறார்கள் என்பதே நமக்குக் கிடைக்கும் பதில்கள் என்பதே நிதர்சனம்.

இந்நிலையில், தொழில்நுட்ப உதவி, அந்நிய முதலீடு, நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.. போன்ற அலங்கார வார்த்தைகளுக்குப் பின்னே பலியாகிக் கொண்டிருப்பது நமது இயற்கை வளம்தான் என்ற உண்மையும் கன்னத்தில் அறைகிறது.

“இப்போது “ஜீரோ பர்சென்ட் டிஸ்சார்ஜ்” எனும் தொழில் நுட்பத்தின்படி, சாயக்கழிவுகளை நொய்யலாற்றில் விடுவதில்லை..!” எனத் திருப்பூர் சாயத்தொழில் பட்டறைகள் அறிவித்தாலும், இப்போதும் நொய்யலில் படிந்துவரும் கழிவுகளும், மாசுகளும், பொங்கிவரும் அமில நுரைகளும் இந்த அறிவிப்பின் நம்பகத் தன்மையைக் காப்பாற்றுவதாக இல்லை.

நொய்யலைக் காப்பாற்றுவதாகச் சொல்லி அரசு ஒதுக்கிய கோடிகள் சென்று சேர்ந்தது எந்தக் கோடியில்..? என்று தெரியாத கவலையும் நம்மை ஆட்டுவிக்கிறது.

ஆட்டிவைக்கும் கவலைகள் எத்தனையோ இருக்கையில் அதோடு இதுவும் ஒன்று..என நாம் இப்போது கடந்துவிடமுடியாது. காரணம், கவலைப்படுவதற்காகவாவது நாமும் நமது சந்ததியும் உயிரோடு இருக்கவேண்டுமே.!

காவிரி ஆற்றில் கலக்கவிடப்படும் நொய்யலின் மாசடைந்த சாயக்கழிவு நீரின் மூலம், முதலில் தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சையும், பின்னர் மொத்தத் தமிழ்நாடும் குப்பைத் தொட்டியாகக்கூடும் ஆபத்து அருகே நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்ற, நாம் எளிதில் அசட்டை செய்துவிடமுடியாத ஒரு எச்சரிக்கைக் குரலாகவே இந்த நூலை நான் பார்க்கிறேன்.

மேலும், கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கும் விடப்பட்டிருக்கிற இந்த எச்சரிக்கைக் குரலின் மூலம், இப்போதிருந்தாவது இந்நதியை மீட்பதற்குச் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், மக்கள் என ஒருங்கிணைந்த செயல்பாடுகளையும், போராட்டங்களையும் நாம் முன்னெடுக்கவேண்டிய காலமாகப் புரிந்து கொள்ளத் தூண்டுகிறது.

இந்த அவசியத்தை இப்போதும் நாம் புரிந்து கொள்ளவில்லை எனில், கவிஞர் புவியரசு அவர்களின் வார்த்தையிலேயே சொல்ல வேண்டுமெனில், “நம் தாயைப் பக்கவாட்டில் நெருக்கி நெருக்கி அசையமுடியாமல் செய்த ஆக்கிரமிப்பாளர்கள் யாராயினும், அவர்கள் நாசமாய்ப்போகட்டும். சாகும்போது அவர்களுக்கு ஒருவாய் தண்ணீர்கூட கிடைக்காமல் போகட்டும்..!” என்று ஆக்கிரமிப்பாளர்கள் குறித்து மனம் நொந்து அவர் சொல்லிய வார்த்தைகள்... நமக்கும் பொருந்திப் போகும் என்பதே நிதர்சனம்..!.

**நூல்: நொய்யல் இன்று**
**– பொங்கி அழித்த காட்டாற்றின் பயணம்**

நூலாசிரியர் : **கா.சு.வேலாயுதன்**

விலை: ரூ.140, பக்கம்: 206

சப்னா புக் ஹவுஸ் வெளியீடு, கோவை.

தொடர்புக்கு:

74013 29405, 0422-4629999



• பாடியவர் : புஷ்பவள்ளி
பாடல் பெற்றுத் தந்தவர் : சு.சங்கமித்திரா
ஓவியம் : கொ.வடிவேல்

ஏ ஆலமரத்தடில.. அண்டுங் கிளி ஆயிரமாம்
ஏ... அண்டுங் கிளி ஆயிரமாம், அலைஞ்ச கிளி நாந்தானம்மா...

ஏ... கொய்யா மரத்தடில.. குந்துங் கிளி ஆயிரமாம்
ஏ... குந்துங் கிளி ஆயிரமாம், கொறஞ்ச கிளி நாந்தானம்மா

ஏ... ஆத்துச் சருக்கலிலே.. அவரக்கா காச்சிருக்கோ
அலக்குப் போட்டுக் காயறுக்க, அரிச்சந்திரன் எங்க தம்பி

ஏ... கொளத்துச் சருக்கலிலே.. கொத்தரங்கா காச்சிருக்கோ
ஏ... கொக்கிப் போட்டுக் காயறுக்க, கோவலரு எங்க தம்பி

ஏ... ஐஞ்சிவிதக் கூட்டுவண்டி.. எல்லையில ஓடும் வண்டி
நான் எல்லைக்கு எல்லையான எம்மா எல்லாருக்கும் சொல்லுமானேன்.

ஏ..... பத்துவிதக் கூட்டுவண்டி.. நம்ம பாதையில ஓடும் வண்டி
ஏ... பாதைக்குப் பாதையாக நான் பாத்தாருக்கும் சொல்லுமானேன்.

ஏ... பாப்பான் தவள வாங்கி பாதயிலப் பொங்குனாலும்
ஏ... பாதவழி போற சனம் எம்மா பாத்த சனம் பாவமிங்கும்.

ஏ... நான் காசித் தவள வாங்கி காட்டுலதான் பொங்குனாலும்
ஏ... காட்டுவழி போற சனம் எம்மா கண்ட சனம் பாவமிங்கும்.

ஏ... இரக்கும் பறவைகளே எம்மா எட்டு லட்சம் காதவழி
நான் ஏழையா ஆனேம்மின்னு என்ன எனத்துலயும் சேக்கலையே

ஏ... பறக்கும் பறவைகளே எம்மா பத்து லட்சம் காதவழி
நான் பரதேசி ஆனேம்மின்னு என்ன பந்திலயும் சேக்கலையே. ■

• ஜி.சிவக்குமார்
ஓவியங்கள் : கொ.வடிவேல்



# கானல் வரி

'எம் மேல கோபமா?'

அலைகளின் மேல் தாழப்பறந்து விழுந்து, பரவும் அலைகளின் இரைச்சலில் விலகிப் பின்னும் பறந்து சென்ற காகமொன்று ஏதோ ஒரு சிவப்பு நிறப் பொருளை அலகுகளில் கவ்வி வந்தது. ஈரமணலில் அமர்ந்து பரவும் அலைகளுக்கு விலகி அலகுகளால் குத்தியது. சுற்றுமுற்றும் ஓரப் பார்வையை வீசிப் புரட்டிப் பார்த்தது. சில வினாடிகள் தயங்கி க்ரா க்ரா எனப் பறந்தது. பழைய எல்லைகளைத் தாண்டி வந்த அலையொன்று அந்தப் பொருளையும் நனைத்து உறிஞ்சியபடி உள்நகர்ந்தது.

'நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லலையே?'

'ம்.'

'எம் மேல கோபமா?'

விழிகளில் நீர் ததும்பக் குற்ற உணர்ச்சியுடன் நிற்கும் குழந்தை போலக் கேட்டாள்.

பதில் பேசமுடியாமல் அவள் முகத்தையே பார்த்துக்

கொண்டிருந்தான்.

எல்லாம் முடிந்தது. திரை விலகியபின் கற்பூர ஒளியில் ஜ்வலிக்கும் புன்னகை போன்ற சிலிர்ப்பை உண்டாக்கும் இந்த அழகும் குழந்தை உள்ளமும் இனி நிரந்தரமாகவே பிரியப் போகின்றன.

‘ஏதாவது பேசுங்க.உங்க வேதனை புரியாம இல்ல.திட்டியாவது தீத்திருங்க ப்ளீஸ். இப்படி அமைதியா இருக்கறதப் பாத்தாப் பயமாயிருக்கு. உங்க மனச எரிய விட்டுட்டு நான் நல்லாவே வாழ மாட்டேன்.’

முதுகு குலுங்க தலை கவிழ்ந்து அழுபவளைப் பார்க்கையில் பலமெல்லாம் வடிந்து விட்டதைப் போல் உணர்ந்தான். என்ன செய்ய... பழைய ஜானுவாயிருந்தால் ஒரு மாலையைப் போல் எடுத்துக் கண்களைத் துடைத்திருக்கலாம். ஆனால் இன்னும் ஒரு மாதத்தில் ஜானகி ராகவனாகப் போகிறவளை எந்த உரிமையில் தொடுவது?

‘ஜானகி.’

அவள் இன்னும் விசும்பிக் கொண்டிருந்தாள்.

‘ஜானகி இங்க பாரு...’

நிமிர்ந்தவளின் கண்களின் பளபளப்பு ஈரத்தால் இன்னும் அதிகமாகி விட்டிருந்தது. உணர்வுகளின் கரையை உடைத்து விடும் அவளது பார்வையைத் தாங்க முடியாமல் வேறு பக்கம் திரும்பினான்.

‘என்னம்மா இது சின்னக்குழந்த மாதிரி. சத்யமாச் சொல்றேன். எனக்குக் கொஞ்சம் கூட கோபமோ வருத்தமோ இல்ல. உண்மையிலே சந்தோஷமாக் கூட இருக்கு. விடிவே இல்லாத என்னோட வாழ்க்கையில உன்னையும் சேர்த்துக் கஷ்டப்படுத்தப் போறேனோன்னு என் மனசில உறுத்திக்கிட்டிருந்த முள் இப்போ விழுந்துருச்சு.’

சிறிது நேரம் உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் பேசமுடியாமல் திணறினான்.

‘நீ நல்லாயிருக்கணும். உன்னோட நல்ல மனசுக்கு நீ நிச்சயம் நல்லாயிருப்ப. என்னைப் பத்தி கவலைப்படாத. நாம பழகினத ஒரு இனிமையான கனவுன்னு நினைச்சுக்கிறேன். மறுபடியும் சொல்றேன். எனக்குக் கோபமோ வருத்தமோ இல்ல. காதல்ங்கறது விருப்பமானத எப்படியாவது அடையறது இல்ல. நேசிக்கறவங் களுக்கு எந்தத் துன்பமும் வராம நடந்துக்கறது தான்.’

சிறிது நேரம் அலைகளின் இரைச்சல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

‘நான் கிளம்பட்டுமா?’

வந்து விட்டது, நேற்று வரை இவன் கற்பனை கூடச் செய்து பார்த்திராத அந்த நிமிடம். அவர்கள் மேல் கவிழ்ந்திருந்த அமைதி வேதனை தருவதாக இருந்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவள் பழைய ஜானு இல்லை. இவனைக் கண்டதும் கண்களும் உதடுகளும் விரிய புன்னகைக்கும் ஜானு இல்லை. உயிரைக் கிறங்க வைக்கும் அந்தப் பார்வை அவள் கண்களுக்குள் எங்கோ ஆழத்தில் புதைந்து விட்டிருந்தது. இப்படி தொட முடியாத உயரத்தில் நெருங்க முடியாத தூரத்தில் போய்விட அவளால் எப்படி முடிந்தது? நாலைந்து வயது கூடின மாதிரி முதிர்ச்சியுடன் ரொம்பவும் அன்னியமானது மாதிரி இருந்தாள்.

என்றாலும் அவளும் இந்த நிமிடம் வேதனையில் துடிப்பதைப் பற்களுக்குக் கீழ் அழுந்திய உதடுகளும், ஈரத்தால் கனத்த இமைகளும், இலக்கின்றி வெறித்த பார்வைகளும் உணர்த்தின.

‘சரி நீ புறப்படு.’

‘கல்யாணத்துக்கு அவசியம் வரணும்’, என்றபோது அவள் உதடுகள் நடுங்கின.

‘நல்லா ஏமாந்தீங்களா, நான் இப்படி சொன்னா உங்க ரியாக்ஷன் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கத்தான் செஞ்சேன். ஏய் உங்களப் பிரிஞ்சு என்னால இருக்க முடியுமாம்மா?’ என்றபடி சிரிக்க மாட்டாளாவென்று ஒரு எண்ணம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது.

மெல்ல எழுந்து, கடை கடையாய் ஏறி இறங்கி ஜானகியின் பிறந்தநாளுக்குப் ப்ரஸன்ட் பண்ணின ஜானகிக்கு மிகவும் பிடித்த மெருன் வண்ணப் புடவையைச் சரி செய்தபடி மணலைத் தட்டிவிட்டு ‘வரட்டுமா?’ என்றாள். இவன் தலையசைத்ததும் நடக்க ஆரம்பித்தாள்.

பிரிவின் வேதனை பாரமாய் அழுத்த அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆயிரம் வருஷமானாலும் காத்திருப்பேன் என்றவள், ஒருமுறையாவது திரும்பிப் பார்ப்பாள் என்ற



இவனது நம்பிக்கையை மிதித்து மிதித்து நடந்து கொண்டிருந்தாள்.

எல்லாம் முடிந்தது. சாலையில் வரும்போது பார்த்து வீட்டில் மொட்டைமாடிக்கு போவதற்குள் கலைந்து விடுகிற வானவில் மாதிரி எல்லாம் கலைந்துவிட்டது. இனி ஜானகி இல்லை. ஜானகி ராகவன். இவனை மையமாகக் கொண்டு சூன்யவட்டமொன்று பரவத் தொடங்கியது.

கல்யாணத்துக்கு வரவேண்டுமாம். போக வேண்டுமா? அந்த முகம் தெரியாத ராகவனைப் பார்க்கவாவது அவசியம் போகத்தான் வேண்டும்.

வழியும் வியர்வையைக் கைக்குட்டையால் ஒத்திக்கொண்டு பட்டுப்புடவையும் மாலையு மாய்த் தன் மேல் விழும் அவளின் பார்வையைப் பரிச்சயமில்லாததுபோல் விலக்கிக்கொண்டு விடலாம். அல்லது கணவனிடம் நண்ப னென்றோ, தெரிந்தவனென்றோ அறிமுகப் படுத்தலாம். தன்னால் தவிர்க்கவே முடியாத அந்தக் காட்சி தந்த வலியும் வேதனையும் அவன் உயிரை இறுக்கியது.

எப்படி தன்னால் அவ்வளவு சுலபமாகச் சொல்ல முடிந்தது? இனிமையான கனவென்று நினைத்துக் கொள்கிறேனென்று. அவ்வளவு சுலபமா அது? இப்போதும்கூட கடலின் இரைச்சலும் காற்றின் குளிரும் இல்லையென்றால் சற்றுமுன் நடந்ததெல்லாம் ஒரு கெட்ட கனவென்றுதான் நினைத்திருப்பான்.

ஒரு பெருமுச்சு அனலாக வழிந்தது. தண்ணீரில் நிற்கவேண்டும் போல் இருந்தது. அப்படியே நடந்து சென்று காலடியில் அலைகள் புரள நின்றான். தண்ணீரின் விஸ்வருபம் கண்களை அசத்தியது. அடிவானமும் கடலும் உரசுமிடத்தில் ஒரு கப்பல் நின்றிருந்தது. நீலவானின் பின்னணியில் ஒரு ஒற்றைப்பறவை பறந்து கொண்டிருந்தது. திடீரென ஒரு பெரிய அலை அடித்துத் தடுமாற வைத்தது. தொடைகளி லெல்லாம் பேண்ட் நனைந்து ஒட்டிக் கொண்டது. மண் அரித்தபடி திரும்பியபோது காலடியில் பூமி நழுவியது.

மீண்டும் ஒரு அலை ஆவேசத்தோடு கரைக்கு வந்து நுரை கக்கித் திரும்பும் நிகழ்ச்சி எத்தனை நூற்றாண்டுகளாய் அலுப்பின்றி நடக்கிறது.

தன்னுடைய வாழ்க்கை ஏன் இப்படி ஒரு சமுத்திரமாகிவிட்டது? போராட்ட அலைகள் ஓயவே ஓயாதா? ரிடையரான அப்பா, பொறுப்பில்லாத தம்பி, கல்யாணத்திற்குக் காத்திருக்கும் தங்கை என வாழ்க்கை ஏன் இப்படி என் மேல் பாரமாக அழுத்தி விழிபிதுங்கி மூச்சு திணறச் செய்கிறது? வாழ்வின் மிகப் பெரிய சந்தோஷம் என நம்பியிருந்த ஜானகியும் இனி இல்லை. இரண்டாவது முறையாக அம்மா இறந்தது போல் உணர்ந்தான்.

காலில் ஏதோ உரசியது. மிகச்சிறிய ப்ளாஸ்டிக் டப்பா. சிவப்பு நிறத்தில் சிதைந்து அலைகளின் அசைவில் மெல்ல அசைந்தபடி கிடந்தது. காகம்,ஈரமணலில் விட்டுவிட்டுப் போனது இதைத்தானா? அந்த ப்ளாஸ்டிக் டப்பாவிற்கும் தனக்கும் அதிக வித்தியாச மில்லை என்று அவனுக்குத் தோன்றிய நேரத்தில்...

மணலில் கால்கள் புதைய நடந்து கொண்டிருந்த ஜானகி திரும்பிப் பார்த்தாள். அலைகளுக்கு நடுவே சிறகொடிந்த பறவையைப் போல் சிவா நின்று கொண்டிருந்தது தாளமுடியாத வேதனையை ஏற்படுத்தியது. அடிவயிற்றிலிருந்து கிளம்பிய அழுகையை அடக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

சிவா ஏன் இப்படி இருக்க,ரெண்டு வருஷமா காதலிச்சுட்டு இன்னொருத்தர கல்யாணம் பண்ணிக்கப்போறேன்னு சொன்னதும் எப்படி உன்னால சாதாரணமா, சரி நல்லாருன்னு வழியனுப்ப முடியுது? 'என்னை விட்டுட்டு இன்னொருத்தன் கூட வாழ்ந்திருவியா பார்க்கறேன்டி' என்று ஏன் கோபப்படல? 'வா எங்கயாவது போய்க் கல்யாணம் பண்ணிக்கலாம்'னு கூட ஏன் சொல்ல முடியல?

அத்தனை அற்புதமான பிம்பங்களும் உதிர்ந்து அற்பமான புழுவாக மாற அம்மாவால் எப்படி முடிந்தது? நல்ல நண்பனாகப் பழகி வந்த அப்பாவால் எப்படி சராசரி அப்பாவாக மாற முடிந்தது?

'எல்லாம் உங்களால வந்தது. பொட்டப் புள்ளையா லட்சணமா வளக்காம ஒரேடியா செல்லம் குடுத்தீங்க. இப்ப அது நம்ம தலையில இடியா எறங்கியிருக்கு. ஏன்டி ரெண்டு வருஷ பழக்கம்னு சொல்றியே.. வெறும் வாய் வார்த்தைதானா இல்ல... அய்யோ என் வயிறே கலங்குதே', என்று அம்மாவும்,

'அந்தக் காலத்துல பெரிய மனுஷியானதும் சட்டுப்புட்டுன்னு கல்யாணம் பண்ணி வச்சவனெல்லாம் பைத்தியக்காரனா? இன்னைக் கெல்லாம் டிவி சினிமான்னு ஒடம்பு மலர்றதுக்கு முன்னாலயே மனசு மலர்ந்துருது. காலகாலத்துல கல்யாணம் பண்ணி வைக்காம படிக்க வைக்கிறேன் பாட வைக்கிறேன்னு நீங்க அடிச்ச கூத்துல அவ தானா ஆம்பளயத் தேடிக்கிட்டா', என்று அத்தையும் இரைத்த நரகலைச் சொன்னால் உன்னால் தாங்க முடியுமா?

நொறுங்கிப் போயிருக்கிற உன்னோட வேதனை எனக்குப் புரியுது சிவா. ஆனா, அன்பால, அதிகாரத்தால நுட்பமான விலங்குகளால குடும்பத்தோட பிணைக்கப் பட்டிருக்கிற பெண்ணோட அவஸ்தைகள் உனக்குப் புரியாது.

சிவா, கவிதையிலோ கதையிலோ உன்னோட சோகத்த இறக்கி வச்சிட்டு இன்னொருத்தியோட நீ நிம்மதியா வாழப் போற. நான் இப்படியே காலகாலத்துக்கும் உன்னோட நினைவுகளைச் சுமந்துகிட்டு நடைப்பிணமா வாழப் போறேன்.

ப்ரியமான அப்பா, அம்மா எல்லாத்துக்கும் மேல நீ.. எல்லாரையும் இழந்துட்டு அனாதையா நிற்கிறேனே அய்யோ!

கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வழிந்தது. இல்ல முடியாது. என்னால நீ இல்லாம வாழ முடியாதுன்னு ஓடிப் போய் அவன் மார்பில் சாய்ந்துகொண்டு கதற வேண்டும் என்று தோன்றியபோது அவள் செல்ல வேண்டிய பேருந்து நிறுத்தத்தில் வந்து நின்றது. ■

• கவிஜி
ஓவியம்: அழ. ரஜினிகாந்தன்



# கிழிக்கவே முடியாத தேதி

எல்லாரும் அமைதியாக இருந்தார்கள். ஒரு முகம் கூட எனக்குத் தெரிந்த முகமாக இல்லை. யார்யாரோ வருகிறார்கள். வெறிக்கப் பார்க்கிறார்கள். நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. நான் கவிதாவைப் பார்த்தேன்..... போலாமா என்பது போல. அவளும் பார்த்தாள்.... இன்னும் கொஞ்ச நேரம் என்பதாக. வெளியே பாடை கட்டிக்கொண்டு இருந்தார்கள்.

"மரணம் நிகழ்ந்த கொஞ்ச நேரத்திலேயே எப்படித்தான் கண்ணீர் அஞ்சலி போஸ்டர் அடிக்கிறார்களோ......!?" எதிரே ஆங்காங்கே கண்ணீர் அஞ்சலி முறைத்துக் கொண்டிருந்தது.

பொக்கை வாய் திகைப்போடு ஒரு புகைப்படம். அதன் கீழ் "மான்விழி" சுடர் விட்ட விளக்குடன். தோற்றம் என்ற இடத்தில் 1930 என்றும்.... மறைவு என்ற இடத்தில் இன்றைய தேதியும் இருந்தது. அந்த வீடு தார்பாயினாலும்... ஓடுகளாலும் வேயப்பட்ட அட்டைப்பெட்டிப் பிரிவுகள் போல இருந்தது. உள்ளே ஒரு குண்டுப்பெண் மான்விழியின் முகத்தில் ஈ ஓட்டிக் கொண்டிருந்தாள்.

யாரோ ஒருவன் அலைபேசியில் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தான். எனக்கு சத்தமாகவே கேட்டது.

"சார் பாட்டி செத்துடுச்சு சார்... டூ அவர் பெர்மிஸ்ஸின்......... வந்தரென் சார்..."

நான் அவனை உற்றுப்பார்த்தேன். அவன் யாரையுமே பார்க்காதது போல இருந்தான். பிளாஸ்டிக் டம்ளரில் டீ கொடுத்துக்கொண்டே சென்றாள் ஓர் உயரமான பெண். மூலையில் அரசாங்க டிவி முகம் திருப்பி அமர்ந்திருந்தது. அவசரத்துக்கு ஒதுங்க வைத்திருக்கிறார்கள். தூசு படிந்த ஜன்னல் ஒன்று திறந்தே கிடந்தது.

யாரும் யாரிடமும் எதுவும் பேசிக் கொள்ள வில்லை. இழவு வீடு என்பதை மிக நுட்பமாக உணர்ந்தேன் என்று கூட கூறலாம். வெளியில் இருந்து உள் நுழைந்த பூ வாசம் பிணத்தைச் சுமக்க ஆரம்பித்திருந்தது.

நேரம் கடகடவென ஓடிக் கொண்டிருந்தது. கவிதா ஆழ்ந்த பார்வை ஒன்றை இரண்டு எலும்புகளோடு கொஞ்சம் சுருங்கிய தோல் கொண்டு போர்த்தி படுத்திருந்த மான்விழி மீது செலுத்திவிட்டு எழுந்தாள். நான் பின் தொடர்ந்தேன்.

"என்ன ஆபிஸ்ல இருந்து ஒருத்தரையும் காணோம்... உன் பிரெண்ட் மஞ்சுளாவோட பாட்டி தான...?" என்றேன்.... கியரை மாற்றிக் கொண்டே.

"அயயே இல்லைங்க.... இந்த பாட்டி பழக்கமெல்லாம் இல்ல... தினமும் இந்த வழியாப் போகும்போது கண்ணுல படும்... வாசலிலேயே தான் உக்காந்திருக்கும்... இன்னைக்குப் போகும்போது கண்ணீர் அஞ்சலில இருந்துச்சா... மனசு கேக்கல.... ரெண்டு வருசமாப் பாத்துருக்கேன்... அதான் வரணும்னு தோணுச்சு..." என்றவள் "சே.... செத்துப் போய்டுச்சு....." என்று முனங்கினாள்.

பட்டென்று ஏதோ எனக்குள் உடைந்தது. எனக்கு யாருக்கும் தெரியாமல் அழ வேண்டும் போல இருந்தது. நான் வண்டியை வேகமாய் முறுக்கினேன்...

இன்று கிழிக்கவே முடியாத தேதி என்று அந்த வீட்டில் படபடத்துக் கொண்டிருந்த காலண்டர் கூறியது போல இருந்தது. ■

• சத்யா

# ‘என் மகள் சைரன் காரில்தான் செல்வாள்’



சாதனைகள் பல புரிந்தோரின் சரித்திரம்தான் வரலாற்றில் பதிவாகிறது. சாதித்தோரை விடச் சங்கடங்கள் பல சந்தித்த சாமானியர்கள் ஏராளம் உண்டு நம்மிடையே. அச்சாமானியர்களின் வாழ்வைப் பதிவு செய்ய முயல்கிறது இப்பகுதி.

**பெயர் :** ‘ஜெயபால்’

**தற்போதைய தொழில் :** ‘ஆட்டோ ஓட்டுநர்’

**பிறந்த ஊர் :** ‘அல்லித்துறை’

**பெற்றோர் :** ‘அப்பா எனது எட்டு வயதில் இறந்துவிட்டார். அம்மா காய்கறி வியாபாரம் செய்து குடும்பத்தைக் காப்பாற்றினார். குடும்பத்தில் எட்டாவது பிள்ளை.’

**கல்வி :** ‘பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. குடும்பச் சூழ்நிலையால் கல்வி கானல் நீரானது.’

**தொழில் வளர்ச்சி :** ‘பத்தாவது முடித்தபிறகு பத்து மாதங்கள் வல்கனைசிங் கடையில் வேலை செய்தேன். வெறும் 750 ரூபாய் முதலீட்டில் அடுத்த வருடமே சொந்தக்கடை தொடங்கினேன். ஆட்டோ ஓட்டக் கற்று தற்போது ஆட்டோ ஓட்டுநராய்ப் பணிபுரிகிறேன்.’

**திருமண வாழ்க்கை :** ‘பன்னிரண்டு வருடங்கள். படித்த மனைவி. இரு பெண் குழந்தைகள். அன்பான குடும்பம்.’

**சந்தித்த சங்கடங்கள் :** ‘பட்டியலிட முடியாத அளவு நிறைய. குடும்பப் பொறுப்பு முழுவதும் சுமந்தேன். சகோதர சகோதரிகளின் பணத் தேவைக்காக ஓயாமல் ஆட்டோ ஓட்டினேன். தினம்தினம் ஏதாவது ஒரு பிரச்சனை வரும். பணப் பிரச்சனை, சொந்தக்காரங்க பிரச்சனை, சொந்தப் பிரச்சனைன்னு ஏராளமான பிரச்சனைகளைச் சமாளிச்சிட்டிருக்கேன். எதன்னு சொல்ல?’

**சுகமாய் உணர்ந்தது :** ‘எத்தனை கஷ்டங்கள் பட்டாலும் சகோதரிகளின் பிள்ளைகள் எட்டு பேரைப் பட்டதாரியாக்கிய பெருமை சுகமாய் உணரவைத்தது.’

**மறக்க முடியாத கேள்வி :** ‘என் மனைவியைப் பெண் பார்க்கச் சென்றபோது அவரது தாத்தா கேட்ட ஆறு கேள்விகள். அதற்கெல்லாம் பதில் சொன்னதால்தான் திருமணம் செய்து வைத்தார்.’

**மறக்க முடியாத பதில் :** ‘திருமண சமயத்தில் என் மனைவியிடம் என்னைப் பிடித்திருக்கிறதா என்று கேட்டேன். ‘உங்க எதார்த்தப் பேச்சு ரொம்பப் பிடிச்சிருக்கு. கடைசி வரை உங்க கூடவே இருக்கணும்னு தோணுது’ என்றாள். அந்தப் பதில்தான் என்னை இன்னமும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.’

**பணம் :** ‘பிழைப்பு நடத்த கட்டாயம் பணம் தேவைதான். ஆனா என் அனுபவத்தில சொன்னால் அது மட்டும் நம்மைக் காப்பாற்றி விடாது. நன்மதிப்பும் நல்லொழுக்கமும்தான் கடைசிவரை துணையாய் இருக்கும்.’

**அரசியல் :** ‘வேண்டாத வேலை.’

**பொழுதுபோக்கு :** ‘வீட்டில் பிள்ளைகளுடன் விளையாடுவது.’

**மறக்கமுடியாதது :** ‘என் உழைப்பில் நான் நன்றாக இருக்கும்போது பார்க்க என் அம்மா இல்லையே.’

**இலட்சியம் :** ‘மகளைக் கலெக்டராக்குவேன். என் மகள் சைரன் காரில்தான் செல்வாள். கட்டாயம் அதை நான் பார்ப்பேன்.’

**பிடித்த வாசகம் :** ‘மீண்டும் கிடைக்காத சிம்மாசனம் தாயின் மடி.’ ■

• ஸ்டெல்லா தமிழரசி

# மீன்கள் உறங்கும் குளம்

## - நூல் வெளியீட்டு நிகழ்ச்சி




இயக்குநரும் வசனகர்த்தாவுமான பிருந்தாசாரதியின் 'மீன்கள் உறங்கும் குளம்' என்ற ஹைக்கூ கவிதை நூல் 25.10.17 அன்று சண்டக்கோழி 2 படப்பிடிப்பு இடைவேளையில் வெளியிடப்பட்டது. நடிகர் விஷால் நூலை வெளியிட இயக்குநர் என். லிங்குசாமி பெற்றுக்கொண்டார்.

புகழ்பெற்ற எழுத்தாளர்களின் வாழ்த்துக்களிலும், அணிந்துரையிலும், பாராட்டுக்களிலும் இக்குளம் பிறந்திருக்கிறது.

இந்நூலைத் தமிழ் ஹைக்கூ நூற்றாண்டு வெளியீடாக டிஸ்கவரி புக் பேலஸ் வெளியிட்டுள்ளது. இந்நிகழ்வில் கவிஞர்கள் பிறைசூடன், அறிவுமதி, பதிப்பாளர் மு.வேடியப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர் .

இந்தப் புத்தகத்தினை ஒரு வெளியீட்டு விழாவோ விமர்சனக் கூட்டமோ இல்லாமல் படப்பிடிப்பின் இடைவேளையில் மிக நேர்த்தியாக வித்தியாசமான முறையில் வெளியீடு செய்த பிருந்தாசாரதி அவர்கள் கவிதைகளில் மட்டும் அல்ல... ஒவ்வொரு செயலிலும் தன் தனித்துவத்தைக் காட்டிக்கொண்டே இருக்கும் மிகச் சிறந்த நபராகவும் இருக்கிறார்.

### ஹைக்கூ காதலன் பிருந்தாசாரதி

ஹைக்கூவை மிக அதிகமாய்க் காதலிக்கும் மிகச்சிறந்த எழுத்தாளர் பிருந்தாசாரதி. இவர் இயற்பெயர் நா.சுப்பிரமணியன். 1965இல் கும்பகோணத்தில் பிறந்தவர். சுப.நாராயணன், ருக்மணியின் ஆசை மகன். இவருடைய பூர்வீகம் மதுரை மாட்டம் மேலூரின் அருகில் உள்ள சண்முகநாதபுரம்.

அவதாரம், தேவதை, இயக்குநர் லிங்குசாமி யின் ஆனந்தம், பையா, வேட்டை, அஞ்சான் போன்ற பிரபல படங்களின் உரையாடல்களை எழுதியுள்ளார்.

### உரையாடல் எழுதக் கூடியவர் எப்படி ஹைக்கூ எழுதுவார்?

எழுத்துக்களைத் தவிர வேறு எதையுமே அதிகம் நேசிக்காத ஒருவர்தான் பிருந்தாசாரதி. இளமை காலத்தில் அவர் படித்துச் சிலாகித்த ஹைக்கூவும் அதன் தன்மையுமே பிருந்தா

அவர்கள் அதிகம் நேசிக்கவும் எழுதவும் தூண்டியது. அப்படி அவர் அதிகம் நேசித்த சில ஹைக்கூக்கள்..

"இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்"

– **அமுத பாரதி**

'அழகிய பூக்களுக்கு இடையே
ஒரு மரங்கொத்தி தேடுகிறது
செத்த மரத்தை'

– **ஜோசோ**

**பிருந்தாசாரதியின் புத்தகங்கள்**

அவரின் முதல் புத்தகம் நடைவண்டி 1992இல் கவிதை நூலாக வெளிவந்தது. மிக அதிக வருடம் கழித்தும் சமீப காலத்தில் வண்ணதாசன் அவர்கள் அந்நூலுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பி இருக்கிறார். அத்தோடு ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடம், பறவையின் நிழல், எண்ணும் எழுத்தும் போன்ற புத்தகங்களின் பெயர் சொன்னதுமே பிருந்தா அவர்கள் மக்களின் நினைவுக்கு வந்துவிடுவார்.

**தற்போதைய வெளியீடு**

மூன்றே வரிகளில் வாசர்களின் மனதில் மிக ஆழமாக ஊடுருவல் செய்யும் ஹைக்கூ வித்தைக்காரர் பிருந்தாசாரதியின் நவீன வெளியீடுதான் மீன்கள் உறங்கும் குளம்.

- மீன்கள் உறங்கும் குளம்
  விண்மீன்களை ரசித்தபடி
  தூண்டில்காரன்

- என்ன பசியோ
  வாயசைத்துக்கொண்டே இருக்கிறது
  அருங்காட்சியக எலும்புக்கூடு

இப்படி ரசிக்கத் தூண்டும் ஹைக்கூக்களை எழுதி கவிஞர் வண்ணதாசன் அவர்களின் அணிந்துரை பெற்று கவிஞர் அறிவுமதி மற்றும் கவிஞர் பழநி பாரதி அவர்களின் வாழ்த்துரைகள் பெற்று டிஸ்கவரி புக் பேலஸ் ஹைக்கூ நூற்றாண்டிற்காக வெளியீடு செய்த சிறப்புநூல்தான் இந்த மீன்கள் உறங்கும் குளம்.



• தினேஷ்



# தமிழ் இலக்கிய நிகழ்வுத் துளிகள் 2017



*திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள சுந்தரனார் அறக்கட்டளையின் சார்பாக ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள மனோன்மணியம் சுந்தரனார் விருது வழங்கப்படுகிறது. 2016 - 2017ஆம் ஆண்டிற்கான விருது எழுத்தாளர் கி.ராஜநாராயணனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

*கவிஞர் ஆத்மாநாம் அறக்கட்டளையின் சார்பில் சிறந்த கவிஞருக்கான விருது வழங்கப்படுகிறது. 'பெருங்கடல் போடுகிறேன்' எனும் கவிதை தொகுப்புக்காகக் கவிஞர் அனார் மற்றும் 'தாகங்கொண்ட மீனொன்று : ஜலாலுத்தின் ரூமி கவிதை' எனும் மொழிபெயர்ப்பு நூலுக்காகக் கவிஞர் என்.சத்தியமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

*கவிஞர் புலமைப்பித்தனுக்குச் சிற்பி அறக்கட்டளையின் 22ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதும் கவிஞர் ஜே.மஞ்சுளாதேவிக்கு இலக்கியப் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரியில் உள்ள கருவடிக்குப்பம் மாந்தோப்பினைப் 'பாரதி குயில்தோப்பு' என்று புதுச்சேரி அரசு பெயரிட்டுள்ளது. பாரதியார் இந்த மாந்தோப்புக்குத் தினமும் சென்று குயில்பாட்டு கவிதைகள் எழுதினார்.

*'கசாக்கின் இதிகாசம்' என்ற மலையாள நூல் மொழிபெயர்ப்புக்காக யூமாவாசுகிக்குச் சாகித்திய அகாதமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

*சி.பா.ஆதித்தனார் சிறந்த நூலிற்கான இலக்கியப் பரிசு 'இலக்கியத்தில் மேலாண்மை' என்ற நூலிற்காக வெ.இறையன்புவிற்கும், மூத்த தமிழறிஞர் விருது கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கும் தரப்பட்டுள்ளது.

*கதைசொல்லி இதழின் பொறுப்பாசிரியரும் எழுத்தாளருமான கழனியூரன் 27.06.2017அன்று காலமானார்.

*கவிக்கோ என்று அழைக்கப்பட்ட கவிஞர் அப்துல் ரகுமான் 02.06.2017அன்று காலமானார்.

*தமிழ் தொடர்பான எளிய நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் நடத்திய மா.நன்னன் 07.11.2017அன்று காலமானார்.

*'மின்சாரப்பூ' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலிற்காக சாகித்திய அகாதமி விருதைப் பெற்ற எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி 30.10.2017அன்று காலமானார். ■

# வாழி!

ஊற்றெடுத்து உங்கள்முன் பிரவாகமாய்ப் பொங்கிஓட விழைகிறது படைப்பு ‘தகவு’ இதழ். வாழ்க்கைக்கு ருசி கூட்டி உணர்வு ஊட்டி அறிவடையச் செய்வதில் இலக்கியத்திற்கு எப்போதும் பெரும்பங்குண்டு. மனத்தில் மலர்ச்சியோ, தளர்ச்சியோ உற்ற தோழமையாய்த் தோள் கொடுத்திடும் இலக்கியம். என் இலக்கியம்... என் மொழி.. என் இனம் என விரியும் வானத்தில்தான் நம்மைக் கண்டடைகிறோம்.

இதழ்கள் காலங்காலமாய்ப் படைப்பாளர், வாசகரிடையே பாலமாய் இருந்து இலக்கியத்தை வளர்த்து வந்துள்ளன. வரலாற்றைச் சுட்டிக் காட்டுவது மட்டுமல்ல.. கட்டமைப்பதிலும் இதழ்களுக்குப் பங்குண்டு. தீவிர இலக்கிய வாசிப்புப் பரவலாக்கம், கருத்துச் சுதந்திரத்திற்கான வேட்கை, எம்மட்டத்திலும் உறைந்து கிடக்கும் போராட்ட உணர்வு, பல தளங்களிலும் வெளிப்படும் அதிகாரச் செயல்பாடு, அதிகமான தனிமனித மன அழுத்தங்கள் எனச் சமுதாயம் இலக்கியத் தேவையை முன்னிறுத்தி நம் முன் விரிந்துகிடக்கிறது. இலக்கியப் படைப்புகளாய் உள் நுழையும் வாசிப்பு சிந்தையைத் தட்டி எழுப்பும், கேள்வி உணர்வுக்கு விழிப்பூட்டும், தெளிவு நோக்கிய பயணத்திற்கு அழைத்துச் செல்லும்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் சாத்தியமாகியிருக்கும் மின்னிதழ் வடிவத்தில் உங்கள் கருத்துக்கு விருந்தளிக்கத் தொடங்குகிறது படைப்பு ‘தகவு’. சிறுகதைகள், கட்டுரைகள், தொடர்கள், கவிதைகள், நேர்காணல் என்று பலவிதப் பகுதிகளுடன் மாதந்தோறும் இதழ் www.padaippu.com என்ற முகவரியில் வெளிவரும். அடுத்த இதழ் முதல் வாசகர் கடிதமும் உண்டு.

தகவின் முதல் இதழை வாசித்திருக்கும் உங்களது எண்ணங்கள் எதுவானாலும் பகிருங்கள்.

படைப்புடன் என்றும் இணைந்திருக்க அன்புடன் அழைக்கிறோம். ■



# படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

























